Koviloor Digital Library



# அருள் வாக்கு

ACC. NO: 2340
R. 65

மணிவாசகர் நூலகம்
சிதம்பரம்

செ.வைத்தியலிங்கம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

6-1

# அருள் வாக்கு

2340

பேராசிரியர்

செ. வைத்தியலிங்கம், எம்.ஏ., எம்.லிட்.
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

கோவிலூர் ஆதீனம்
Acc No: 2340
R65
கோவிலூர்-630 307

மணிவாசகர் நூலகம்

12 பி, மேல சன்னதி : : சிதம்பரம்–608 001

1981 — 4.00

Koviloor Digital Library

முதல் பதிப்பு, 1981 செப்டம்பர் 15.

பாரதி நூற்றுண்டு விழா வெளியீடு

உரிமை : செறிவு

பதிப்பாசிரியர் :

ச. மெய்யப்பன் எம். ஏ.

விலை ரூ. *4-00*

கிடைக்குமிடம் :

மணிவாசகர் நூலகம்

89, லிங்கிச் செட்டித் தெரு, சென்னை—1

258, மேல மாசி வீதி - மதுரை—1

---

அச்சிட்டோர் ; கற்பகம் அச்சகம், சென்னை-600 002

Koviloor Digital Library
KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: -436846)

6-1

# முன்னுரை

'என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே' —திருமந்திரம்

உலகத்தில் பக்திச் சிறப்புடன் கூடிய பாங்கான மொழி தமிழ் மொழி. அம்மொழி வழங்கும் இந்த நல்ல நாட்டிலே பண்டு தொட்டுச் சான்றோர்கள் வாழையடி வாழையாக அருள்கனிந்த நெஞ்சினராய்த் தோன்றி வருகின்றனர்; பயன் கருதாமல் தொண்டாற்றி வருகின்றனர். அவர்களுள் சிலர் தமிழிலக்கியச் சோலையை வளமாக்கும் வகையிலே பாசுரங்களைப் பாடியுள்ளனர். அந்தப் பத்திப் பாசுரங்கள் பலவும் நாட்டு மக்களின் நல்வாழ்க்கைக்கு ஒளிவிளக்கங்களாக - வழிகாட்டிகளாக-விளங்குகின்றன. அத்தகைய அருள்விளக்கங்கள் மக்களிடையே பரவ வேண்டுமென்று இக்காலத்திலும் பலர் நினைக்கின்றனர். இந்த நிலையில் தாமும் தம்மாலான வகையில் இலக்கியத் தொண்டாகவும் மக்கள் தொண்டாகவும் மதித்து வானொலி நிலையத்தினர் பாசுரங்களை ஒலிபரப்புகின்றனர்; மேலும், 'அருள்வாக்கு' என்றும் 'சிந்தனையமுதம்' என்றும் தலைப்பிட்டுப் பலரைச் சிந்திக்கச் செய்து வானொலியில் பேச வைக்கின்றனர். தமிழ்ப் பெருமக்களை ஆர்வமுடன் கேட்க வழி கோலுகின்றனர். அவர்களுடைய நல்ல குறிப்பினையேற்று வானொலிப் பேச்சு வாயிலாக அருளாளர்களின் உட்கிடையை ஓரளவு வெளிப்படுத்த முயன்றேன். வானொலி வாயிலாகப் பயன் கொள்ளும் பல்லோருள் யானும் ஒருவன் என்ற நிலையில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்; திருச்சி - புதுவை அனைத்

Koviloor Digital Library



திந்திய வானொலி நிலையத்தினர் என் பேச்சுக்களை நூல் வடிவில் ஆக்கிக் கொள்ள இசைவளித்தமை குறித்து அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றியினைப் புலப் படுத்திக் கொள்கிறேன்.

அருட் சான்றோர்கள் தொடர்பாக யான் கொண்ட சில சிந்தனைகளை - வானொலிப் பேச்சுக்களை - நூல் வடிவில் கொணர நல்லுள்ளங் கொண்டவர் என் இனிய அன்பர் - பதிப்புக்கலைச் செல்வர் - திரு. ச. மெய்யப்பனார். அவர்களுடன் தொடர்பு கொண்ட மணிவாசகர் நூலகம், சிறுவர் முதல் பெரியோர் வரையில் படித்துப் பயன் கொள்ளும் பல நூல்களை வெளியிட்டுள்ளது. அரிய பல நூல்களை மக்களுக்கு வழங்கிப் பதிப்புத் துறையிலே பரிசுகள் பெற்ற அந்த நூலகம் இப்போது என்னையும் ஊக்குவித்து ஆட்கொள்கிறது.

என் வானொலிப் பேச்சுக்களை 'அருள்வாக்கு' என்ற திருப்பெயரில் நூலாக வெளியிடுகிறது மணிவாசகர் நூலகம். இதனை யான் பெற்ற நற்பேறாகப் போற்று கிறேன்.

தமிழ்கூறு நல்லுலகம் இந்தச் சிறுநூலை ஏற்றுப் பயன்கொள்ளுமென்று நம்புகின்றேன்; அதற்கெனத் தமிழ்த் தெய்வமாம் திருமுருகன் இன்னருளைச் சிந்தித்து வந்தித்து நிற்கிறேன். வாழிய அருளாளர்கள் திருவாக்கு! வளர்க மணிவாசகர் நூலகம்!

அன்பன்,

**செ வைத்தியலிங்கன்**

Koviloor Digital Library

6-1

# பதிப்புரை

ச. மெய்யப்பன், எம். ஏ.
(தமிழ் விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக்கழகம்)

'எங்கள் பாரதநாடு பாருக்குள்ளே நல்ல நாடு; சாரத்திலே மிகுசாத்திரங்கண்டு தருவதிலே உயர்நாடு' என்பது மகாகவி பாரதியாரின் கணிப்பு. உலகத்தில் இந்திய நாட்டில் தோன்றிய அளவிற்குத் தத்துவ ஞானிகள் வேறு எங்கும் தோன்றியதில்லை. இந்தியத் தத்துவங்களுக்கு - அறச்சிந்தனைகளுக்குத் தனிச் சிறப்பும் தனிப்பெருமையும் உண்டு.

மனித சமுதாயமாக வாழத் தொடங்கிய காலம் முதல், அறவுரைகள் தோன்றி விட்டன. 'இன்னது நினைக, இன்னது சொல்லுக, இன்னது செய்க' என்று ஒருவர் மற்றொருவர்க்கு உணர்த்தும் நெறிகளே அறங்கள் எனப்படும். தொல்காப்பியர், பொருண்மொழிக் காஞ்சி, வாயுரை வாழ்த்து, செவியறிவுறுஉ எனப் பல்வேறு முறைகளில் அற நெறிகளை எடுத்துச் சொல்லலாம் என இலக்கணம் வகுப்பர். அகமும் புறமும் பாடுகின்ற சங்கப் பாடல்களும் அறநெறிகளை எடுத்தியம் பியுள்ளன. கி. மு. முதல் நூற்றுண்டில் திருவள்ளுவர் ஈரடி எழுசீரால் ஒரு பெரு அறநூலை இயற்றினுர். அவரைப் பின்பற்றி நாலடி, நான்மணி என எண்ணற்ற அறநூல்கள் எழுந்தன. இன்றும் அறநூல் படைப் பாரும் படிப்பாரும் ஆய்வாரும் பலராவர். அறநெறி இல்லையேல், வாழ்வுநெறி செந்நெறியாகாது.

Koviloor Digital Library



இந்திய வானொலி நிலயத்தில் தமிழக வானொலி நிலயத்தார் அருள்வாக்கு என்றும், சிந்தனை அமுதம் என்றும், நெறிவிளக்கம் என்றும், பொழுது புலர் நேரத்தில் நற்கருத்துக்களை ஒலிபரப்பி வருகின்றனர். திருச்சி வானொலியில் நெறி விளக்கமாகவும், புதுவை வானொலியில் சிந்தனை அமுதமாகவும் வழங்கப் பெற்ற பொன்னுரைகளே அருள்வாக்கு என்ற பெயரில் இந்நூலாக உருக்கொண்டுள்ளன.

இந்நூலினைப் படைத்தவர், பேராசிரியர் திரு. செ. வைத்தியலிங்கனார் ஆவார்கள். அவர்கள், தமிழகம் நன்கறிந்த செந்தமிழ்க் காவலர் டாக்டர் அ. சிதம்பர நாதனாரின் பாசத்திற்கு உரிய மாணவர்; என்னைப் போன்ற நூற்றுக்கணக்கான மாணவர்களின் போற்று தலுக்கு உரிய ஆசிரியர்; நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் நாவலர். தமிழகத்துக் கலைகள் உலகெங்கும் போற்றப்பட வேண்டும் என எண்ணியும் பேசியும் எழுதி யும் வருகின்ற ஆர்வலர். அவர்களின் பேச்சும் எழுத்தும் கட்டிபட்ட கரும்பினும் இனிப்பன.

திரு. வைத்தியலிங்கனார் புகழ்பெற்ற பல்கலைக் கழகத்தின் புகழ்மிக்க ஆசிரியர். தமிழ்ச் சான்றோர் பல்லோரிடம் பயின்ற நல்ல மாணவர். இன்று புகழ் பெற்று விளங்கும் ஆசிரியர்களுக்குப் பேராசிரியர். கலை களில் ஈடுபட்டு உழைக்கும் ஆசிரியர், இந்தக் கலை களுக்குத் தாயகமான இலக்கியத்தை உய்த்துணர்வதில் வல்லவர். உணர்ந்தவற்றை உணர்த்துவதிலும் வல்லவ ராக விளங்குகிறார். சங்க இலக்கியத்தில் எம். லிட். பட்டம் பெற்றவர். திருமுறைகளை பிஎச். டி. க்காக ஆராய்கிறார்கள்.

சான்றோர் நூல்களைப் பல்காலும் பயிலுகின்ற ஆசிரியர், சான்றோர் வாக்குகளை இந்நூலில் தெள்ளத்

Koviloor Digital Library



தெளிந்த தமிழில் விளக்கியுள்ளார். புத்தர் முதலாக அரவிந்தர் ஈருக வளர்ந்த மனிதகுல சிந்தனை வளத்தினை இந்நூலில் அறவியல் இழையோட தொகுத்தளித் துள்ளார்

திரு. வைத்தியலிங்கனுர் அவர்கள், நெறிவிளக்கத் திலும் சிந்தனை அமுதத்திலும் புத்தர், திருமூலர், திருநா வுக்கரசர், மணிவாசகர், இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர் ஆகியோர் உலகுக்கு வழங்கிய அறி வுரைகளை எளிய நடையில் வழங்கியுள்ளார்கள். அவ் வுரைகளின் தொகுப்பே இந்நூலாகும். இந் நூலில் வாழ் வியற் கருத்துக்களையும் வாழ்விற்கு வேண்டிய சமயப் பேருண்மைகளையும் தெளிவாகக் காணலாம். இவையா வும் மனிதனை நல்வழிப்படுத்துதற்கு உரியன. இப்பெரு மக்களின் விளக்கங்களோடு அறம் பாடிய பெருமக் களின் நல்லுரைகள் பலவும் இடையிடையே முத்து மாலையிடை பவளம்போல் இந்நூலில் ஒளிவிடுகின்றன. செம்மைநலம் அறிவிக்கின்ற இந்நூல், உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயில்கின்ற மாணவர் களுக்குக் கருத்துப் பேழையாகும். இந் நன்னூலினைத் தமிழகம் வரவேற்கும் என்ற நம்பிக்கையுடையேன். பதிப்புத் துறையில் வரலாறு பெற்ற மணிவாசகர் நூலகம், இதனை வெளியிடுதற்காக நன்றி கூறு கின்றேன்.

Koviloor Digital Library

# பொருளடக்கம்

Koviloor Digital Library

# அருள்வாக்கு

## பேரருட் சான்றோர்கள்

உலக அரங்கத்திலே அறிவியல் கண்டுபிடிப்புக் களாலும் பொருளாதாரப் பெருக்கத்தாலும் மேலை நாடு களும் கீழை நாடுகளும் போட்டியிட்டுக் கொண்டு தத்தம் முன்னேற்றத்தைக் காட்டிக் கொண்டே உலகச் சந்தையில் இடம் பிடித்து வருகின்றன பாரத நாடும் படிப்படியே முயன்று தன் முன்னேற்றத்தினைக் காட்டித்தான் வருகிறது; அம்முயற்சி பாராட்டற் குரியதே.

உலகியலடிப்படையில் ஏற்படுகின்ற இவ்வாருன அறிவியல் பொருளாதார முன்னேற்ற விரைவினுல் பல நாடுகள் மனநிறைவைப் பெற்றிருக்கின்றனவா என்று ஒரு கணம் சிந்தித்தால், பதில் எதிர்மறையில்தான் கூற வேண்டியுள்ளது; காரணம் என்ன?

வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொண்டே சென்று, இன்று நாகரிகத்தின் உச்சாணிக் கொம்பில் இருப்பதாகக் கருதிக் கொள்ளும் அமெரிக்காவிலோ, பிரான்சிலோ, இன்ன பிற நாடுகளிலோ மக்கள் மன நிறைவாக இருக்கின்ருர்களா? பெரும் பொருட் செல்வர்

Koviloor Digital Library



களெல்லாம் வாழ்க்கையில் ஏதோ குறைபாடிருப்பதை யுணர்ந்து வெறுப்புற்று வருகிருர்கள். எவ்வாருே பரபரப்பான வாழ்க்கைக்கிடையே ஒரு பக்கம் தற்கொலை யெண்ணிக்கை நாளும் பெருகிக் கொண்டே போகிறது; மற்ருெரு பக்கம் பல நாடுகளில் மக்கள், அதிலுங் குறிப்பாக, வாழவேண்டிய இளைஞர்கள் வாழ்க்கையிலே கொண்ட வெறுப்பின் காரணமாக மதிமயங்கி நிற்கிருர்கள். ஆம், காட்டுமிராண்டிகள் போலத் தம்மிச்சையாகத் திரியும் 'ஹிப்பி' களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே செல்கிறது. அறிவை மயக்கும் போதை மருந்துகளை உட்கொள்ளும் அத்தகையவர்களைச் சில நாடுகள், உல்லாசப் பயணிகள் போர்வையிலே நுழைவதையும் தடை செய்துள்ளன.

மக்களாகப் பிறந்தும் சமுதாயத்திலே இவ்வாருன இழிநிலைக்குத் தாழ வேண்டிய சூழல்தான் என்ன?

கல்வியறிவு போதிய அளவு மேனுட்டினர் பெற வில்லையா? அறிவியலில் 'டாக்டர்' பட்டம் பெற்றவர் களும் 'ஹிப்பி'களாகத் திரிகின்றனரே! இது கொடுமை யன்ருே?

கோடீசுவரர்களாக வாழவேண்டிய வாழ்க்கை வசதி பெற்றிருந்தும், குளியாமலும் தலைவாரிக் கொள்ளாமலும் நல்ல உடை உடுத்தாமலும் நகைப்பிற் கிடமாகச் சிலர் ஏன் மனம் போனபோக்கிலே சுற்றித் திரிகிருர்கள்? நாலுபேர் நடுவிலே நாகரித்துடனே பண்பாட்டுடனே தாம் வாழவில்லை யென்பதையாவது புரிந்துகொள்கிருர்களா? அவர்களே ஒரு தனியுலகத் தினைப் படைத்துக்கொண்டு, எக்காளமிட்டு அதனில் ஏதோ ஒரு புதிரான மனநிறைவில் வாழ்வதாகத் தானே நினைத்துக் கொள்கிருர்கள்! ஏன் இந்த அவலநிலை?

Koviloor Digital Library



இவ்வாருன சிந்தனைகளுக்கிடையே இந்தியத் துணைக் கண்டத்தின் ஆன்மீகப் பாரம்பரியத்தினைப்-பண்பாட்டுப் பெருநலத்தினைச் - சிறிது சிந்தித்துப் பார்த்தால் அதன் மேன்மை நன்கு புலனுகும். இதனைச் சென்ற நூற்ருண்டில் மேலைநாடுகளுக்கு நன்குணர்த் தியவர் சுவாமி விவேகானந்தராவார்.

**இந்திய ஆன்மீக வளம் :** பாரதநாடு பழம்பெரும் ஆன்மீக நாடு; சீரிய சிந்தனையாளர்களால் தன் பெருமையை நாளும் உயர்த்திக் கொண்டு வரும் நாடு. குறிப்பாக, யோகியர்களாலும் சித்தர்களாலும் முனிவர் களாலும் ஆன்மீக ஞானியர்களாலும், தனக்கென ஒரு தனித்தன்மையைக் கொண்டிலங்கும் நாடு இதுவென லாம்.

பாரத நாட்டில் அருளியலுக்கென சிலர் தம்மையே வழங்கி விட்ட காரணத்தால் **சிந்தனையாளர் வரிசை** வாழையடி வாழையென வந்து கொண்டிருத்தலைக் காணலாம்.

தமக்கென்வே வாழவேண்டுமென்று நினையாமல், பிறர்க்கென வாழும் தியாகத்தாலும் திருத்தொண் டாலும் அருட்சான்ருேர்கள் தேசியக் குறிக்கோளேயே உருவாக்கி நிற்கிருர்கள். தாம் பிறந்த பொன்னாட்டிற்கு அல்லும் பகலும் அயராமல் பாடுபட்டதால் பொன்ருப் புகழைத் தேடித் தந்துள்ளார்கள்; அவ்வாற்ருன் அவர்களையறியாமலேயே அவர்கள்தம் புகழானது என்றும் நின்று நிலவுகிறது. வரலாற்று ஏடுகளிலும் நடமாடும் தெய்வங்களாகிய அவர்களைப் பற்றிய அருங் குறிப்புக்களெல்லாம் பொன்னே போற் போற்றப் படுகின்றன; உலகமுள்ள அளவும் போற்றப்படும்.

Koviloor Digital Library



இன்றைய சூழ்நிலையில், இந்திய ஆன்மீக வளம் இந்தியாவிற்கு மட்டுமே உடைமையாக இல்லாமல், உலகத்திற்கே உடைமையாகிக் கொண்டிருக்கிறது. இதனை விட ஏற்றம் நம் நாட்டிற்கு ஏது? இதனை இந்தியராகப் பிறந்த ஆகூழ் பெற்ற ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டாவா?

**அருள் நெறிச் சிந்தனை :** வெறும் அறிவால் மட்டும் இந்த உலகத்தில் மக்கள் நல்லவர்களாக வாழ்ந்துவிட முடியாது. அரம் போன்ற கூரிய அறிவு படைத்த வராளுலும் மக்களுக்குரிய இரக்கவுணர்வு கொண்டிரா விடின் மரத்தை யொப்பவராவார். இதனைத் **திருவள்ளுவர்,**

**அரம்போலுங் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண் பில்லா தவர்** **(997)**

எனக் கூறிக்காட்டுகிறுர். இவரே பிறிதோரிடத்தில், பிறவுயிர்களின் துன்பத்தைத் தம் துன்பம் போலக் கருதிக் காப்பாற்ருவிடின் மக்கள் தாம் பெற்ற அறிவிஞல் பயனில்லை எனவும் கூறுகிறுர். இதனை,

**அறிவிஞன் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்**
**தந்நோய்போல் போற்ருக் கடை** **(315)**

எனவருங் குறளால் உணரலாம். இத்தகைய வள்ளுவர் வாய்மொழியினுல், மக்களாகப் பிறந்தவர்கள் அறிவுடன் அருளையும் வளர்த்துக் கொள்ள வேண்டியவர்களென் பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அறிவுடன் அருளை வளர்த்துக் கொள்வது எப்படி என்ற கேள்வி யெழலாம்.

ஆன்மநெறியில் பேதைமையும் அறியாமையும் இருள்நிலையின; அறிவும் தெளிவும் ஒளிநிலையின.

Koviloor Digital Library



அறிவுத் தேட்டத்துடன் தெளிவு கொண்டு ஒருவன் வாழும்போது அருட்கண் பார்வையுமுண்டாகி விடுமேயானால் அவனுக்கு எங்கும் ஒளிநெறி தென்படும். இதனை நன்குணர்ந்த தாயுமானவர் தமக்கு இறைவன் மௌனகுருவாக வந்து தெளிவுறுத்திய அநுபவத்தினைக் கூறிக் காட்டுகிறார்; அந்த நல்வாக்கானது சமய நெறியில் செல்பவர்களுக்குத் தாரக மந்திரம் போன்ற சிறப்பினையுடையது. அது வருமாறு :

' அருளால் எவையும்பார் என்றான் — அத்தை
அறியாதே சுட்டிஎன் அறிவாலே பார்த்தேன்
இருளான பொருள்கண்ட தல்லால் — கண்ட
என்னையுங் கண்டிலன் என்னேடி தோழி'

—ஆனந்தக் களிப்பு. 13.

இவ்வாறான அருட்பார்வையால் ஒளிநெறி கண்டதால் தாயுமானவர் பெற்ற பயன் என்னவென வினவலாம்.

நல்வழிச் சிந்தனை மாயையில் தோன்றினாலும் படிப்படியே இறைவன் திருவருள்வெளியிலே தோன்றியதாகச் சிறப்பினைப் பெறும். எவ்விடத்தினின்று மனந் தோன்றியதோ, அங்கேயே அம்மனம் ஒடுங்குதலுஞ் செய்யும்; அங்கேயே அறிவு தெளிவடைந்து ஆன்மாவும் பரமான்மாவுடன்—அடியவன் பரம்பொருளுடன்-இரண்டறக் கலந்து மெய்ப்புணர்ப்பின்பமும் தோன்றும். சுருங்கக் கூறின், குறைபாடுள்ள ஆன்மா குறை தவிர்த்துப் பிறப்பிறப்பற்ற முழுநிறைவான இறைவன் திருவருளில் திளைக்கு மெனலாம். இதனைத் தாயுமானவர் 'ஆனந்தக் களிப்பு'ப் பகுதியில்,

Koviloor Digital Library



'தாக்குநல் லானந்த சோதி—அணு
தன்னிற் சிறிய எனைத்தன் னருளால்
போக்கு வரவற் றிருக்குஞ்—சுத்த
பூரண மாக்கினன் புதுமைகாண் மின்னே' (18)

என இயம்பிச் செல்லுதலால் உணரலாம்.

அருட் சான்றோர் இருவகை : அருட் பார்வை காரணமாகச் சான்றோர்கள் ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்வு கொண்டு வாழ்கின்றனர்; அவர்களுள்ளும் இரு திறத்தினர் உள்ளனர்.

தம் சிந்தனை வளத்தால் அருளநுபவம் பெற்றதும் தம் ஈடேற்றங் குறித்தே நாளுங் கவலை கொண்டு உழைத்து உய்தியடைவர் - அவர் ஒரு வகையினர்.

தாம் பெற்ற அருளநுபவம் பிறரும் பெறுதற்காக அல்லும் பகலும் சிந்தித்து நைந்துருகி நிற்பர்—அவர் மற்றொரு வகையினர்.

பிறருக்காகவே பிறப்பெடுத்தோம் என்ற நினைப்புடன் நன்னெறி காட்டும் அருட்சான்றோரே உலகத்தால் பெரிதும் பாராட்டுதற்குரியவர்; அவரே இவ்வுலகத்திற்குத் தேவையானவர்.

காகங்கள் தமக்கென வைக்கப்பட்ட உணவைத் தாமே யுண்ணாமல், பிற உறவுக் காகங்களையும் கரைந்தழைத்துக் கலந்துண்ணும் முறையினை உலகத்தில் நாளுங் காண்கிறோம். அவ்வாறே அருளாளர்கள் சிவாநுபவத்தைத் தாமே யநுபவிக்க நினைப்பதில்லை; தம் போன்ற பிறரையும் இந்த மானுடயாக்கை இறந்து விடுவதன் முன் ஒருசேர வருவீராக என்று நைந்து

Koviloor Digital Library



நைந்து அழைக்கின்றனர். அவ்வாறான அழைப்பினைத் தாயுமானார்,

**‘ காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டா காரசிவ**
**போக மெனும்பே ரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப்**
**பூரணமாய்**
**ஏக வுருவாய்க் கிடைக்குதையோ·இன்புற் றிடநாம் இனியெடுத்த**
**தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேர வாருஞ் சகத்தீரே’**

என்று ‘காடுங் கரையும்’ (3) பகுதியுள் விடுப்பதைக் காணலாம்.

இவ்வாறான கடமையினை யாற்றுதற்கு முன் அருளாளர்கள் பலபடச் சிந்திக்கின்றனர்.

முதற்கண் அவர்கள் தம் சிறுமையையும் ஆண்டவன் பெருமையினையும் நினைத்துப் பார்க்கின்றனர். தம்மை நன்குணர்ந்ததும் தம் ஆன்மநாயகனை யுணரத் தலைப்படுகின்றனர். எல்லா உயிர்களினூடேயும் தம் ஆன்மநாயகனைப்—பரம்பொருளைக்—காணப் பழகிக் கொள்கின்றனர்; **எல்லாம் கடவுளின் குழந்தைகளே** எனப் போற்றிநிற்கின்றனர். அந்த மேலான நிலையில் சாதியாலும் குலத்தாலும் பொருளாலும் மொழியாலும் பேசப்படுகின்ற ஏற்றத்தாழ்வுகள்—குறைபாடுகள்—அவர்களது பார்வையில் தென்படுவதில்லை. ஆன்ம நேயங் கொண்டு உலகில் பிறருக்காகத் தம்மாலான வரையில் பாடுபடுவோமென்று சில காலம் வாழவும் நினைக்கின்றனர்; சீவன் முத்தர்களாக வாழவுஞ் செய்கின்றனர்; வையத்தே பிறப்பெடுத்த சிறந்த நோக்கத்தையே தம் வாழ்வால் உணர்த்திக் காட்டுகின்றனர்.

உடலுடன் இப்பூவுலகத்தே வாழ்கின்றபோது மக்களின் ஈடேற்றத்திற்காக அயராமல் சிந்திக்

Koviloor Digital Library


கின்றூர்களே அந்தச் சிந்தனைகளெல்லாம் வீண்போவதில்லை; அவை திருவாக்குகளாகவும் எழுத்துக்களாகவும் செயல்முறைகளாகவும் வடிவெடுக்கின்றன. அவை ஆன்மீக நாட்டங் கொண்ட மக்கள் ஈடேறக் கலங்கரை விளக்கங்களாக விளங்குகின்றன; உலகியல் கடலில் தத்தளிக்காமல் கரை சேரத் தெப்பங்களாக உதவுகின்றன.

இத்தகைய சிந்தனைவளம் பெரிதும் உருவான காரணத்தினுல் தான், **பாரதம் உலகத்திற்கே அருளியல் வழிகாட்டியாக** விளங்குகின்றதென்று உரத்துடன் பலருங் கூறி வருகின்றனர்.

**வாக்கும் வாழ்க்கையும் :** உலகப் பெருஞ் சிந்தனையாளராகிய திருவள்ளுவர் ஆன்மீகப் படிநிலைகளை உணர்த்திச் செல்கிறூர்.

வையத்துள் வாழ்வாங்கு வாழும் நெறிமுறைகளையும் அவ்வாறு வாழ்ந்து காட்டுதலால் எய்தும் ஆன்மீக ஈடேற்றத்தையும்—வானுறையும் தெய்வநிலையையும்—அவர் நன்கு விளக்கியுள்ளார்.

உலகியலிலும் சரி, அருளியலிலும் சரி, மக்கள் தம் மனத்தாலும் சொல்லாலும் செயலாலும் தூய்மையுடன் ஒன்றி வாழ வேண்டும். அப்படி வாழ்பவர்களே வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்கள் என்பது வள்ளுவர் கருத்து.

உள்ளத்தின் ஒளி வாக்கின் ஒளியாக, வாக்கின் ஒளி செயலின் ஒளியாக அமைந்து விடுமேயானுல் வாழ்க்கையும் ஒளியுடையதாக ஒளிரும். எங்கும் ஒளி மயமாகும்; இன்ப மயமாகும்.

Koviloor Digital Library


சொல்லும் செயலும் மாறுபட்டு நிற்கும் ஒருவனின் நட்பு நனவில் மட்டுமன்று, கனவிலுந் துன்பந் தரத் தக்கது என்பதனைக்,

'கனவினு மின்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு' (819)

எனவரும் வள்ளுவத்தால் நன்குணரலாம்.

பொதுவாகக் கல்விநிலையத்தில் நடக்கும் பாடத்தின் நிலை தனிப்பட்டது. கல்விப் பாடம் வாழ்க்கையுடன் ஒன்றித்தான் இருக்குமென்று எதிர்பார்க்க முடியாது. ஆனால், சமய வழிச் சிந்தனையானது ஒழுக்கத்தில் தான் வேரூன்றி நிற்க வேண்டும்; அது தவிர்க்கக் கூடாதது. அஃதாவது, வாழ்க்கையில் வாழ்ந்து காட்ட வியலாத எந்த நெறியையும் அருளாளர்கள் சிந்தித்ததில்லை.

"அருள் துறையில் எப்பொழுதும் தம் வாழ்வின் மூலமாகப் புகட்டுவதுதான் நல்ல போதனையாகிறது. கணித சாஸ்திரம் புகட்டுபவர் அச் சாஸ்திரத்தைத் தம் வாழ்க்கையோடு சம்பந்தப்படாதிருந்து புகட்டலாம். வாழ்க்கையோடு சம்பந்தப் படுத்தாது இசையை மக்களுக்குப் புகட்டலாம். சொந்த வாழ்க்கையோடு சம்பந்தமில்லாத முறையில் மருத்துவத் துறையில் மக்களுக்குப் பாடம் புகட்டலாம். ஆனால் அருள் துறையிலே பாடம் புகட்ட வருகிற மனிதன் தன்னுடைய ஜீவிதத்தில் அக்கோட்பாடுகளை அனுஷ்டிப்பவனாக இருக்க வேண்டும்" என்று கூறுவார் சுவாமி சித்பவானந்தர்.

**திருத்தும் நன்னெறி :** உலகில் வெளிப்படையாகக் காணும் காட்டையழித்து நாடாக்கி விடலாம்; பயிர் விளையாத கரம்பையழித்து விளைநிலமாக்கி விடலாம்.

Koviloor Digital Library



நச்சுப் பாம்பின் நஞ்சினை யெடுத்துக் கொடுநோயைத் தீர்க்கும் மருந்தாக மாற்றி விடலாம்; ஆறுகளையும் திசை மாற்றித் திருப்பி விடலாம்; வானில் இயங்கும் மேகங்களையும் நமக்கு வேண்டிய இடத்தில் மழை பொழியுமாறு செய்து விடலாம். ஆனால், மக்களின் உள்ளங்களை மட்டும் தொடர்ந்து நன்னெறியில் செல்லு மாறு திருத்திவிடுவதென்பது இயலாத செயலாகும்.

மனிதமனம் கட்டுக்குள் அடங்காத காரணத்தால்-தன்னியல்பால் தீநெறி படரும் தன்மையினால்-அதனைப் **பேய்** என்றும், **குரங்கு** என்றும், **பேய்க்குரங்கு** என்றும், **பிணநெஞ்சு** என்றும் அருளாளர்கள் கண்டபடி ஏசித் தீர்க்கிறார்கள். உண்மையில் மனத்தின் நிலைதான் என்ன?

மனிதன் தன் மனத்தை ஒருமையுணர்வால் அடக்கி யாளும் உறுதியினைக் கொண்டுவிடின் அதனினும் சிறந்தபேறு அவனுக்கில்லை. தறிகெட்டுச் சென்று விடின் மனத்திலே ஒரு பக்கம் **பேராசைப் புதர்** மண்டிய காடு அச்சுறுத்துகிறது; **காமமென்னும் நச்சுப்பாம்பு** படம் விரித்து நெளிந்து கொண்டே சீறுகின்றது; ஆணவத் தால் தூண்டப் பெற்ற **கெட்ட எண்ணங்கள்** உறங்காமல் கொட்டமடித்துக் கொண்டு **கொடிய விலங்குகளாகத்** திரிந்து கொண்டிருக்கின்றன. மற்றொரு பக்கம் **வஞ்சனைப் பேராறுகள்** வற்றாமல் ஓடிக்கொண்டிருக் கின்றன.

இவ்வளவு தொல்லைகளையும் சமயவழி மனவுறுதி யால் (Religious will power of fortitude) வைராக்கியச் சித்தத்தால்—வென்று, பிறருக்கும் வெல்லுகின்ற உபாயத்தைப் பக்குவமாக எடுத்துரைப்பவர்களே **அருளாளர்கள்.**

Koviloor Digital Library



உடலென்னும் காட்டகத்தே ஐம்புலவேடர்களால் ஏற்படும் சேட்டைகள் மக்களை நன்னெறிக் கண் செல்ல விடுவதில்லை; இதனைத் திருநாவுக்கரசர்,

**புள்ளுவ ரைவர்கள்வர் புனத்திடைப் புகுந்து நின்று**
**துள்ளுவர் சூறைகொள்வர் தூநெறி விளையவொட்டார்**
**(4 : 77 : 5)**

எனக் கூறிக் காட்டுகிறார்.

இத்தகைய ஆன்மீகப் பாடங்களினால் உலகிலே ஒருவன் பிறனொருவனைக் காணுகின்றபோது வேற்றுமையுணர்வும் காழ்ப்புணர்வும் கொண்டு பழகாமல், அன்புடன் பழக முனைய வேண்டும். அறிவினால் இறைவனைத் தேட முயலலாம்; ஆனால், அன்போ இறைவனையடையும் நெறியாகவும், ஏன், இறைவனாகவுமே துணைநிற்கிறது. அன்பே அனைத்துமென்ற வுணர்வில் அருட்செல்வர் **இராமலிங்க அடிகள்,**

**'அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே**
**அன்பெனும் குடில்புகும் அரசே**
**அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே**
**அன்பெனும் கரத்தமர் அமுதே**
**அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே**
**அன்பெனும் உயிரொளிர் அறிவே**
**அன்பெனும் அணுவுள் ளமைந்தபே ரொளியே**
**அன்புரு வாம்பர சிவமே' (6 : பரசிவவணக்கம் 3)**

எனக் கூறிக் காட்டுதல் சீரிதாய்ச் சிந்திக்கத்தக்கது.

அருளியலைச் சமுதாயத்தில் வேரூன்றச் செய்தற்கு அருளாளர்கள் தம் அநுபவத்தையே கருவியாகக் கைக்கொண்டிருக்கிறார்கள்; தம் வாழ்க்கையையே தியாக வேள்வியாக மாற்றியிருக்கிறார்கள். என்றாலும், அவர்

Koviloor Digital Library



கள் எதிர்பார்த்த பயன் கிட்டியிருக்கிறதா? இல்லை யென்றுதான் சொல்லவேண்டியவர்களாக உள்ளோம். கடைவிரித்தும் பண்டங்கொள்வார் பலராய் வாராத காரணத்தால் கடைசுருட்டிக் கொண்டவர்களே பலராயுள்ளனர்.

சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் செயல்களையே தம் வாழ்வில் நடத்திக் காட்டியும் போதித்தும் பயன் காணாத அருட்செல்வர்கள் மனங்குமைந்திருக்கிறார்கள்; பிறர் குற்றங்களையெல்லாம் தம்மேல் ஏறட்டுங் கூறி யிருக்கிறார்கள். சிலர் மக்களின் குறைகளை வெளிப்படை யாகவே எடுத்து மொழிந்திருக்கிறார்கள்; அவர்களைத் திருத்துவதற்காகவே இறைவன் தம்மைப் படைத் திருப்பதாகவும் துணிந்து கூறியுள்ளார்கள். அவர் களுள் ஒருவரான வள்ளலார்,

'அகத்தே கறுத்துப் புறத்துவெளுத்
திருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க
சங்கத் தடைவித் திடஅவரும்
இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ்ந்
திடுதற் கென்றே எனையிந்த
உகத்தே இறைவன் வருவிக்க
உற்றேன் அருளைப் பெற்றேனே'

(6 : உற்றதுரைத்தல் 9)

என்றும்,

'சாதிகுலம் என்றும் சமயமதம் என்றுமுப
நீதியியல் ஆச்சிரம நீட்டென்றும் — ஓதுகின்ற
பேயாட்டம் எல்லாம் பிதிர்ந்தொழிந்த வேபிறர்தம்
வாயாட்டம் தீர்ந்தனவே மற்று' (6 : சுத்தசிவநிலை 22)

Koviloor Digital Library



என்றும் தம் பாசுரங்களால் அருளநுபவத்தினை வெளியிட்டுக் காட்டுதல் சிந்திக்கத்தக்கது.

எனவே, அருளாளர்களின் கூட்டுறவால் உலகியல் வெம்மை தவிர்த்து நன்னெறியடையலாமென்பது வெளிப்படை.

சுவாமி சிவானந்தர், 'தன்னை அறிந்து பேரின்பப் பெருவாழ்வைப் பெறுவதற்கு **அடியார்களின் உறவு** வீட்டைத் தாங்கும் தூண்போல இன்றியமையாதது. ஆகையால் அடியார்களின் நட்பை முதலில் தேடுக' எனக் குறிப்பது அநுபவ உண்மையாகும். மக்கள் திருந்தி நன்னெறியடைவதற்குக் கண்கண்ட உபாய மாகும்.

## அருட்சான்ருேர் வரலாற்று வரைகோடுகள்

உலகத்திலே மக்கள் கோடானுகோடியாகப் பிறக்கிருர்கள்; வளர்கிருர்கள்; காலம் வந்ததும் வாழ்வை ஒருவாருக முடித்துக் கொண்டு உலக அரங்கிலிருந்து வெளியேறுகிருர்கள். ஆனுல், அவர்களுள் மிகச் சிலரோ மக்களின் வழிகாட்டிகளாக என்றும் மதித்துப் போற்றப்படுகிருர்கள். அத்தகைய அருட்சான்ருேர்களே மக்களினத்தை அறியாமையிலிருந்து விடுவிக்கும் அறிவொளி விளக்கங்கள்; உலகியல் வெம்மையைத் தணிக்கும் வான்மழை மேகங்கள்; பிறவிப் பெருங் கடலிலிருந்து மீட்க உதவும் மரக்கலங்கள்.

அந்த அருட்சான்ருேர் வரிசையிலே புத்தர், மணிவாசகர், திருமூலர், திருநாவுக்கரசர், இராமகிருஷ்ண பரமஹம்சர், யோகி அரவிந்தர் ஆகிய ஐவரின் அருளுரை

Koviloor Digital Library



களைச் சிறிது சிந்தனை செய்வோம். அதற்கு அடிப்படையாக-நுழைவாயிலாகச்-சீலமிகு அவர்களது வரலாற்று வரைகோட்டினை ஓரளவேனும் வரைந்து நோக்குதல் சுவை மிகப்பயக்கும்; ஆன்மநலஞ் சேர்க்கும்.

**புத்தர் :** பரத கண்டத்து நேப்பாள நாட்டின் சாக்கியக் குறுநில மன்னர்களைக் கௌதமர் என்பர். அம்மரபில் வந்த சுத்தோதனருக்கும் மாயாதேவிக்கும் கி.மு. 563 ஆம் ஆண்டில் மகனாய்த் தோன்றியவர் **சித்தார்த்தர்.** அரண்மனை வாழ்வும் அரசபோகமுங் கொண்டு வாழப் பிறந்தவராகிய அவரது சாதகம் அவரை அவ்வாறு வாழவிடவில்லை; அதுவும் ஒரு வகையில் உலக நன்மைக்காகவே அமைந்துவிட்டது!

உலகப் பெருங்களத்திலே கிழட்டுத்தனமும், நோய்த் துன்பமும், சாக்காடும், துறவுத் தோற்றமும் சித்தார்த்தரின் பார்வையில் படாமலிருக்கவும், துன்பக் கீற்று ஒரு சிறிதும் நிழலிடாத இன்பச் சூழலில் அவரை வாழ வைக்கவும் ஆனமட்டும் திட்டமிட்டுப் பாடுபட்டார் அவருடைய தந்தையார். ஆனால், சித்தார்த்தரின் நல்லூழ்நெஞ்சம் அருள்தாகத்துடன் எதிர் நீச்சலிட்டது. அவர் தம் தந்தையாரையும் மனைவி யசோதரையையும் மகன் இராகுலனையும் பிற சுற்றத்தினரையும் விட்டுப் பிரிந்தார். உலகியல் மருட்சியினின்றும் துன்பத்தினின்றும் மக்களை விடுவித்து ஈடேற்ற வழிநாடிப் புறப்பட்டார்; கடுமையான நோன்புகளால் உடலை வாட்டிப் பார்த்தார். அவற்றால் பயனில்லையென்று கண்டதும், **துன்பத்தீர்வே குறிக்கோளாகக்** கொண்டு ஏழு வாரம் அரசமரத்தடியில் கடுந்தவம் புரிந்தார். புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் பொருட்படுத்தாத இன்பப் பெருவெளியில் உலவினர். ஞானம் பெற்ற நிலையில்

KOVILOOR MADALAYAM Koviloor Digital Library
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: 436846)



**ததாகதர்** (உண்மையையடைந்தவர்) என அழைக்கப் பெற்ருர். மெய்யறிவாலும் அருளநுபவத்தாலும் மனம் மொழி மெய் ஆகியவற்றில் தூய பண்பாடு கண்டார். அன்பை வளர்க்கவும் ஆசையைத் துறக்கவும் தூண்டினுர். **அறமே வாய்மை** யென்பதையும் வாழ்க்கைக் குரிய நெறிமுறையென்பதையும், சமயக் கோட்பாடென் பதையும், துயர்களினின்றும் விடுவிக்கும் பாதுகாப் பென்பதையும் உணர்ந்து வெளிப்படுத்தினுர். **ஞானக் காட்சி** பெற்றதனுல் மனமே பிறப்பு இறப்புக்குக் காரணமென்பதையும், **மனதற்ற தூய நிலேயே முடிவான குறிக்கோள்நிலே** யென்பதையும் தம்மை நாடியவர்களுக்கு உணர்த்தினுர்.

புத்தர் தம்மிடம் வந்த சீடர்களிடம் கூறுகையில் எதனேயும் ஆய்ந்து சீர்தூக்கிப் பார்த்து முடிவிற்கு வருமாறு அறிவுறுத்தினுர்; தாம் சொன்னதற்காக அப்படியே பிறர் நம்பிவிடுதல் கூடாதென்பது அவர் கருத்து. தனித்த சீரிய சிந்தனேக்கு வித்திட்டவர் புத்தர் எனத் துணிந்து கூறலாம்.

தாம் அரிதின் பெற்ற **நிர்வாணநிலே** காரணமாகத் **ததாகதர்** எனும் **சித்தார்த்தர் புத்தர்** (நிறைஞானி) ஆனுர். கதிரவனெளியால் செடி கொடி மரங்கள் வளர்வதே போன்று புத்தரின் திருமுன்னர்ப் பலரும் நல்லராயினர்; சிலர் பௌத்த ஞானியாயினர். புத்தர் தம்மைத் தெய்வ நிலேயில் வைத்துப் பிறர் போற்றும்படி எதிர்பார்க்க வில்லே; எனினும், அவர் நெறியினேப் பின்பற்றியவர் கள் அவரைத் தெய்வமாகவே போற்றத் தலேப்பட்டனர்.

புத்த சங்கத்தில் சாதி குல இன வேறுபாடுகள் பாராட்டுதல் கூடாது. 'ஆறுகள் கடலில் கலந்தவுடன்

Koviloor Digital Library



தம் பெயர்களை இழப்பது போல் புத்த சங்கத்தில் சேர்பவர்கள் சாதியையும் பெயரையும் இழந்து விடல் வேண்டும்' என்று தம் மனத்திலுறைந்த உணர்வினை உரையாக வெளிப்படுத்தியுள்ளார் புத்தர்.

**மாணிக்க வாசகர் :** பாண்டி வளநாட்டிலே திருவாதவூரில் சிவஞான அநுபூதிச் செல்வர் மணி வாசகர். இவர் ஆதிசைவ மரபில் சம்பு பாதாசாரியாருக்கும் சிவஞானவதிக்கும் பிள்ளையாய் அவதரித்தாரென்பர். இளமை தொட்டே கல்வி கேள்விகளிலும் அறிவாய்வு ஒழுக்கங்களிலும் சிறந்து விளங்கியமையால் **திருவாதவூரர்** என்று அழைக்கப்பெற்ருர். இவரது காலம் தமிழறிஞர்களால் முடிவு போக்கவியலாமல் உள்ளது.

மணிவாசகரது திறமையை நன்குணர்ந்த அரிமர்த்தன பாண்டியன் இவரை யழைத்துத் **தென்னவன் பிரமராயன்** எனும் சிறப்புப் பெயர் வழங்கித் தனக்கு அமைச்சராக்கிக் கொண்டான்; பிறகு, தன் படை வலிமையைப் பெருக்கிக் கொள்ளக் குதிரைகள் வாங்கி வர அவரை ஏவினுன். புறப்பட்ட அவர் **திருப்பெருந்துறையிலே குருந்த மரத்து நீழலில்** இறைவனுல் ஆட்கொள்ளப்பெற்ருர்; இனம்புரியாத சிவானந்த மேலீட்டால், குதிரைக்கெனக் கொணர்ந்த பொன்னையும் பொருளையும் சிவன் திருக்கோயில் கட்டப் பயன்படுத்தி மகிழ்ந்தார் திருவாதவூரர்.

இவரது செயலைக் கேள்வியுற்ற பாண்டியன் இவரை விரைந்து வருமாறு ஓலைவிடுத்தான். வந்ததும் குதிரைகள் பற்றிப் பாண்டியன் வினவவே, இறைவன் தமக்குணர்த்தியவாறு **ஆவணி மூல நாளில்** வருமெனப் பகர்ந்தார் வாதவூரர். இவர் பொருட்டுச் சிவபிரான்

Koviloor Digital Library



நரியைப் பரியாக்கியும், மீளவும் பரியை நரியாக்கியும், வையையாற்றில் வெள்ளம் வரச்செய்தும் வந்திக்குக் கூலியாளாய்ப் பிட்டுக்கு மண்சுமந்தும், பாண்டியனுல் பிரம்படிபட்டும் திருவிளையாடல் புரிந்தான்.

திருவாதவூரர் உலகியலை வெறுத்துத் தவநெறி மேற்கொண்டு தில்லையை யடைந்தார். அங்கு ஊமைப் பெண்ணை உரையாட வைத்துப் பௌத்தர்களை வென்றதுடன் அவர்களைச் சைவர்களாக்கினுர். சிவத்தலங்கள் பலவற்றிற்குச் சென்று நெஞ்சு நெக்குருகப் பாடினுலும் மணிவாசகருக்குத் தில்லையைப் பொறுத்த வரையில் தனியிடுபாடு உண்டு. **'தில்லை பாதி திருவாசகம்'** என்ற சொல்வழக்கினுல் இதனை நன்குணரலாம்.

மகளிர் விளையாடல்களான திரு அம்மானை திருச்சாழல் திருத்தெள்ளேணம் திருப்பூவல்லி போன்ற பதிகங்களால் சைவ சித்தாந்த மெய்ப்பொருளியல் நுண் கூறுகளை மணிவாசகர் இனிது மொழிந்து சென்றுள்ளார். இவர் பாடியருளிய திருச்சிற்றம்பலக் கோவையாரையும் திருவாசகத்துடன் இணைத்துப் பயின்று சிந்தித்தால் **'நாயக நாயகி பாவனை'** (Bridal mysticism) பற்றிய கூறுபாடுகளையுணர்ந்து மகிழலாம். ஆக, இவர் அருளிய பாசுரங்கள் ஆன்மீகக் கனிவின் அற்புத வடிவங்களெனலாம்; திருவருள்பூத்த நெஞ்சகப் பொய்கையில் சிவமணத்துடன் அலர்ந்த தெய்வநலத் தாமரைகளெனலாம்.

**திருமூலர் :** கி. பி. ஐந்தாம் நூற்றுண்டினர் எனப் பலரால் கருதப் பெறும் திருமூலர் **சித்தர்** மரபினர், சிவ ஞானச் செல்வர். திருக்கயிலையில் **சுந்தரநாதர்** எனும் பெயரில் முனிவராயிருந்து திருநந்தி தேவரிடத்தில் மெய்ஞ்ஞானப் பொருளைக் கேட்டார், அணிமா முதலிய

Koviloor Digital Library



சித்திகள் கைவரப் பெற்ருர். பொதிய மலையிலிருந்த அகத்தியரைக் காணும் பொருட்டுத் தென்னுட்டுப் பயணம் மேற்கொண்டார். வரும் வழியிலே திருவாவடு துறையிலே சில நாட்கள் தங்கியிருந்தார்; அப்போது அதனருகேயுள்ள சாத்தனூரில் பசுக் கூட்டங்களை மேய்த்த மூலன் இறந்து கிடப்பதையும் அது கண்ட பசுக்கள் கதறிக் கண்ணீர் வடிப்பதையுங் கண்டார். பிறிதின் நோய் தந்நோய் போல் போற்றும் மக்கட் பண்பு காரணமாக அம்முனிவர் தம் சித்தியின் ஆற்றலைப் புலப்படுத்தத் துணிந்தார். தம் உடலைப் பெரிதும் பாதுகாப்பாக ஓரிடத்தில் கிடத்திவிட்டு, இறந்து கிடந்த மூலன் உடலில் புகுந்தெழுந்து பசுக் கூட்டங்களின் கண்ணீரை மாற்றினுர். பிறகு, திரும்பி வந்து பார்க்கையில் தம் உடலைக் காணுமையினுல், திருவாவடுதுறைக்கு வந்து யோகத்திலமர்ந்து திருமூல ரானுர்; எனவே, பசு மேய்க்கும் இடையனுடலில் வடி வெடுத்த பின்னரே 'திருமூலர்' எனப்பட்டார் என்பது வரலாறு.

திருமூலர் அருளிய திருமந்திரம் ஞான நூல்; ஒன்பது தந்திரங்கள் கொண்டது. அவை முறையே நல்லொழுக்கம், அறவாழ்க்கை, யோகப் பழக்கம், மந்திர நுட்பம், சமயவொழுக்கம், குரு நெறி நிற்றல், அருப்புற வுணர்வு, அருள் நுகர்வு, பேராப் பெருவாழ்வு எனும் வாழ்வுப் பொருள் விளக்கங்களாக அமைந்திருக்கின்றன. 'மூவாயிரந் தமிழ்' 'திருமந்திர மாலை' எனப் பெறும் இந்த ஞானக்களஞ்சியம் அநுபவத்தால் உணர்தற்கரிய தென்பர். 'அன்பே சிவம்' என்பதும் ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்பதும், 'யான் பெற்ற இன்பம்

Koviloor Digital Library



பெறுக இவ்வையகம்' என்பதும் திருமந்திரச் சத்தான பொருளுரைகள். திருமந்திரப் பெருமையினைத்,

**'திருமந் திரமே சிவகதிக்கு வித்தாம்**
**திருமந் திரமே சிவமாம்—அருமந்த**
**புந்திக்கு ளேநினைந்து போற்றுமடி யார்தமக்குச்**
**சந்திக்குந் தற்பரமே தான்'**

எனும் தனிப் பாடலால் உணர்ந்து பாராட்டலாம்.

**திருநாவுக்கரசர் :** கி. பி. ஏழாம் நூற்றாண்டிலே நடு நாட்டின் பகுதியாகிய திருமுனைப்பாடி நாட்டுத் திருவாமூரில் வேளாளர் மரபில் புகழனார்க்கும் மாதினியார்க்கும் பிள்ளையாய் அவதரித்தார் **மருள் நீக்கியார்.** இவருக்குத் தமக்கையார் திலகவதியார். இளமைப் பருவத்தே தம் தமக்கையாருக்கென மணம் பேசிய கலிப்பகையார் போர்க் களத்தில் உயிர்துறந்ததும், அது காரணமாகத் தமக்கையார் வாழ்வில் பசுமை மறைந்ததும், தம் பெற்றோரைப் பறிகொடுத்ததும் மருணீக்கியார் நெஞ்சத்தில் கடும் ஏமாற்றத்தைத் தோற்றுவித்தன. எனவே, சைவ சமய வாழ்விலே வெறுப்புற்றுச் சமண் சார்ந்தார்; **தரும சேனர்** என்ற சிறப்புப் பெயர் பெற்றுச் சமணத் தலைமை பூண்டார்.

தம் தம்பியை மீளவும் சைவத்திற்குக் கொணர இறைவனிடம் மன்றாடினார் **திலகவதியார்;** தியாக வாழ்வு—தவவாழ்வு—மேற்கொண்டு கோயில் திருப்பணி புரிகிறார். இவர் வேண்டுதலுக்கு இறைவன் செவி சாய்த்து மருணீக்கியாருக்குச் சூலை நோய் தந்து ஆட்கொள்ள முனைந்தான்; தடுத்தாட் கொண்டான்.

வாகீசர் மீளவும் சைவ நன்னெறி தலைப்பட்டு இறைவன் உளங் குளிரக் கெஞ்சு தமிழ்ப் பாசுரங்கள்

Koviloor Digital Library



பாடியருளினுர்; **'சொற்குறுதிக்கு அப்பர்'** எனப் பாராட்டும் வகையில் சைவத்தில் ஊற்றங் கொண்டு 'நாமார்க்கும் குடியல்லோம்' எனச் சாற்றினுர்.

இறைவனுல் **'திருநாவுக்கரசர்'** எனப் பெயர் பெற்ற இவர் புற வழிபாடாகிய சரியை நெறியில் சென்றவர். அக வழிபாடாகிய **கிரியை நெறியில்** சென்ற **திருஞான சம்பந்தருடன்** தொடர்பு கொண்டு இவர் தலப் பயணம் மேற்கொண்டார்; சமயத்திற்கும் சமுதாயத்திற்கும் தம் மாலான திருப்பணி புரிந்தார். என்றுலும், சமணத் திலிருந்து தாம் பட்ட தொல்லைகளை அவர் வாழ்க்கை முழுவதிலும் நினைவு கூர்ந்தே வந்துள்ளார். வாழ்க்கை யில் கொண்ட அநுபவப்பாடமே சமய நெறியில் உறுதியைத் தேடித் தந்தது.

சமணத்திலிருந்து சைவஞ் சார்ந்தமையின் பல்லவ மன்னன் வெகுளி கொண்டு அவரை நீற்றறையிலிட்டும், நஞ்சு ஊட்டியும், கொலை யானையை ஏவி இடறச் செய்தும், கல்லொடு பிணித்துக் கடலில் தள்ளியும் கொல்ல நினைத்தான்; அந்தக் கொடுமைகளைத் திருவருளால் வென்று நின்றமை அவருடைய நெஞ்சில் பதிந்திருந்தமையின் பாசுரங்கள் ஆழ்ந்த அருளநுபவத் தின் வெளியீடுகளாயின. திருத் தொண்டின் நெறிவாழ **உழவாரப் படைத் தொண்டும் சொன்மாலைத் தொண்டும்** இயற்றியதால், சமய குரவர் நால்வருள் அவரை ஒருவ ராகக் கொண்டு போற்றுகிறது சைவவுலகம்.

உலகியற் பொன்னையும் பொருளையும் துச்சமெனக் கருதிய அப்பரடிகள் பரமனுக்கு ஆளாகித் **திருப்புக லூரில் திருவருளில் கலந்தருளினுர்.**

**இராம கிருஷ்ணர்** (1836-1886) : வங்காளத்தில் கமார்புக் கூர் எனும் சிற்றூரில் ஓர் ஏழையந்தண

Koviloor Digital Library



ராகிய க்ஷுதிராம் சட்டோபாத்தியாயருக்குப் பிள்ளை யாய்த் தோன்றினர் **கதாதரர்.** இளமையில் இவருக்கு உலகியற்கல்வியில் ஈடுபாடில்லை. பதினாறு வயது வரை யிலும் அவர் தெய்வ வழிபாடுகளை யொட்டிய விளையாட்டுக்களிலே நாட்டங்கொண்டிருந்தார்.

தென்னாட்டில் தோன்றிய **வடலூர் இராமலிங்க அடிகளாரின்** எதிர்கால வாழ்வில் அவர் தமையனார் **சபாபதிப்பிள்ளை** நாட்டங்கொண்டதே போன்று, **கதாதரர்** எதிர்காலத்திலும் அவரது தமையனார் **இராம்குமார் சட்டோபாத்தியாயர்** நாட்டங்காட்டினர். குலத்தொழிலாகிய தெய்வ பூசையிலும் புரோகிதத்திலும் அவரை ஈடுபடுத்தினர். கைம்மாறு எதிர்பாராமல் பக்திப் பெருக்கத்துடன் கதாதரரும் தெய்வ பூசை நிகழ்த்தி வந்தார்.

கங்கைக் கரையில் **தட்சணேசுவரம்** எனும் இடத்தில் அமைந்த காளிகோயிலில் தம் தமையனார் அர்ச்சகராகப் பணியேற்றார்; அவருடன் இவரும் அர்ச்சகராகத் தம்மியல்பிற் கேற்பக் கடவுள் வழிபாடு நிகழ்த்திவர வேண்டிய சூழ்நிலை பெற்றார். பக்தியார்வத்தினால் இவருடைய பூசை முறையில் மாற்றம் ஏற்பட்டது. குழந்தை தன் அன்புத்தாயுடன் கொஞ்சி விளையாடுவதே போன்று காளிதேவியுடன் பழகினார்; அன்பின் திருவுருவமானார். ஆகம விதிப்படியான பூசை அவரிடம் விடைபெற்றுக் கொண்டது; பராபக்திப் பெருநிலைப் பூசை அவரை ஆட்கொண்டது.

அக்காலத்தில் அவருடைய அர்ச்சகத் தொழிலுக் கெனக் கொடுத்த மாதச் சம்பளம் ஏழு ரூபாய் என்பது கூட அவருக்குத் தெரியாது; அந்தச் சம்பளத்தை உறவினர்கள் கையெழுத்திட்டுப் பெற்றுக் கொள்வார்

Koviloor Digital Library



களாம். இதனுல், அவருடைய மனநிலையின் போக்கினை உய்த்துணரலாம். உலகியல் சிறிதும் கலவாத உத்தமத் தொண்டே அவரது தெய்வநலத் தொண்டாயிற்று.

உலகியல் கடந்த அருளியலில் பெற்ற அநுபவங்களால் சுகாதரர் இராமகிருஷ்ண பரமஹம்சராகத் திருநாமம் பெற்ருர்; தம் ஞான வுணர்வுகளை எளிய உவமைகளாலும் நிகழ்ச்சிகளாலும் சொற்பொழிவுகளாக வெளிப்படுத்தினர்.

யோக நூற்பயிற்சி இல்லாவிடினும் **யோக அநுபூதி நிலையினைக் காளிதேவியிடமே முறையிட்டுப் பெற்று மகிழ்ந்தார்;** விரும்பியபோதெல்லாம் மூலாதாரத்திலிருந்து குண்டலினி சக்தியைச் சகசிராரம் வரையில் ஏற்றி ஞானக் காட்சிகளைக் கண்டு களிப்புற்ருர்.

ஆக, இராமகிருஷ்ணருடைய வாழ்க்கையே **இந்திய ஆன்மீக மறுமலர்ச்சியின் வடிவமாயிற்று.** கௌதம புத்தரின் பெருமையைப் பரப்ப அவருக்கு ஓர் ஆனந்தர் அமைந்ததே போன்று, பரமஹம்சரின் பெருமையைப் பாரெங்கும் பரப்ப சுவாமி விவேகானந்தர் அமைந்தார் எனலாம்

**அரவிந்தர் (1872-1950) :** வங்காளத்திலே கல்கத்தாவில் டாக்டர் கிருஷ்ணதன் கோஷுக்கு மகனுய்த் தோன்றினர் அரவிந்தர். தம் ஏழாம் வயதிலிருந்து பதினன்கு ஆண்டுகள் இங்கிலாந்தில் மேனுட்டுக் கல்வி பயின்று உயர்பட்டம் பெற்ருர். இவருக்கு மனைவியாய் வாய்த்தவர் மிருணளினி தேவி.

உலகியலில் உயர்பதவி பெறப் பெற்ருேர்கள் விரும்பினர். ஆனுல், இவரோ இளமைதொட்டே இந்திய விடுதலைக் கனலைத் தம் உள்ளத்தில் வளர்த்து வந்தவர்;

Koviloor Digital Library



எனவே, பேராசிரியர் பதவியில் கூட நெடுங்காலம் ஒட்டாமல் நாட்டு விடுதலை யியக்கத்தில் தீவிரப் புரட்சி செய்தார்; ஆங்கிலேயரால் சிறைப்படுத்தப் பெற்ற நிலையில் சிந்தனைவளஞ் செழித்தது. இந்திய விடுதலை யுணர்வை ஆன்மீகத்துடன் வளர்த்துக் கொண்டு, அருளியலிலும் தனித்தன்மையுடன் புரட்சி காணத் துடித்தார்.

ஆசையையும் ஆணவத்தையும் துறந்து, தனி மனிதனுடைய இன்பதுன்பங்களையெல்லாம் ஈசன் திருவடிகளிலே ஒருவன் ஒப்படைத்து விடவேண்டும்; அத்தகைய முழுமையான அடைக்கலத் தத்துவமே மனிதனுக்கு உகந்தது என நம்பினார் அரவிந்தர்.

தன்னையுணரும் ஆன்மஞானமும் உலகையுணரும் விசுவஞானமும் வெவ்வேறானவையோ மாறுபட்ட வையோ அல்ல; அக வாழ்வும் புறவாழ்வும் மறுமலர்ச்சி யுற்று அவையிரண்டும் இணைந்து வளர்ந்து படிப்படி யாக ஒருணர்வாக ஒன்றிவிடவேண்டும்; அந்நிலையில் விண்ணுலக இன்பஞ் சித்திக்கும். ஆக, ஆன்ம ஞானத் திலேயே அனைத்து ஞானமும் அடங்குமென்று உணர்ந்து போதித்த மகானே அரவிந்தர்.

அரவிந்த ஞானவள்ளல் ஒரு சிறந்த கல்விமான், கவிஞர், அரசியல் தீர்க்கதரிசி, யோகி, நடைமுறை மெய்ஞ்ஞானி என்ற பல சிறப்புகளுக்கு உரியவர். புதுச்சேரியில் அவர் கண்ட அரவிந்த ஆசிரமத்தில் அன்னை யாராக வந்த தெய்வநலயோகி, அரவிந்தர் வகுத்த செந்நெறி யில் தாமும் ஒழுகி, ஆசிரம மக்களையும் இட்டுச் சென்ற பண்பாளர். அவரைப் பின்பற்றிப் பலரும் அருளியலை வழி நடத்தவும் அரவிந்தரது புகழை உலகத்தினருக்கு உணர்த்தவும் முயல்கின்றனர்.

Koviloor Digital Library



பகவத் கீதையில் கூறப்பெற்ற **ஞானயோகம் பக்தியோகம் கர்மயோகம்** ஆகியவற்றை நன்கு பயின்ற அரவிந்தர் அவற்றின் நுண்கூறுகளுள் வேண்டுவன வற்றை இயைத்துப் **பூரணயோகம் - விஞ்ஞானயோகம்-** கண்டுள்ளார். **மனிதன் அதிமன ஆற்றல் (Supra mental force)** பெற்றுப் பூரண யோகத்தால் துன்பங்களைக் கடிந்து ஆன்மீகப் பொலிவு கொள்ளப் பெரிதும் வழி கோலினர். மனம் அமைதியில் தோய்ந்து சலன மற்றிருப்பின் தெய்வநல ஆற்றல் மிக எளிதாகக் கைகூடும்; செயலாற்றல் வேகமும் தென்படும். அந்நிலை யில் மனமானது கருத்துக் குழப்பமோ தவறான உணர்ச்சியோ தொல்லை தரும் எண்ணமோ இன்றி ஒளி பெற்றுக் களிப்புடன் ஒளிருமென்பதனைத் தம் வாழ்வின் அநுபவப் பயிற்சிப் பேற்றால் காட்டி யின்புற்றார்; மனிதவுடலுடன் தெய்வமாகத் திகழ்ந்தார். **அரவிந்த ஆற்றல் அழியாப் பேராற்றல்.** மக்கள் பெரு முயற்சியின்றி அதனை யுணர்ந்து போற்றுதல் இயலாது.

Koviloor Digital Library
கோவிலூர் ஆதீனம்
ACC NO: 2340
R65
கோவிலூர்-630 307

## புத்தர் பொன் மொழி

'யான் கண்ட இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற கொள்கையானது உலகத்தையே உயர்த்த வல்லது. இதனையே உயிர்மூச்சாகக் கொண்ட உத்தமர்கள் வரிசையிலே சிறப்பிடம் கொண்டவர் கௌதம புத்தர். கி. மு. 563 ஆம் ஆண்டில் தோன்றிய சித்தார்த்தர், குலப் பெயரால் **கௌதமராகவும்,** உலகத்திற்குத் தம் விழிப்புணர்வால் வழி காட்டும் ஞானவளத்தால் **புத்தராகவும்** பேர்பெற்று உயர்ந்தார்.

பிற்காலத்தில் நிறை ஞானத் திருவுருவாய் வடிவெடுக்கும் அந்த மகான் **அசோக மர நீழலில் அவதரித் தார்;** அப்படி அவதரித்த நாள் **வைகாசி நிறைமதி நாள்.** அரசமரமாகிய **போதி மரத்து அடியிலே ஞானம் பெற்ருர்,** புத்தராஞர்; அவ்வாறு புத்தரானதும் வைகாசி நிறை மதி நாள். சால மரத்து அடியிலே பரிநிருவாணம் அடைந்தார்; அந்த நாளும் வைகாசி நிறைமதி நாளே. ஆகப், புறச் சூழலிலும் நிறைமதியின் சுடரொளிப் பெரு வெள்ளம். அகச் சூழலிலும் சிந்தனை கனிந்த ஞான நிறைவின் சுடரொளிப் பெருவெள்ளம். என்னே இயற் கையின் திருவிளையாடல்!

மக்களாகப் பிறந்தவர்கள் ஆழ்ந்து சிந்தித்துத் தெளிந்து, இடைவிடா முயற்சியில் ஈடுபட வேண்டும்;

Koviloor Digital Library



தம் வாழ்வை மனத்தாலும் வாக்காலும் செயலாலும் தூய்மைப் படுத்த வேண்டுமென்று மனமார விரும்பினர் புத்தர்; அதற்குரிய நன்னெறியையும் நடைமுறைக் கேற்ப வகுத்துப் பொன்மொழிகளாக வழங்கியுள்ளார்.

புத்தருடைய வாக்கினை ஐயந்திரிபறப் புரிந்து கொண்டால் அதனைக் கைக்கொண்டு வாழ்தல் எளிதாகும்.

பொதுவாக, உலகியலின்பம் நிலையானதென்று நம்பி இன்ப எக்களிப்பிலே வாழ்வது கூடாது; அதற் காக மிகக் கடுமையான விரதங்களை மேற்கொண்டு உடலை வருத்தவும் தேவையில்லை. விதித்த நல்லொழுக் கங்களைப் பின்பற்றினால் போதும்; தம்மைக் கண்மூடித் தனமாக வழிபாடு செய்யவும் தேவையில்லை என்றார்.

புத்தர் கண்ட பேருண்மைகளாகத் துக்கம், துக்க காரணம், துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் என்ற நான்கினைக் கூறுவர். இவற்றுள், துக்க நிவா ரண மார்க்கமாகிய தூயவாழ்விற்கு எட்டு வழிகளைப் புத்தர் இயம்புகிறார்.

அட்டாங்க மார்க்கமாகிய அதனில் நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுளத்தோர் தலைப்பாடு என்பவை அடங்கும். இவற்றை நன்குணரும்போது இவற்றின் முடிமணியாக விளங்குவது நல்லுளத்தோர் தலைப்பாடு என்பது விளங்கும். இதனைச் சம்யக் சமாதி' என்பர். அதுவே தியான மெனப்படும் மேலான நெறியாகும்.

இடைவிடாமல் ஒருமித்த முயற்சியினாலே உடலும் உள்ளமும் ஒருவனுக்குக் கட்டுப்பட்டு விடுமேயானால்.

Koviloor Digital Library



சிந்தனை சிதற வழியில்லை; தியானம் கைகூடுவதால் அறியாமை அகலும்; ஆசையும் மறையும். அப்போது சினத்திற்கோ மயக்கத்திற்கோ வழியில்லை. அறிவானது தூய்மையடைகின்ற காரணத்தால் தூய பேரின்பங் கிட்டும். அந்த நிலையை யடைவதுதான் நிருவாணநிலை; அதுதான் பிறவிப் பெருங்கடலை நீந்தியடைகின்ற பெருஞ்சாதனை என்பதைப் புத்தர் நன்கு விளக்குகிறார். ஈண்டுத் **தம்மபதம்** கூறுவதாவமி : 'சொல்லற்கரிய நிருவாணத்தில் உள்ளம் நிலைகொண்டவனும், காமம் வெகுளி மயக்கம் இவற்றினின்று விடுபட்டு நிறைவினை எய்துகின்றவனுமே பிறவி வெள்ளத்தை எதிர்த்துச் செல்பவனாவான்.' இதனையே திருவள்ளுவர்,

> **'காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்**
> **நாமம் கெடக்கெடும் நோய்'**

என்று கூறிக் காட்டுகிறாரோ என்று நினைக்கத் தோன்றும்.

பௌத்தக் கொள்கையானது பாரத நாட்டிலே வலிவும் பொலிவும் பெறாமல் போனது உண்மைதான். என்றாலும், பாரதநாட்டிலே இந்துமதம் போன்ற பிற மதங்களிலே அக்கொள்கைகளும் பண்பாடும் தவிர்க்க முடியாத வண்ணம் ஒன்றிவிட்டன.

அந்தப் பண்பாட்டின் அடிப்படையிலே மலர்ந்தது தான் பஞ்சசீலக் கொள்கை. அந்த அறவழியை அரசியல் கொள்கையுடன் இணைத்துக் கொண்டு, உலக அரசியலரங்கிலே நம் தேசம் தலை நிமிர்ந்து நிற்கிறது; போரும் பூசலுமில்லாத உலகத்தைப் படைத்துக் காட்டிட—அயராமல் பாடுபட்டு வருகின்றது.

Koviloor Digital Library



புத்தர் ஞானம் பெற்ற நிலையில் கயையிலிருந்து காசிக்கு வந்தார்; அதனருகேயுள்ள சாரநாதம் என்ற பூஞ்சோலையில் தங்கினார். அங்கிருந்து கொண்டுதான் முதன்முதலில் தம் பொன்மொழிகளை உலகத்திற்கு வழங்கினார். அ தா வ து, அறவாழியை—தர்மச் சக்கரத்தைச் சுழல வைத்தார் என்பது வரலாறு.

ஆனால், இன்றைய பாரதத்திலே யாரெல்லாம் மக்கள் நலத்திற்காக எண்ணுகிறார்களோ, இடைவிடாமல் உழைக்கிறார்களோ அவர்களெல்லாம் தங்களைப் புத்தர் அடிச் சுவட்டில் செல்பவர்களாக நினைக்கலாம்; ஆம், அவர்கள் அறிந்தோ அறியாமலோ தர்மச் சக்கரத்தைச் சுழற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஏற்றமிகு அடையாளந்தான் புத்தர் வழங்கிய தருமச் சக்கரம். அதுவே பாரதத்தின் அரசியல் இலச்சினையாகப் பொலிகின்றது; தேசக் கொடியிலும் அமைந்து நாளும் நினைவூட்டுகின்றது.

புத்தர் பெருமான் தம் அறவுரைகளால் மக்களின் மனத்தையும் வாக்கையும் செயலையும் தூய்மைப்படுத்த முயன்றார்; அது காரணமாகத் துன்பத்தினின்றும் மீட்டுப் பேரின்பத்திற்கு வழிகோலினார் அந்த நோக்கத்துடன் மக்களுக்கெனப் படிநிலைகளாக 37 தத்துவங்களைப் போதித்தார். அவை நான்குவிதத் தியானமுறைகள், நான்குவித எத்தனங்கள், நான்குவகை இருத்தி முறைகள், ஐந்து சித்திகள், ஐந்து ஞானப் புலன்கள், ஏழுவித ஞானங்கள், எட்டு மார்க்கங்கள் எனக் கூறப்படுகின்றன. இவற்றின் விளக்கங்களெல்லாம் புத்தரின் தம்மபதம் முதலிய பௌத்த ஆகமங்களில் காணலாம்.

Koviloor Digital Library



தம்மபதம் என்றால் அறத்தின் அடிச்சுவடு என்று பொருளாகும். புத்தரின் அடிச்சுவட்டைப் பின் பற்றினால் தருமத்தின் அடிச்சுவட்டைப் பின்பற்றிய தாகும். இதற்கேற்பப் புத்தரும் 'தர்மத்தைக் காண்பான் என்னைக் காண்பவனாவான்' என்று மொழிந்துள்ளார்.

புத்தரின் பொன்மொழிகளே அறத்தின் அடிப் படையில் அமைந்தவை. பௌத்தக் குழு மொழியில் 'தருமம்' என்பது ஒருவகையில் தெய்வமாகவே கருதப் பட்டு வருகிறது. அதுவும் 'பிரம்ம'மும் ஒன்றே யொழிய வேறில்லை. புத்தர் தம்மைத் தருமத்தின் உடலாகவே கருதினார்; எனவே அதர்மத்திற்கு அப்பாற்பட்ட வராகவே வாழ்ந்தார். பிறருக்கு எடுத்துக்காட்டாகவே வாழ்ந்து காட்டியதால் அவருடைய பொருளுரைகளைப் பின்பற்றுவோர் தொகை நாளும் பெருகியது.

வாழ்க்கை நெறியைப் புத்தர் கூறிவருகையில், கடவுள் இல்லையென்றோ ஆத்மா இல்லையென்றோ, நிலை பேறு இல்லையென்றோ கூறவில்லை என்பது தெளிவு. என்றாலும், சிலர் அவற்றிலே முரண்பாடு கற்பித்து அல்லற் படுகின்றனர். இல்லற நெறியொழுகும் சிராவகர்களுக்காகப் புத்தரால் பஞ்சசீலம் கூறப் பட்டுள்ளது. பஞ்சசீல மென்பது (1) கொல்லாமை. (2) அபரிகிரகம் அல்லது பிறரிடமிருந்து தேவையான பொருள்களை மட்டும் வாங்கிக் கொள்ளுதல். இதில் கள்ளாமை அடங்கும். (3) பிரம்மசரியம் அல்லது புலனடக்கம். இதில் பிறன்மனை நயவாமையும் அடங்கும். (4) சத்தியம் அல்லது வாய்மை. (5) மது அருந்தாமை ஆகியவற்றைக் குறிக்கும். இந்தச் சீலங்களுடன் மேலும் ஐந்து சீலங்களாகிய (1) நடுப்பகல் வேளைக்கு முன்பே மிதமாக உணவு உண்ணுதல், (2) ஆடல் பாடல்களைப்

Koviloor Digital Library



பாராமலும் கேளாமலும் இருத்தல், (3) விலையுயர்ந்த ஆடை அணிகளை அணிந்து கொள்ளாமை, (4) மென்மையும் பகட்டுமில்லாத படுக்கையில் படுத்துறங்குதல்,: (5) பொன்னையும் வெள்ளியையும் ஏற்றுக் கொள்ளாமை ஆகியவற்றைச் சேர்த்துத் 'தச சீலம்' என்பர். இவை பௌத்த பிட்சுகளுக்கென வகுத்த நெறிமுறையாகும்.

'கடலைப்போல் தர்மமும்நிலைத்திருக்கும்; எல்லைக்குள் நிற்கும். கடலானது மரித்த பொருள் எதனையும் ஏற்காது; அதனைக் கரைக்கே ஒதுக்கிவிடும். அதுபோலவே தர்மமும் தீயவனை, ஒழுக்கத்தில் வழுவியவனை, நடத்தை கெட்டவனை, அசுத்தனை, ஐயங் கொண்டுள்ளவனை, துறவு வேடத்தில் கபடமாக நடிப்பவனை, உள்ளத்தில் புரையுள்ளவனை, நசைகளில் சிக்கியவனை ஒதுக்கி விடும்.'

தர்மத்தைப் போதிப்பதைவிட மேலானதொரு தான மில்லை என நம்பியவர் புத்தர். எனவே, தர்மத்தின் அடிப்படையிலே ஆன்மீக வளர்ச்சிக்கான நல்ல செயன் முறைத் திட்டத்தை வகுத்தளித்தார். மக்கள் தம் அநுபவத்தில் பௌத்த நெறியின் மேன்மையை உணரவும் பரப்பவும் வேண்டுமென்றே புத்தர் விரும்பினார். எனவே, தம் கொள்கைகளை ஆகமங்களாக்கி, அந்நிலையில் ஒரு மத நிறுவனத்தை அமைக்க வேண்டுமென்றும் நினைக்கவில்லை. மனநிறைவைக் குலைக்கும் வாதப் பிரதிவாதங்களிலே வீணாக ஈடுபடுவதையும் கண்டித்தார்; அதனால், ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதில் தடையுண்டாகும் என்று எச்சரித்தார்.

தம் சீடர்களிடம் உரையாடுகையில் புத்தர் கூறியவையெல்லாம் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கவை.

Koviloor Digital Library



எந்தப் பொருளையும் யார் கூறுகின்றார் என்று பார்க்காமல், நியாய முறையிலே சீர்தூக்கிப் பார்த்துத் தெளிவு கொள்ள வேண்டுமென்றார். ஒருமுறை சாரி புத்தர் என்னும் சீடர், புத்தரைப் பார்த்துப் 'பகவானே! உம்மைவிட மேலான ஞானி உலகில் உண்டா?' என்று மனப் பூர்வமாகக் கூறினார். ஆனால், புத்தரோ அதற்காக மகிழவுமில்லை; ஏற்றுக் கொள்ளவுமில்லை. ஒவ்வொருவரும் சொந்தச் சிந்தனைக்கு இடந்தரவேண்டு மெனப் பணித்தார். இதனை நோக்குகையில் திருவள்ளுவர் கூறிய இரண்டு குறட்பாக்கள் நினைவிற்கு வருகின்றன.

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு'

என்ற குறளும்,

'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'

என்ற குறளும் புத்தரின் வாய்மொழியினை எவ்வாறு நிழலிட்டுக் காட்டுகின்றன என்பது புலனாகும்.

இல்லறத்தாரை நோக்கிப் புத்தர் வழங்கிய அற வுரைகளுள் பாடலிபுரத்து நிகழ்த்திய அறவுரை குறிப் பிடத் தகுந்தது.

"இல்லறத்தாரே! தீவினை புரிந்தவர்களுக்கு ஐந்து வகைத் துன்பமுண்டு. தீச் செயலைப் புரிந்தவன் முதலில் செல்வத்தை யிழந்து வறுமையடைகிறான். இரண்டா வதாக, அத் தீச்செயல் ஊரெலாம் பேசப்பட்டுத் துன்பப் படுகிறான். மூன்றாவதாக, அவன் போகுமிடமெல்லாம் அவனுக்கு வரவேற்பில்லை. நான்காவதாக, அவன்

Koviloor Digital Library


இறக்கும் போது இனி என்ன நடக்குமோ என்று அஞ்சிச் சாகிருன். முடிவில் அவன் உடல் அழிந்த பின்னும் அவன் துன்பப் பிறவியிலேயே உழலுகிருன்.

ஆனுல், நல்வினை புரிந்தவன் ஐந்து வகையான நன்மையைப் பெறுகிருன். (1) அவன் தொழிலில் ஊதியம் கிடைக்கிறது. (2) அவன் பெயர் நன்ருகப் பேசப்படுகிறது. (3) எந்த இடத்திற்குச் சென்ருலும் அவனுக்கு நல்ல வரவேற்புக் கிடைக்கிறது. (4) இறக்கும் போது மனநிறைவாக இறக்கிருன். (5) இறந்த பின்னரும் அவன் சித்தம் அல்லற்படாமல் இன்பந் துய்க்கிறது.

ஆக, இவ்வாறெல்லாம் நல்ல வண்ணம் வாழ வழி வகுத்தவர் புத்தர் பிரான்.

கௌதம புத்தர் போதித்த அறவுரைகளுள் ஆத்மா பற்றிய கருத்துக்கள் தெளிவுக்கு வழிகோலும். 'தான்' எனும் ஆன்மா சிறிய தென்றும், அழகுடன் என்றும் அழியாதிருக்கும் ஆன்மா பெரியது என்றும் கருதினுர் புத்தர்.

'ஆத்மாவே 'தான்' என்பதனை ஆளும் தலைவன்; அவனன்றி வேறு தலைவன் எவன் உள்ளான்' என்று கேட்கிறது தம்மபதம். மேலும் 'ஆன்மாவைக் கொண்டே ஆன்மாவை விழிப்புறச் செய்வாய்; தன்னைக் கொண்டே ஆன்மாவை ஆராய்வாய். தானே தன் ஆன்மாவின் நாதன், புகலிடம். ஆதலால், குதிரையை வணிகன் பழக்குவதுபோல் அதனைப் பழக்கிடுவாய்' என்றும் பேசுகிறது. மேலும் தம்மபதமானது பேரான்மாவைப் பற்றிச் சிந்தித்து 'யோகத்திணுல் ஞானம் விளைகிறது. யோகமின்மையால் ஞானம் மறைந்திடும்.

Koviloor Digital Library


தோன்றுவது தோன்ருமை ஆகிய இவ்விரு வழியினை உணர்வோன் ஆத்மாவிற்கு உறைவிடம் தந்து அறிவிலே வளர்ந்திடுவான்' என்றும் கூறுகிறது.

இந்த அடிப்படையிலே புத்தர் பொன்மொழியை எடுத்தியம்பும் **சம்யுத்த நிகாயம்** எனும் ஆகமமானது, 'இந்தப் பேரான்மாவின் தொடர்பிராமல் இந்த அட்டாங்கவழி நிறைபயன் தராது' என்றும், புத்தரே பேரான்மாவுடன் இணைந்து நின்றவரென்றும் கூறுகிறது. இவ்வாருன சாதனையால் 'பிறவி நிலையிலிருந்து பிறவாமையை எய்தலாம்; மூப்பினின்றும் விடுபடலாம்; மரணத்தினின்றும் மீளலாம்; துன்பத்தினின்றும் தப்பலாம். அழுகை, கவலை, ஏக்கம் இவற்றினின்றும் உய்யலாம்' என்று புத்தர் நன்னெறி காட்டுகிருர். இதற்குப் படிமுறையாகப் புத்தர், அவித்தை யென்னும் பேதைமையினின்றும் விடுபடுமாறு வேண்டுகிருர்.

'ஆன்மாவை ஒளிவிளக்காகக் கொள்வாய், முயன்றெழுவாய், தெளிந்திடுவாய். மாசு ஒழிந்ததும், பற்று அறுந்ததும், மேலோர் செல்லும் பொன்னுலகு அடைவாய்' என்று விரைவு படுத்துகிருர் புத்தர்.

இதனுல், ஆன்மாவையே ஒளிச் சுடராகக் கொண்டு மக்கள் அதனைச் சரணடைய வேண்டும்; தர்மத்தையே ஒளிவிளக்காகக் கொண்டு அதனையும் சரணடைய வேண்டும் என்ற உணர்வு பிறக்க வைக்கிருர் ஆசியப் பேரொளி. மேலும், இதன் வாயிலாகப்—பிறவி என்பது என்ன? துக்கம் கவலை புலம்பல் இவற்றின் காரணந் தான் என்ன? பிறப்பிடம் எது? என்ற புதிர்களுக் கெல்லாம் விடை கிடைக்குமல்லவா?

புத்தர் படிப்படியே ஞானக் கருவூலத்தைப் பிடகம் பிடகமாகக்- கூடை கூடையாக - வாரி வழங்க முற்படு

Koviloor Digital Library


கிறுர். அவை வினய பிடகம், சுத்தி பிடகம், அபிதர்ம பிடகம் என்று அமைந்து, புத்தத்தையும் தன்மத்தையும் சங்கத்தையும் இடையூறின்றிக் காக்கின்றன; மும் மணிக் காப்பாக அமைந்த அவற்றைத் திரிபிடக மென்பர். அவற்றைக் காலமெல்லாம் ஆராய்ந்து பௌத்தர்கள் தலைமேற் கொள்வார்கள்.

எல்லாவற்றிற்கும் அடிப்படையாகத் தன்முயற்சி வேண்டுமென்பதே புத்தர் பொன்மொழியின் சார மாகும்.

ஆன்மீக ஆராய்ச்சியின் போது புத்தர் மக்களைப் பார்த்துத் 'தானே செய்யும் தீமையால் தானே துயர் அடைவான். தானே தீமை செய்யாதிருந்தால் தன்னு லேயே தூய்மையடைவான். மாசும் மாசின்மையும் தன்னுள்ளே நிகழ்வன. ஒருவனுல் மற்றவன் தூய்மை யுருன்' என்றும்,

'தன்னைத் தான் அடக்கியவனே மற்றவரை அடக்க வல்லவன். தன்னைத் தான் அடக்குவது மிகக் கடின மெனக் கூறுவர்' என்றும்,

'நீங்கள் படும் துன்பத்துக்கு நீங்களே காரணம். யாரும் உங்களைத் துன்புறுத்துவதில்லை. உங்கள் பிறப்புக்கும் இறப்புக்கும் நீங்களே காரணம். வேறு யாரும் அதற்குக் காரணமல்லர். நீங்கள் சம்சார சக்கரத்தில் சுழல்வதற்கும், துன்பம் நிறைந்த அதன் ஆரக்கால்களைக் கட்டி முத்தமிடுவதற்கும், அதனுல் கட்டுண்டு கண்ணீர் விடுவதற்கும், அதன் மையமான சூனியத்தில் அரைபடுவதற்கும் நீங்களே காரணம்; வேறு யாரும் அல்லர்'' என்றும் மிகத் தெளிவாகப் போதிக்கின்றுர்.

Koviloor Digital Library


இவ்வாறுன புத்தர் பொன்மொழிகளைப் பார்க்கையில் புறநானூற்றுச் சொற்ருெடர்,

'தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்ருே ரன்ன'

என்பதும், நாலடியார்ச் செய்யுளாகிய

'நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானுந் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்—நிலையினும்
மேன்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்'

என்பதும் நினைவிற்கு வரும். பெருஞ் சிந்தனையாளர்களெல்லாம் எண்ணத்திலும் வாக்கிலும் செயலிலும் ஒத்துத்தானே செல்வார்கள்? இதுவன்ருே ஒருமைப்பாடு!

Koviloor Digital Library

## திருவாசகம்

ஆண்டவன் திருவருளாலே அளிந்த மனத்தினைக் கொண்டவர் மணிவாசகப் பெருமான். அவர் தம் அருளனுபவத்தை உலக மேன்மைக்காகத் திருவாசகமாக வடித்தெடுத்துத் தந்துள்ளார். தில்லைச் சிற்றம் பலவனுகிய ஆடல்வல்லானே அதனைத் தன் கைப்பட எழுதிக் கைசாத்துமிட்டுத் தந்துள்ளான் என்றால் அதன் பெருமையை என்னென்பது?

'திருவாசகத்திற் குருகாதார் ஒரு வாசகத்திற்கு முருகார்' என்ற அநுபவ வாக்கு அந்த நூலின் கனிவைப் புலப்படுத்தும். சைவ நன் மக்களால் அது சிகாமந்திர மாகவே மதிக்கப் பெறுகின்றது. சைவத் தோத்திரங் களிலும் அதற்குத் தலைமையிடம் தரப்பெறுகின்றது. அத்தகைய திருவாசகத்திலே திருச்சதகமானது மிகச் சிறந்த பகுதியாகும். அது பக்தி வைராக்கிய விசித்திரத்தை உள்ளுறையாகக் கொண்டது. அஃதாவது, இறைவனிடத்துப் பற்றையும், உலகப் பொருள்களிடத்துப் பற்றின்மையையும், இவ்வாறான நிலைகாரணமாகத் தோன்றும் பொலிவையும் உணர்த்தி நிற்கும். அதனுள் ஒவ்வொரு பாசுரமும் சிவஞான முதிர்ச்சியால் வெளிப்பட்ட தித்திக்கும் தெள்ளமுத மாகும். கேட்பவர்களைக் காந்தம் போல் ஈர்த்து

Koviloor Digital Library



நன்னெறிப்படுத்தும் பாங்குடையதாகும். அந்த அடிப்படையிலே இந்தப் பாசுரத்தைச் சிந்தனையமுதமாகச் சுவைப்போம்.

**'ஆமாறுன் திருவடிக்கே**
**யகங்குழையேன் அன்புருகேன்**
**பூமாலை புனைந்தேத்தேன்**
**புகழ்ந்துரையேன் புத்தேளிர்**
**கோமான்நின் திருக்கோயில்**
**தூகேன்மெழுகேன் கூத்தாடேன்**
**சாமாறே விரைகின்றேன்**
**சதுராலே சார்வானே'** (14)

இதனுள், மணிவாசகர் சிவபரம்பொருளை ஆர்வமுடன் சிந்திக்கிறார். 'புத்தேளிர் கோமான்,' அஃதாவது, 'தேவாதி தேவனே!' என்று அழைக்கிறார். அவ்வாறு அழைக்கும் போதுகூட, முந்திக் கொண்டு தம் ஆற்றாமையை — இயலாமையைப்—பக்குவமில்லாத் தன்மையை இறைவனிடமே சொல்லிவிட வேண்டுமெனத் துடியாய்த் துடிக்கிறார். அதுவும் எவ்வாறு?

அல்லும் பகலும் இறைவனையே நினைந்து நினைந்து அலமந்து துடிக்கின்ற வாசகர் ஆண்டவன் திருவடிக்கு ஆளாகும் வண்ணம் மனப்பக்குவம் பெறவில்லையாம்! மனங்கனியவில்லையாம்! அன்பினாலே நைந்து நைந்து உருகவில்லையாம்! இதனை,

**'ஆமாறுன் திருவடிக்கே**
**யகங்குழையேன் அன்புருகேன்'**

எனக்கூறும் அவரது வாக்கால் உணரலாம்.

அன்பின் அடிப்படையிலே மனத்தால் குழைந்து நிற்பதும் உருகிநிற்பதும் மணிவாசகருக்கு இயலவில்லை

Koviloor Digital Library



யென்றே வைத்துக் கொள்வோம்; இறைவனுக்குப் பூமாலை சூட்டிப் பார்த்து அவனுடைய பெருமைகளை யெல்லாம் பாமாலையாக அணிவித்து, அஃதாவது வாயாரப் புகழ்ந்து பாடித் தம் கடமையைச் செய்யலா மல்லவா?

அழுது அடியடைந்த அன்பரும், தம் கண்ணீர்ப் பொய்கையிலே திருவாசகத் தாமரையை மலர்வித்து, அதன்மீது இறைவனையே அமரச் செய்த மனிதப் புனிதர் மணிவாசகர்—சொல்லுகிறார், தம்மால் இயல வில்லையாம்!

அதனைப் **'பூமாலை-புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன்'** எனவரும் அவரது வாக்கினால் காணலாம்.

சரி, மனத்தாலும் வாக்காலும் மணிவாசகருக்கு இறைபணி புரிய இயலவில்லை யென்றே வைத்துக் கொள்வோம்; திருப்பெருந்துறையிலே திருக்கோயில் கட்டிக் கோயில் வழிபாடு செய்த அவர் அதனைக் கூடவா மறந்துவிட்டார்?

இறைவனை நோக்கி மணிவாசகர் தொடுத்துச் சொல்லுகிறார்: 'ஈசனே! உன் திருக்கோயிலுக்கு வந்து திருவலகிட்டுத் தூய்மை செய்யவில்லை, தரையை மெழுகித் திருப்பணி புரியவில்லை, என்றால் எதுவுமே முடியவில்லையென்றாலும், உன்னை நினைத்து ஆனந்தக் கூத்தாவது ஆடியிருக்கலாம். அதுவுஞ் செய்ய வில்லையே!...... ஆக இவற்றையெல்லாஞ் செய்யாது ஏதோ அறிவுள்ளவன் போலத் திறமையுடன் உன்னை யடைதற்கு முற்படுகிறேன். பிறவிப் பயனையடைதற்கு முந்தாது இறந்துபடும் வழியிலே செல்லும் என் அறிவீனத்தை யென்னென்பது?

Koviloor Digital Library



இவ்வாருன கருத்தூற்ற மானது,

'...........புத்தேளிர்
கோமானின் திருக்கோயில் தூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே'

எனவரும் மணிவாக்கால் உணரலாம்.

இந்தப் பாசுரத்தினைச் சிந்திக்கும்போது, இதன் அடித்தளமாக,

'அன்போ டுருகி யகங்குழை வார்க்கன்றி
என்பொன் மணியினை எய்த வொண்ணுதே' (272)

என்ற திருமந்திரவாக்கு நினைவிற்கு வரலாம். மேலும்,

'நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி' (245 : 3)

என்ற அப்பரடிகள் திருவாக்கும் நினைவிற்கு வரலாம்.

Koviloor Digital Library

## திருமந்திரம்

தமிழ்நாடு செய்த தவப்பயனுல் ஞானிகளும், சித்தர்களும் யோகியர்களுமாகிய அருளாளர்கள் வாழையடி வாழையாகத் தோன்றிச், சிந்தனை யமுதத்தை—ஆன்மீகச் செழிப்பினை - மக்களுக்கு வாரி வாரி வழங்கியுள்ளார்கள். அந்த வரிசையிலே இன்றைய சிந்தனைக்கு இலக்கியமாகவுள்ளவர் திருமூலர். திருவா வடுதுறையில் தங்கிப் பல்லாண்டுகள் தவமிருந்து, ஆண்டுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் பாடல்களைப் பாடியுள்ளார். எங்கும் எக்காலத்தும் இறைவனை யடைந்து உய்ய வேண்டுமென்ற குறிக்கோளே உயிரோட்டமாக மனத்திலே யிருத்தல் வேண்டும்; இதுவே திருமந்திரத்தின் சாரமாகும். சாத்திரமாகவும், தோத்திரமாகவும் வாழ்க்கை நெறி நூலாகவும் அமைந்துள்ள இதனைத் **திருமந்திரமாலை** யென்றும் கூறுவர். இதனுள் ஒரு பாடலை இன்றைய சிந்தனை யமுதமாகப் பருகிச் சுவைப்போம்.

**படமாடுங் கோயில் பகவற்கொன் றீயில்**
**நடமாடுங் கோயில் நம்பர்க்கங் காகா**
**நடமாடுங் கோயில் நம்பர்க்கொன் றீயில்**
**படமாடுங் கோயில் பகவற்க தாமே.'** **(1857)**

வாழ்க்கையில் தர்மமாகிய அறவுணர்வு வேரூன்றி நிற்க வேண்டும். சமய வாழ்க்கையிலும் அறவுணர்வு

Koviloor Digital Library



தேவை; சமுதாய வாழ்க்கையிலும் அறவுணர்வு தேவை. சமயத்தை மறந்த சமுதாயத்தாலோ, சமுதாயத்தை மறந்த சமயத்தாலோ பயனில்லை. இவ்விரண்டினையும் இணைத்துச் செல்லும் போதுதான் மானுட வாழ்க்கை மாட்சி பெறுகிறது. இக்கருத்தினை நன்கு வலியுறுத்த நினைத்த திருமூலர் இறைவனைப் **படமாடுங்கோயில்** பகவரென்றும், மக்களை **நடமாடுங் கோயில்** என்றும் அழைக்கிறார்; அன்பே சிவமென்ற தத்துவத்தில் மக்களையே மகேசனாக நினைத்துத் தொண்டு புரியத் தூண்டுகிறார்.

'எந்தையே ஈசா **உடலிடங் கொண்டாய்'**
என்ற மணிவாசகர் வாக்கும்,

'எவ்வுயிரும் பராபரன் சந்நிதியாகும்
**இலங்குமுயிர் உடலனைத்தும் ஈசன்கோயில்'**
என்ற பட்டினத்தார் வாக்கும்,

'காயமே கோயிலாகக் **கடிமனம்** அடிமையாக'
என்ற அப்பர் வாக்கும், ஈண்டு இயைத்துச் சிந்தித்தற் குரியன. இதனைச் சிறிது விளக்கமாகக் காண்போம்.

சித்திர வேலைப்பாடுடைய மாடக் கோயிலில் குடி கொண்டிருக்கும் இறைவனுக்குப் படையலிடுகிறோம்; அந்தப் படையற் பொருளெல்லாம் சிவனடியார்களுக்குப் போய்ச் சேர்வதில்லையாம். நடமாடுங் கோயில்களாக விளங்கும் அரனடியார்களுக்கு மகேசுர பூசையாகச் செய்யும் அமுது படையலெல்லாம் இறைவனுக்கு உறுதியாகப் போய்ச் சேருமாம்.

அரனுக்கு ஒன்று அளித்தால் அடியாரைச் சென்று சேரும் என்று நம்பவேண்டுவதில்லை; ஆனால் அடி

Koviloor Digital Library



யார்க்கு ஒன்று அளித்தால் அரனுக்குக் கட்டாயம் கிட்டுமென்பது திருமூலர் நம்பிக்கை. அஃதாவது இறைவனுக்குச் செய்யும் பூசையை விட அடியார்க்குச் செய்யும் பூசை சிறந்ததென்பது திரண்ட கருத்து.

'படமாடுங் கோயில்' என்று குறிப்பிட்டுள்ளமையால், உடம்பிலுள்ள மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை ஆகிய ஆறு ஆதாரங்களையும் படம் பிடித்தாற் போலச் சிற்பஞ் செறியப் பெற்ற கோயிற் கலையைச் சிந்திக்க வைக்கிறார்; இதனால், யோக நுட்பத்தைக் குறித்ததாகவும் கொள்ளலாம். திருக்கோயில் கட்டும் போது சிற்பிகள் மானுடவுடலின் பிரதிபிம்பமாகத்தான் வடிவமைப்புத் தந்துள்ளனர் என்ற சிற்ப இரகசியமும் இதனால் புரியலாகும். மேலும், இதனை உய்த்து உணரும் வகையில் பிறிதோரிடத்திலே,

**'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்**
**வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே'**

என்றும் திருமூலர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களுள் ஒவ்வொருவரையும் சிவனே குடி கொண்டு நடமாடுங் கோயிலென மதித்துப் போற்றுதல் வேண்டும். சிவனடியார்கள் சிவனாகவே மதித்துப் போற்றுதற்குரியவர்கள் என்பதால், சைவ வேடத்திற்கும் அதன் வாயிலாகச் சமயத்திற்கும் மதிப்பளிக்கிறார் திருமூலர்; மேலும், மானுட வடிவிற்குத் தரும் மதிப்பால் சமுதாயத்தையும் மதிக்க வழிகோலுகிறார்.

Koviloor Digital Library



மக்கள் சமயவழிச் சிந்தனையால் அவர்கள் கண்ட கலைப் படைப்பே மானுட வடிவமாகும்; நடமாடுங் கோயிலாகும்; அதனுள் சீவான்மா குடியிருக்கக் காணலாம்.

சீவான்மாவை விடப் பரமான்மா உயர்ந்தது என்பது சமயவழிக் கொள்கையாகும். அந்த அடிப் படையில் பார்த்தாலும், சீவான்மா கட்டிய படமாடுங் கோயிலை விட, பரமான்மா கட்டிய நடமாடுங்கோயில் சிறந்ததல்லவா? பெரும் பொருட்செல்வராகப் பல் லோருக்கும் வழங்கியுண்ணுகின்ற வாழ்க்கை வசதி யில்லா விட்டாலும், கையில் கிடைத்ததைக் கொண்டு ஆன்மீகத்தையும் அறத்தையும் வளர்த்துக் கொள்ள வழிகோலுகிறுர் திருமூலர்:

**'யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை**
**யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை**
**யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி**
**யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.'**

என்பது சமயத்தையும் சமுதாயத்தையும் இணைத்துச் செல்லும் ஆன்மீக அறநெறியாகும்; நடமாடுங்கோயிற் பூசனையால் படமாடுங் கோயிற் பகவரை இன்புறுத்தும் நன்னெறியாகும்.

Koviloor Digital Library

## தேவாரம்

சிவ பரம்பொருளை ஞானத்திலே சரியை நெறியில் அடைந்தவர் திருநாவுக்கரசர்; கிரியை நெறியில் அடைந்தவர் திருஞான சம்பந்தர்; யோகநெறியில் அடைந்தவர் சுந்தர மூர்த்தி நாயனுர்; ஞான நெறியில் அடைந்தவர் மாணிக்கவாசகர். முதல் மூவரும் பாடியருளிய பாசுரங்களை மூவர் தேவார மென்பார்கள். என்றாலும், சிறப்பாகத் தேவாரம் பாடியவர் திருநாவுக்கரசரே யாவார். அவர் பாடியருளிய பாசுரங்கள் 49000 என்பர்; அவற்றுள் இன்று கிடைக்கும் 3066 பாசுரங்களுள் ஒன்றினைச் சிந்தனை அமுதமாகக் கொண்டு பருகிப் பயன் கொள்வோம்.

'முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள்தன் னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே'

பக்தி நிலையைப் படிப்படியாக வளர்த்துக் கொண்டே சென்று அருட்சான்றோர்கள் உச்சக்கட்ட

Koviloor Digital Library


மாக **'நாயக நாயகி பாவத்'**தில் திளைத்திருக்கிறார்கள்; துறவிகளாக இருந்தாலுங்கூடக் கடவுட் காதலால் தெய்விக வானத்திலே சிறகடித்துக் களித்திருக்கிறார்கள். அவ்வாறான அகத்திணைப் பாங்குடைய பாடல்களில் இதுவும் ஒன்றாகும்.

திருவாரூர்த் தியாகேசப் பெருமான்மேல் தீராக் காதல் கொண்ட தலைவி யொருத்தி தன் வசமிழந்து மெய்ம்மறந்து நைகின்றாள்; அவனுக்கே ஆட்படுகிறாள்; தலையன்புடைய அவளது தன்மைகளை யெல்லாம் தோழி, செவிலியிடம் கூறி அறத்தொடு நிற்கிறாள். இவ்வாறான அகத்துறையமைந்த இப் பாசுரத்திலே சிந்தனைகள் அலையலையாகப் பொங்கி யெழும்புகின்றன.

காதலால் அலைபாய்கின்ற தலைவி, தன் ஆன்ம நாயகனாகிய தியாகேசப் பெருமான் பெயரைக் கேட்கிறாளாம்; பெயரைக் கேட்டதும் இருப்புக் கொள்ளவில்லை; ஆவலுடன் அவனுடைய திருமேனி வண்ணத்தை—ஆம், பொன் வண்ணப் பொலிவினைக் கேட்டுப் பூரித்துப் போகிறாள். அத்துடன் நின்றாளா? அமைதி கொள்ள முடியவில்லை. பேரார்வத்துடன் அவனுடைய ஊராகிய திருவாரூரைக் கேட்டு மகிழ்கிறாளாம். பெயரையும் வண்ணத்தையும் ஊரையும் தெளிவாகத் தெரிந்து கொண்ட நிலையிலே அவனுக்கே ஆட்பட நினைத்துப் பித்துப் பிடித்தவளாகிறாள்; ஆம், பிச்சியாக ஆகிவிடுகிறாள்.

காதல் பித்துத் தலைக்கேறிய பிறகு உலகியலுக்கு இடமேது? தம் உயிராகவே மதித்து வளர்த்த தாயையும் தந்தையையுங் கூடத் துறந்து ஒதுக்க முற்பட்டுவிடுகிறாள்; பிற உலக ஆசாரங்களையெல்லாம் வெறுத்து

Koviloor Digital Library


ஒதுக்கி விடுகிருள். தன்னையே மறந்து தன் தலைவனையே நினைக்கும் நினைப்பிலே ஓடோடிச் செல்கிருள்; அவனை யினங் கண்டுகொண்டு அரவணைப்பிலே ஒன்றிவிடுகிருள்; தனக்கென ஒன்றின்றித் தலைவனே எல்லாமும் என்ற அந்த அத்துவிதக் களிப்பினை யென்னென்பது? இதனைத்தான் முத்தாய்ப்பாகத் திருநாவுக்கரசர்,

**'தன்னை மறந்தாள்தன் ஞமங் கெட்டாள்**
**தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே'**

எனப் பாடிக் களிக்கிருர்.

இதனுள் நாமங்கேட்டல், வண்ணங் கேட்டல், ஆரூர் கேட்டல், பிச்சியாதல் ஆகிய நான்கும், முறையே கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் ஆகிய படிமுறைகளாகத் தத்துவ நுட்பங் காண்பார்கள். மேலும்,**சிவ**தீட்சை வழியே சரியை கிரியை யோக ஞான நெறிகளையும் அவை சுட்டுவதாகக் கொள்வார்கள்; என்ருலும், இவ்வரிய சமயக் கருத்துக்களெல்லாம் காதற்பாங்குடன் கூறும்போது அவை கேட்போரின் மனத்தைச் சுண்டியிழுக்கின்றன.

இந்தப் பாசுரத்துடன் மணிவாசகர் வாக்கினையும் இயைத்துப் பார்க்கும்போது இதன் மேன்மை இன்னும் பளிச்சிடுகின்றது. மணிவாசகர், ஆன்மீக நிலையில் தாமே ஒரு பெண்ணுக மாறி ஆன்ம நாயகனைப் பரவுகிருர்; திருவெம்பாவையில்,

**'ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்ருர் ஆரயலார்**
**ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்'** (10)

எனக் குறிப்பிடுதலால் இதனை யுணரலாம். ஆனுல், தம் திறத்திலே எல்லாவற்றையுந் துறந்து, கனிந்துருகி

இறைவனுக்கு ஆட்படத் துடிக்கிறார். இதனைத் திருப் புலம்பலில்,

'உற்றாரை யான்வேண்டேன்
ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன்
கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங்
கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக்
கசிந்துருக வேண்டுவனே'

என ஆதங்கத்துடன் பாடுதலால் அறியலாம். ஆக நாயக நாயகி பாவம் பக்தி மலைத்தொடரின் கொடுமுடி யெனலாம்.

Koviloor Digital Library

# இராமகிருஷ்ண பரமஹம்ஸர்

## *நல்லறங்கள் — தூய்மை*

ஞான பூமியாகிய பாரதநாட்டின் தவப்புதல்வராக - மக்களின் சமயப் பண்பாட்டுப் பேரியல்பினை உணர்த்தும், நல்லாசானாக — மக்களை வாழ்வாங்கு நன்னெறியில் வாழ வைக்கும் நல்லறத்தின் காவலராக — மக்களைப் பரம்பொருளிடத்து முறையாய் இட்டுச் செல்லும் பேரருட் செல்வராக — காமமோ பொருளாசையோ சிறிதும் கட்டுப்படுத்த முடியாத — ஆனால், ஆன்மீக அடக்கத்தின் திருவுருவமாக விளங்கியவர் பகவான் இராமகிருஷ்ணர்.

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் உறுதிப் பொருள்கள் என்று கூறுவார்கள். எல்லாவற்றிற்கும் அடிப்படையாக விளங்குவது அறம் அல்லது தர்மமாகும். திருவள்ளுவர் "மனத்துக்கண் மாசிலனுதல் அனைத்தறம்" என்று கோடிட்டுக் காட்டுவார். உலகியலுக்கும் சரி, ஆன்மீகத்துக்கும் சரி, மனத் தூய்மையே அடிப்படை அறமாகும். அறத்தான் வருவதே இன்பம் என்பதை யுணர்ந்து நடைபோடும் எந்த நாடும் வளங்கொழிக்கும்; நாட்டின் அறமோ தனிப்பட்ட மாந்தர் தம் அறவுணர்வைப் பொறுத்தது.

Koviloor Digital Library



உலகத்தில் தீயவற்றினின்றும் நீங்கி உண்மை யிலும் நன்மையிலும் தலைப்பட வேண்டுமென்ற உணர்வு மாசற்ற மனம் படைத்த நிலையில்தான் சாத்தியமாகும்.

தூய மனத்தால்தான் பொருள்களையே நன்கு மதிப்பிட முடியும். ஒவ்வொருவனும் தன் தன் அறிவிற் கேற்பப் பொருள்களை மதிப்பிடுகிருன். இதனை யுணர்ந்த இராமகிருஷ்ணர் வேடிக்கையான நிகழ்ச்சியொன்றைச் சித்திரித்துக் கூறுகிருர்.

செல்வந்தன் ஒருவன் தன்னிடமிருந்த வைரத்தை ஒரு வேலையாளிடம் கொடுத்துக் கடைத்தெருவில், முதலாவதாகக் கத்தரிக்காய்க் கடைக்காரனிடம் காட்டி அதன் விலைமதிப்பைஅறிந்து வா என்று சொல்லியனுப் பினுன். கத்தரிக்காய்க் கடைக்காரன் நன்ருகப் புரட்டிப் பார்த்துவிட்டு, அதற்குப் பெருமதிப்பாக ஒன்பது சேர் கத்தரிக்காய் தருவதாகக் கூறினுன். பிறகு, அதே வைரத்தை இரண்டாவதாக ஒரு துணிக்கடைக் காரனிடம் கொண்டு போய்க் காட்டியதில் அவன் உயர்மதிப்பாகத் தொள்ளாயிரம் ரூபாய் தரச் சம்மதித் தான். தொடர்ந்து, அதே வைரத்தை, மூன்ருவதாக இரத்தினக்கடை வணிகனிடம் கொண்டு போய்க் காட்டியதில், அவனே கையில் எடுத்துப் பார்த்ததும் அதன் பெறுமானமாக ஒரு லட்சரூபாய் என்ருன். இங்ஙனம், ஒரு பொருளுக்கு மதிப்புப் போடுதலிலே அவரவருடைய தரம் வெளியாகிறது.

அந்த வைரத்திற்கு நிகரானது மனிதனுடைய வாழ்வு. ஒருவன் கூலி வேலை செய்தல் என்னும் மதிப்பு அதற்குத் தருகிருன். மற்ருெருவன் எழுத்தர் வேலை செய்தல் என்னும் மதிப்பு அதற்குத்தருகிருன். பணக்காரனுதல்

Koviloor Digital Library


என்னும் மதிப்பை இன்னொருவன் கொடுக்கிறான். **உலகியலின்பத்தை** யனுபவித்தல் என்னும் மதிப்பைப் பிறிதொருவன் கொடுக்கிறான். ஆனால் **கடவுள் மயமாக்குதல்** என்னும் அருமையான மதிப்பை யாரோ சிலர் தான் கொடுக்கின்றனர்.

மேலும், உலகத்தில் எது உண்மை எது பொய் என்பதே பலருக்குப் புரிவதில்லை. இதையுணர்ந்த திருவள்ளுவரும்,

**'பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்**
**மருளானும் மாணுப் பிறப்பு'**

என்று கூறிச் செல்கிறார்.

மனத்தூய்மையால் கடவுட் காட்சியைத் தாம் கண்டு, பிறருக்கும் காட்ட நினைக்கிறார் பரமஹம்சர்.

ஒருவன் தன் ஊனக் கண்களால் கடவுளைக் காண்பதென்பது இயலாது. நன்னெறிப் பயிற்சியால்-ஆன்ம சாதனத்தின் விளைவால் – ஒருவனுக்கு ஞானக்கண் உண்டாகிறது. பக்குவ மறிந்து அருச்சுனனுக்குக் கண்ணன் ஞானக்கண்ணைக் கொடுத்தருளினான். அதனால், அவனுக்கு மனக்குழப்பம் தொலைந்தது; கண்ணனுடைய விசுவரூபத்தைக் காணும் நற்பேறு வாய்த்தது.

எனவே, நாம் படைத்துள்ள பொறி புலன்களைக் கொண்டும், மனம் புத்தியைக் கொண்டும் இறைவனைக் காணமுடியாது என்பது தெளிவு; மனந்தூய்மையாகும் போது அத்தூய மனமே ஞானக்கண்ணாக நமக்குத் துணை நின்று கடவுட் காட்சியைக் காணச் செய்கிறது.

Koviloor Digital Library



தூய மனம் வாய்க்கின்றபோது மிகுதியான பேச்சுக்கு இடமில்லை. வாழ்க்கையின் குறிக்கோளையடைவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருத்தல் வேண்டும்.

இராமகிருஷ்ணர், விவேகத்தாலும் வைராக்கியத்தாலும் மனத்தைத் தூய்மைப் படுத்திக் கொண்டார். கூர்வாளும் அதன் உறையும் எப்படி வெவ்வேருனவையோ அதுபோலே ஆன்மாவும் உடலும் வெவ்வேருனவை என்பதை நன்கு புரிந்து கொண்டார். இந்த ஞான அடிப்படையை யுணர்ந்து கொண்டதும் ஆன்மக் காட்சியாகிய **ஆத்ம சாட்சாத்காரம்** (**Self-realisation**) எளிதில் கிட்டியது. தொடர்ந்து, தம் முயற்சியாலும் காளிதேவியின் அருளாலும் கடவுட் காட்சியாகிய **ஈசுவர சாட்சாத்காரம்** (**God - realisation**) எய்தப் பெற்ருர்; பரமஹம்சராளுர்.

கடவுளருளைப் பெற்ற அந்த மகான் ஞானவேட்கை கொண்ட மக்களுக்குக் கூறிய நல்லுரைகளுள் முடிமணியாக விளங்குவது இதுவாகும்:

'கடவுளருளைப் பெறவேண்டுமென்ருல் அடிப்படையாகத் தூய்மை தேவை. அழுக்கடைந்த கண்ணுடியில் சூரியக்கதிர் பிரதிபலிப்பதில்லை. அதுபோல மாயைக்குட்பட்ட — தூய்மையற்ற — ஆன்மாக்களின் இதயத்தில் ஈசுவர தேஜசு — பேரெழில் — தோன்றுவதில்லை. ஆனல், தெளிவான கண்ணுடியில் சூரியன் பிரதிபலிக்கிருன். அதைப் போலத் தூய்மையானவர்களுடைய தூயமனத்திலே ஈசுவரன் தோன்றுகிருன். எனவே, தூயோனுக இருக்க!'

இந்த நல்லுரையைப் பின்பற்றினல் துன்பமேது, துயரேது? எங்கும் இன்பம், எதிலும் இன்பம்.

Koviloor Digital Library



உலகம் புரிந்த தவத்தின் பயனாக, இராமகிருஷ்ணர் தம் நிலையில் உய்தியை நாடிச் செல்லவில்லை; உலக உய்திக்குத் தம்மாலும், வாழையடி வாழையென வந்த சீடர் திருக்கூட்டத்தாலும் பாடுபட்டார்.

ஈசுவர அனுபூதியிலே தாம் கண்ட அருமையான அநுபவங்களைப் பெரிய சொற்பொழிவாகவும் நிகழ்த்த விரும்பவில்லை. ஓதாதுணர்ந்த உத்தமராகிய பரமஹம்சர் தம் முயற்சியால் நூல் எழுதியும் வெளியிடவில்லை. இப்போது கிடைக்கின்ற உபதேசமொழிகளெல்லாம் அவருடைய சீடர்கள் அரும்பாடுபட்டு எழுதி வெளியிட்ட ஞானக் களஞ்சியங்களாகும். உலகமாகிய அலைகடலில் சிக்கித்தவிக்கும் மக்களைக் கரைசேர்க்கும் கலங்கரை விளக்கங்களாகும்.

## இராமகிருஷ்ணர் நல்லறங்கள் சமயப்பொதுமை.

இந்தியப் பண்பாட்டிலே இராமாயணம் பாரதம் ஆகிய இரண்டு இதிகாசங்களுக்கும் சிறப்பிடம் உண்டு. பிறன்மனை நயத்தலாகிய காமத்தால் கெட்டழிந்த இராவணனைச் சுட்டிக் கூறுவது இராமாயணம்; பொருளாசையால் ஏற்படும் குரோதத்தால் மாண்டொழிந்த துரியோதனாதியர் கதையைக் கூறுவது பாரதம். இவ்விரு பெருங்காப்பியங்களிலும் நல்லறத்தை நிலைநாட்டும் ஆற்றல்களாக விளங்குபவர்கள் முறையே இராமனும் கிருஷ்ணனும் : வைணவர்கள் பூரண அவதாரங்களாகச் சிறப்பித்துக் கூறுகின்ற இராமனையும் கிருஷ்ணனையும் இணைத்தே கதாதரராகிய பரமஹம்சர், இராமகிருஷ்ணர் என்று அழைக்கப் பெற்றார்.

Koviloor Digital Library



அதுவும் ஒருவகையில் மிகப்பொருத்தமே. அவரைப் பகவானது அவதாரமென்றே மக்கள் போற்றிக்கொண் டாடினர்கள்.

பச்சிளங்குழந்தையின் பளிங்கு போன்ற தூயமனம் படைத்தவர் இராமகிருஷ்ணர்; கபடமே யணுகாத உள்ளங் கொண்டிருந்தமையால் அவருடைய பார்வை யில் தெய்வநலமிருந்தது; பொதுமையுணர் விருந்தது.

எக்காலத்தில் தோன்றியது என்று யாராலும் கூறமுடியாத பழமையுடையது இந்துமதம். என்றாலும், நடைமுறையில் சில தேக்கவுணர்வுகளை மக்கள்கொண்ட மையால் இந்து மதத்தில் சில சீர்திருத்தங்கள் தேவைப் பட்டன. அதன் விளைவாக இராஜாராம் மோகன்ராயும் சுவாமி தயானந்த சரஸ்வதியும் முறையே பிரம்ம சமாஜம் ஆரியசமாஜம் எனும் புதிய அமைப்புக்களைக் கண்டனர். என்றாலும் அவை இந்து மதத்தினின்றும் பிரிந்து இயங்கிக் கொண்டிருந்தன; மக்களின் ஆதரவு போதிய அளவில் இல்லை. இந்தச் சூழ்நிலையில் இந்து மதக் கருத்துக்களின் சாரத்தைப் பாமர மக்களும் புரிந்து ஏற்குமாறு தம் வாழ்க்கையால் விளக்கியவரே இராமகிருஷ்ணர். அவருடைய சமய மறுமலர்ச்சி உலகந் தழுவிய இயக்கமாகக் கனிந்து நன்மை தந்தது. காரணம், பரமஹம்சரின் **சமயச் சமரச வுணர்வே** யெனலாம்.

உலகத்திலே கடவுளுணர்வு என்று ஏற்பட்டால் சமயங்கள் பலவாகத் தோன்றுதல் தவிர்க்க இயலாதது. என்றாலும் எல்லாச் சமயங்களும் உண்மையை நாடியடைவதற்கேற்ற நல்ல நெறிகளே. அவற்றிடையே ஒருமையுணர்வு ஏற்படாவிட்டால் சமயக்காழ்ப்புகளும்

Koviloor Digital Library



போர்களும் ஏற்பட்டு மக்களைப் பல்லாற்ருனும் நலிவுறச் செய்யும். எனவே, ஒன்றே பரம்பொருள், ஒன்றே மெய்ந் நெறி, ஒன்றே மெய்ப்பயன் என்ற உணர்வு வளர்ந்தால் உலகம் வாழ்வாங்கு வாழும். இதனை நன்குணர்ந்த பரமஹம்சர் போதிக்கும் போது, உண்மையான சமயப் பற்றுள்ள ஒருவன் தன் சமயமே யன்றிப் பிற 'சமயங் களும் உண்மையை நாடி யடைவதற்கேற்ற நல்ல மார்க்கங்களென்றே கருதவேண்டும். பிற சமயங்களுக்கு நாம் எப்போதும் மரியாதை பாராட்டுபவர்களாகவே இருத்தல் வேண்டும். ஒவ்வொருவரும் தன் தன் சமயத்தைத் தான் பின்பற்ற வேண்டும்' என்று ஆணித் தரமாகக் கூறிச் சென்ருர். இந்த அருமையான கருத்தானது **வேற்றுமையில் ஒற்றுமை** காண்கின்ற நல்லுள்ளத் தடாகத்திலே தெய்வீக மணத்துடன் மலர்ந்த அருள் மலராகும்; எல்லாக் குழந்தைகளையும் அரவணைத்துப் போற்றும் தாயன்பின் நிழலாகும்.

நம்நம் மனத்திற்குப் பிடித்த நன்னெறிகளில் நாம் கடவுளை வழிபட்டுக் காட்சியும் அருளும் பெறலாம். இது குறித்துப் பரமஹம்சர் கூறுகையில், 'ஒரு பெரிய தடாகத்தில் குளிக்குந் துறைகள் பலவாக இருக்கின்றன. குளிக்கவோ நீர்மொள்ளவோ யாராயிருந்தாலும் நீர் மட்டத்துக்குப் போகக்கூடும். ஒருவனுடைய துறை நல்லது, மற்றவனுடைய துறை கெட்டது என்று சண்டை போடுவது வீண். அது போல நித்தியானந்த மாகிய நீர்த்தடத்துக்குப் போகும் துறைகளும் பல. உலகத்திலுள்ள ஒவ்வொரு மதமும் அப்படிப்பட்ட துறைகளில் ஒவ்வொன்ருகும். இந்தத் துறைகளில் ஏதாவதொன்றின் வழியே நேராகத் தூயவுள்ளத் துடனும் திடபக்தியுடனும் சென்ருல் ஆண்டவனை யடையலாம்' என இயம்புகிருர்.

Koviloor Digital Library



மேலும், 'ஒரு வீட்டின் மேல்மாடிக்குப் போக விரும்பினுல் படிக்கட்டு வழியாக ஏறலாம்; மூங்கில் வைத்துத் தொத்திக் கொண்டும் ஏறலாம். கயிற்றைப் போட்டுப் பாவிய நிலையில் அதைப் பிடித்துக் கொண்டும் ஏறலாம். அதுபோல ஈசுவரனையடைவதற்கு வேறுவேறு வழிகளும் சாதனங்களும் ஏற்பட்டுள்ளன. உலகத்திலுள்ள ஒவ்வொரு மதமும் அப்படிப்பட்ட வழிகளுள் ஒன்றைத்தான் சுட்டுகிறது' எனத் தெளிவு படுத்துகிருர்.

வங்க நாட்டிலே தோன்றிய பகவான் இராம கிருஷ்ணரும், அவர் காலத்தே தமிழ்நாட்டில் தோன்றிய வடலூர் வள்ளற்பெருமானும் சமயங்களுள் சமரசங்கண்ட வர்கள்; ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்வு கொண்ட வர்கள். புறக்கோலத்தை விட அகவொழுக்க நாட்டம் நிரம்பக் கொண்டவர்கள். வடலூர் வள்ளலாரோ தாயு மானவருடைய அடிச்சுவட்டில் சமயப் பொதுமை கொண்டவர்.

மதங்கள் யாவும் ஆறுகள் போல ஒரே பரம் பொருளாகிய பெருங்கடலில் கலக்குந் தன்மையன என்பார் தாயுமானுர். அவர் இதனை,

'நதியுண்ட கடலெனச் சமயத்தை யுண்டபர
ஞான ஆனந்த ஒளியே'

எனவும்,

'வேறுபடு சமயமெலாம் புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளேநின் விளையாட்டல்லால்
மாறுபடும் கருத்தில்லை முடிவில் மோன
வாரிதியில் நதித்திரள்போல் வயங்கிற்றம்மா'

Koviloor Digital Library



எனவும் கூறிக்காட்டுகிருர். இத்தகைய சமயச் சமர சத்தினைப் பரமஹம்சர் ஆங்காங்கும் வலியுறுத்திச் செல்கிரு . மேலும் இதனைத் தம் நடைமுறை வாழ்க்கை யிலும் அநுபவ வாயிலாகக் காட்டுவதற்கு, இஸ்லாம் மத நடையுடை பாவனைகளைச் சிறிது காலமும், கிருஸ்துவ மத நடையுடை பாவனைகளைச் சிறிது காலமும் பயின்ருர். இந்து மதத்திலேயே வைணவம், வேதாந்த மார்க்கம், சாக்தம் ஆகியவற்றையும் நடைமுறைப் படுத்திக் காட்டினுர். ஆக அல்லாவும், ஏசுவும், திருமாலும், ஈசனும், காளிதேவியும் எல்லாம் ஒன்றே எனச் சொல்லாலும் செயலாலும் விளக்கிக் காட்டினுர். என்ருலும், அவருடைய அடிமனம் காளி தேவிக்கே ஆட்பட்டிருந்தது.

சமயத் தலைவர்களைக் கருதும்போது அவர்களை யெல்லாம் ஒரே சைதன்யச் சுடரிலிருந்து வெளிப்படும் ஒளிவிளக்குகளாகவே மதித்துப் போற்றுகிருர். மின்சார விளக்கின் ஒளி மங்கலாகவோ பிரகாசமாகவோ வெவ் வேறிடங்களில் தோன்றலாம்: என்ருலும் அந்த ஒளி களுக்கெல்லாம் காரணம் ஒரே மின்சாரந்தான். அது போல, வெவ்வேறிடங்களில் வெவ்வேறு காலங்களில் சமயத் தலைவர் தோன்றிப் பரம்பொருளாற்றலால் புகழ் பரப்பி இயங்குகிருர்கள் என்பது பரமஹம்சர் கொள்கை.

## இராமகிருஷ்ணர் நல்லறங்கள் — மாயை நிலை

வங்கந் தந்த ஆன்மஞானச் சிங்கமாகிய இராம கிருஷ்ணர் தத்துவத் துறையிலும் நல்லறங்களை உவமை வாயிலாகவும் கதை சொல்லும் பாங்கிலும் விளக்கியருளுகின்ருர். வேத ஆகமங்களையெல்லாம்

Koviloor Digital Library



நுணுகிக் கற்றறிந்த சான்றோர்களும் அவர் முன்னே வாயடங்கி நின்றனர்; தெளிவுகளைப் பெற்றனர். இராமகிருஷ்ணரை மூலவிக்கிரகம் என்றால் சுவாமி விவேகானந்தரை வெளியில் உலா வரும் உற்சவ மூர்த்தியாகக் கூறுவார்கள். ஆங்கிலக் கல்வி பயின்ற ஞானி விவேகானந்தர் உள்ளிட்ட பலரும் வியந்து போற்றும் ஞானத் தெளிவினை வாரி வாரி வழங்கினார் பரமஹம்சர். காரணம், அன்னை பராசக்தியின் அருள் நாட்டத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டமையாகும்; அதனால் ஓதாதுணர்ந்த வல்லமையாகும்.

உலகில் இயங்கும் மக்களுக்கு உடல் ஆன்மா ஆகிய இரண்டும் உண்டு. உடலென்பது ஒரு நாள் பிறப்பெடுக்கிறது; அது மறைந்து பட்டுப்போகிறது. ஆனால், ஆன்மாவோ நித்தியப்பொருள்; அதற்குச் சாவில்லை. இதனை விளக்கும்போது பரமஹம்சர், 'ஆன்மா கொட்டைப்பாக்கினைப் போன்றது. பாக்கானது முதிர்ந்து பழுத்ததும் அது மேல்மட்டையில் ஒட்டுவதில்லை. ஆனால், அது பச்சையாயிருக்கும்போது மேல்மட்டையினின்றும் அதைப் பிரிப்பது மிகக்கடினம். ஈசுவர அனுபூதி வாய்க்கப்பெற்ற நிலையில் ஞானியொருவன் உடலோடு தன்னை ஒன்றித்துக் கொள்வதில்லை. அனுபூதியின் பிறகே ஒருவனுக்கு உடல் வேறு ஆன்மாவேறு என்னும் உணர்வு தெளிவாக வருகின்றது' என்று கூறிக் காட்டுகிறார். சமயஞானிகள் பலரும் வற்புறுத்தும் இக் கருத்தினை நன்கு புரிந்து கொண்டால் மக்களெல்லாம் அற்ப உடலின்பம் நாடிச் செல்லாமல் நல்லறத்தின் வாயிலாக உயிருக்கு உறுதியும் உய்வும் தேட வழியுண்டாகும். ஆனால், அவித்யா மாயையினால் - அஞ்ஞான இருளால் - இந்த அடிப்படையுண்மை பலருக்குப் புலனாவதில்லை.

Koviloor Digital Library



கடவுளென்பது அருவுருவிற்கு அப்பாற்பட்ட பரம்பொருளாகும். 'பிரம்மம் எத்தன்மையது?' என்று எளிதாகக் கேட்டு விடலாம். அதனை வரையறுத்துக் கூற இயலாது. அந்தப் பரம்பொருளுக்குக் குணங்குறியில்லை; இயக்கமில்லை; போக்குவரவில்லை. மகாமேரு மலைபோல என்றும் நிலைத்திருப்பது. நன்மை தீமைகளோடும் பிரம்மம் தொடர்பு கொண்டில்லை. அது விளக்கின் ஒளிப்பிழம்பைப் போன்றது. இதனை இராமகிருஷ்ணர் விளக்கும்போது 'விளக்கின் வெளிச்சத்தில் நீ பாகவதத்தைப் படித்தாலும் படிக்கலாம்; பிறரைக் கெடுக்கக் கூடிய பொய்ப்பத்திரத்தையும் எழுதலாம்' எனக் கூறிக்காட்டுகிறார். இதனால், ஜீவனுக்குத் தன் முயற்சி நன்னெறியில் இயங்க வேண்டுமென்பது தெளிவாகின்றது.

ஜீவாத்மனுக்கும் பரமாத்மனுக்கும் இடையில் மாயை என்பது பேசப்படும். அந்த மாயையானது மூன்று வகைப்படும். பிரம்மத்தின் சக்தியாக விளங்கும் **மாயை** என்பது ஒன்று; உலகை மயக்கும் மாயையாகிய **அவித்யை** என்பது இரண்டு; உலகை உய்விக்கும் மாயையாகிய **வித்யை** என்பது மூன்று.

முதலாவதாகச் சொல்லப்பட்ட மாயையானது இயங்குஞ் சக்தியாக விளங்கும். அப்போது பிரம்மம் நிலையான சக்தியாக இருக்கும். நெருப்பிற்கும் அதன் எரிக்கும் சக்திக்கும் உள்ள தொடர்பினைப் போன்றது, பிரம்மத்திற்கும் சக்திக்கும் உள்ள தொடர்பாகும்.

இரண்டாவதாகக் கூறிய அவித்யை மாயையானது உலகை மயக்கும் தன்மையுடையது. அந்த மாயையின் பொய்த்தோற்றம் நீங்கினால்தான் ஈசுவரனை ஜீவன் காணமுடியும். அன்னப்பறவையானது தண்ணீர்

Koviloor Digital Library



கலந்த பாலிலிருந்து பாலை வேருகப் பிரிக்கக்கூடிய ஆற்றல் வாய்ந்தது. அதே போன்று வைராக்கியமும் சிரத்தையுமுடைய பரமஹம்சர்கள் மட்டுமே மாயையை அகற்றிவிட்டு ஈசுவரனைப் பற்றிக்கொள்ள ஆற்றலுடையவர்கள்.

மூன்ருவதாகக் கூறிய வித்யை மாயையானது உலகை உய்விக்கும் மாயையாகும். இந்த மாயையின் துணையால் தான் பிரம்மத்தைக் காணமுடியும். இது இல்லாவிட்டால் யாராலும் பிரம்மத்தை அறியமுடியாது. ஆக, இறைவனுடைய சக்தியைப் புரிந்து கொள்ளாமற் போனுல் அவனை அறியவோ பரமானந்தப் பேறு பெறவோ முடியாது.

பூனையானது தன் குட்டிகளைத் தன் பற்களால் கவ்விக்கொண்டு சென்று தான் நினைத்த விடத்தில் வைக்கும்; அதனுல், குட்டிகளுக்குத் தீங்குண்டாவதில்லை. ஆனுல், அது ஓர் எலியை அப்படிக் கவ்விப் பிடிக்குமானுல் அவ்வெலி உடனே இறந்துவிடும். இதைப்போலவே மாயையானது உண்மையான பக்தனைத் துன்புறுத்தாது உய்திகாட்டி, மற்றவர்களை வருத்தி நிற்கும்.

எனவே, இராமகிருஷ்ணர் போதித்த நல்லறமாக மக்கள் வித்யா மாயையின் துணையுடன் உண்மையான கடவுள் பக்தியில் தலைப்பட வேண்டும்.

மக்கள் தம் மனத்தைக் கண்டபடி அலையவிடாமல் இறைவன் திருவடியிலே பொருத்தி வைத்துப் பழக வேண்டும். சிலவேளைகளில் ஏகாந்தமும் நல்லது. தொடக்கத்தில் சங்கடமாக இருந்தாலும் பிறகு பயன் விளையும்.

Koviloor Digital Library



நன்னெறியில் தலைப்படுவதற்கு இளமைப் பருவம் மிக மிக ஏற்றது. இளஞ்செடியை வளர்க்கும்போது வேலியிட்டுப் பாதுகாப்பது போல இளமையில் வைராக்கிய வேலியிட்டு ஆன்மீக நன்னெறியைக் காத்தல் வேண்டும். இளமையில் பக்திஞானத்தால் சிறந்த சுகர், துருவன், பிரகலாதன், திருஞானசம்பந்தர், காரைக்காலம்மையார் போன்றவர்களை ஈண்டு நினைவு கூரலாம்.

சலவை செய்யப்பெற்ற வெள்ளையாடை போன்றது இளம்பருவ மனித மனம். வெள்ளையாடையை எந்தச் சாயத்திலும் விருப்பப்படித் தோய்த்துக் கொள்ளலாம். அதே போன்று மனத்திற்கும் எந்தப் பாவனையையும் கொடுக்கலாம். ஆக, இதனைப் புரிந்து கொண்டு ஒவ்வொருவரும் இளமைப் பருவத்தே பக்தி பாவனைதர முந்தவேண்டும். அதுவே பக்தியோகமாகப் பரம் பொருட்காட்சியை விளைவிக்கும்.

பக்தியினுல் கடவுளுடைய தெவிட்டாத இனிமையைச் சுவைப்பதில் ஈடுபாடு கொள்ளவேண்டும். பக்தன் தேனீ என்ருல் பகவான் செந்தாமரைத்தேன். உலகியல் சிற்றின்பமாகிய தினைத்தனைப் பூவினுள் தேனுண்ணுமல் அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத்தேன் சொரியும் பரம்பொருளிடத்து நம் நாட்டம் செல்லுதல் வேண்டும்.

## இராமகிருஷ்ணர் நல்லறங்கள்—மார்க்கங்கள்

கடவுளையடைய ஞானம், பக்தி, கர்மம், யோகம் என்பவை துணைபுரியும். பகவான் இராமகிருஷ்ணர் இந்த மார்க்கங்களின் படித்தரங்களைப் பல்வேறு கோணங்களில் அநுபவ வாயிலாகக் கண்டு அவற்றைப்

Koviloor Digital Library


புலப்படுத்துகின்றார். ஊன்றிப் பார்க்கும்போது தூய பக்தியும் தூய ஞானமும் ஒன்றே யென்பது தெளிவாகும்.

ஞானம் என்பதன் உண்மைப் பொருள் என்ன என்ற கேள்வி தோன்றியபோது இராமகிருஷ்ணர், 'ஈசுவரா! இவ்வுலகமாகிய நாடகசாலையில் நீர் ஒருவரே எல்லாரையும் ஆட்டிப் படைக்கின்றீர். நான் உம் கைகளில் அகப்பட்ட ஒரு சிறு கருவியாவேன். என்னுடையது என்று உரிமை கொண்டாடக் கூடிய பொருள் ஒன்றுமேயில்லை; எல்லாப் பொருள்களும் உம்முடையனவே. நான், எனது குடும்பம், செல்வம், புண்ணியம் எல்லாம் உம்முடையனவே என்று ஞானி சொல்லுகிறான்' என்று கூறிக் காட்டுகிறார்.

இதனால், ஜீவன் தன் அகப்பற்றாகிய **'நான்'** என்பதையும் புறப்பற்றாகிய **'எனது'** என்பதையும் அறவே விட்டொழிக்க வேண்டும். அகங்காரம் அகன்றொழியும்போது தெய்வீகம் தானே தோன்றத்தான் செய்யும்; அந்நிலையில் தன்னைப் பரம்பொருளிடம் முழுமையாக அடைக்கலப் படுத்திக் கொள்ளவேண்டுமென்பதும் புலனாகின்றது. ஆனால், அதற்குப் பூர்வாங்கமாகப் பக்தி யடிப்படையில் தன் முயற்சியால் மனத்துடன் போராடிப் பார்க்கலாம். பயனில்லாமலிருப்பதை ஒருவன் புரிந்து கொண்டால்தான் இறைவனிடமே அனைத்தையும் ஒப்புவித்து விட வேண்டும். மணிவாசகர் இத்தகைய எண்ணத்தில்.

'அன்றே யென்ற னாவியும்
உடலு முடைமை யெல்லாமுங்
குன்றே யனையாய் என்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ

Koviloor Digital Library


**இன்றே ரிடையூ றெனக் குண்டோ**
**எண்டோள் முக்கண் எம்மானே**
**நன்றே செய்வாய் பிழை செய்வாய்**
**நானே அதற்கு நாயகமே'**

என்று பாடிச் செல்கிறார்.

பக்தியானது படிப்படியே கனிந்து பிரேம பக்தியாக— Bridal mysticism எனும் நாயக நாயகி பாவமாக—உருவெடுக்கும். அதனைப் **பராபக்தி** யென்றும் கூறுவர். பராபக்தியில் பக்தன் ஈசுவரனைத் தம் நெருங்கிய அன்பனாகக் கருதும் நிலை ஏற்படும். கண்ணனிடம் கோகுலத்துக் கோபியர்கள் கொண்ட பக்தியைப் போன்றது அது. அவர்கள் கண்ணனை எப்போதும் **கோபிகாநாதன்** என்று அழைத்தனரோ தவிர **ஜகந்நாதன்** என்று அழைத்ததில்லை. இத்தகைய பிரேம பக்தியானது **கலப்பற்ற தீவிர பக்தி**யாகக் கருதப்படுகிறது. ஆனால் ஞானத்துடன் கலந்த பக்தியானது **கலப்புள்ள பக்தி**யாகவே கருதப்படுகிறது.

இல்லற வாழ்க்கையில் இருக்கும்போதும் கடவுளுணர்வுடன் ஒரு பக்தன் பக்தி கொண்டாடலாம். பக்தியூற்றத்துடன் காலையிலும் மாலையிலும் கடவுளை நினைந்து தியானம் செய்தல் நல்லது; அதுவும் இயலாவிட்டால் உண்பதற்கு முன்னும் உறங்குவதற்கு முன்னும் கடவுளை நினை என்று மிக எளிய முறையில் வழிகாட்டுகிறார் பரமஹம்சர்.

இல்லறத்தானுக்கு ஞானோதயம் ஏற்பட்டுள்ளது என்பதை எப்படி அறியலாம் என்று கேள்வி தோன்றலாம். அதற்கு இராமகிருஷ்ணர், 'பகவந் நாமத்தைக் கேட்டவுடன் எவனுக்கு மயிர்க்கூச்சமும் ஆனந்தக் கண்ணீரும் உண்டாகின்றனவோ அவனுக்கு

Koviloor Digital Library


உண்மையில் ஞானோதயமாகி யிருக்கிறது என்பதாகத் தெரிந்து கொள்ளலாம்' என்கிறார்.

பக்தியையும் ஞானத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, பக்தியைச் **சந்திரன்** என்றால், ஞானத்தைச் **சூரியன்** என்று சொல்லலாம். பக்தியைப் **பெண்** ணென்றால், ஞானத்தை **ஆண்** என்று உரைக்கலாம். ஞானமோ ஈசுவரனுடைய மாளிகையில் முன்மண்டபம் வரையில் தான் செல்லும்; பக்தியோ அவனது அந்தப் புரத்தினுள்ளும் செல்லும். பக்தியையும் ஞானத்தையும் பொருத்தி வைத்து விளக்குதற்குப் பகவான் இராம கிருஷ்ணர் ஒரு நிகழ்ச்சியைக் கூறுகிறார்.

ஒரு ஞானியும் ஒரு பக்தனும் காட்டு வழியே போய்க் கொண்டிருந்தனர். வழியில் திடீரென ஒரு புலி வந்தது. 'நாம் ஓடவேண்டிய அவசியமில்லை. ஈசுவரன் நம்மைக் கட்டாயம் காப்பாற்றுவான்' என்றான் ஞானி. ஆனால், அதற்குப் பக்தனோ, 'தம்பி! அப்படியல்ல. நம்மால் இப்போது இயலக்கூடிய காரியத்திற் கெல்லாம் நாம் ஏன் ஈசுவரனுடைய உதவியை விரும்பி அவனைச் சிரமப்படுத்த வேண்டும்!' என்றான்.

இந்நிகழ்ச்சியைக் கூறிக் காட்டுவதால் ஜீவன் தன் முயற்சி, அதாவது, சிரத்தையில்லாமலேயே வாழுதல் கூடாது என்பது தெளிவு.

கரும யோகத்திற்கும் கூட பக்தியானது தேவைப் படும். பகவானிடம் பக்தியில்லாமல் செய்யப்படும் செயல் களெல்லாம் போதிய அடிப்படையில்லாமல், மணல்மேல் கட்டப்படும் கட்டடம் போன்றவை. ஆகவே, இராம கிருஷ்ணர் 'பக்தியை முதலில் தேடிக்கொள்! பள்ளிக் கூடங்கள் மருத்துவமனைகள் போன்றவையெல்லாம் வேண்டுமானால் பின்னர் உன்னை வந்தடையட்டும்.

Koviloor Digital Library



முதலில் பக்தி, அதன் பிறகே கருமம். பகவத் பக்தி யில்லாமல் இயற்றப்படும் செயல்களெல்லாம் பயனற் றவை' என இடித்துக் காட்டுகிருர். மேலும், கர்மங்களைப் புரிகின்ற போது செருக்கற்ற உள்ளத்துடன் இருத்தல் வேண்டும். இக்காலத்தில் அவ்வாருன போக்கானது எளிதன்று; சிரமமேயாகும். காரணம், மனித மனத்தில் விளம்பரப் பிரியம் ஒட்டிக் கொண்டே வளருகிறது.

ஞானம் கருமம் ஆகிய இவற்றைக் காட்டிலும் பக்தி, தியானம், வழிபாடு வாயிலாக இறைவனை யடைதல் எளிதாகும். எவராலும் கருமத்தை விட முடியாது என்பது உண்மையே. 'நான் நினைக்கிறேன், நான் பேசுகிறேன், நான் செய்கிறேன்' என்று சொல்லப் படுவதெல்லாம் மனத்தின் அடிப்படையில் அமையும் செயல்களே; அவையெல்லாம் கர்மங்களே. ஆக, இவை யெல்லாம் பக்தி யடிப்படையில் அமைந்து விடுமாளுல் பற்றற்ற செயல்களாக உயர்ந்து விடும். மேலும், பக்தி மார்க்கத்திற்கு அடிப்படையாக ஆண்டவனை நினைந்து கற்ருவின் மனம் போலக் கசிந்துருகி நிற்க வேண்டும். மக்கள் தம் உலகியல் தேவைகளுக்காக அழுகிருர்களே தவிரக் கடவுள் நாட்டத்தில் அழுது நிற்கப் பழகுவ தில்லை. 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்ற மணி வாசகர் வாக்கே கடவுளையடைய எளிய உபாயமாகும்.

## இராமகிருஷ்ணர் நல்லறங்கள்
### நல்லாரிணக்கம்

இறைவனை இடையருது சிந்திக்கவும் அவன் திருநாமத்தை ஓதிக்கொண்டிருக்கவும் அவன் புகழைப் பாடிக்கொண்டிருக்கவும் பக்தனெருவன் நல்லாரி ணக்கம் கொள்ளவேண்டும். பிரார்த்தனையும் சத்சங்க

Koviloor Digital Library



மும் உலகத் தொல்லேகளினின்றும் விடுபடுவதற்கு நல்ல உபாயங்களாகும். இராமகிருஷ்ணர் தம் அநுபவத்தை வெளியிடுகையில், 'அன்னே பராசக்தி யிடம் கண்ணீரும் கம்பலேயுமாக நான் பிரார்த்தனை பண்ணுவதுண்டு. தாயே! பக்தர்களே நான் காணுவிடில் நான் கட்டாயமாக உயிர்துறப்பேன். விரைவில் அவர்களே என்னிடம் அழைத்து வா' என்று வேண்டி நிற்பாராம். அதற்குப் பராசக்தியும் மனமிரங்கி அவருடைய ஆசையினை — நல்லாரிணக்கத்தை — அடிக்கடி நிறைவேற்றியிருக்கிருள் என்று அவரே கூறுகிருர்.

ஆத்ம சாதன வளர்ச்சிக்கு நல்லோர்களின் கூட்டுறவு அமைவது மிகமிகத் தேவையாகும். அருட்செல்வர்கள் பலபடித்தரங்களில் இருந்தாலும் ஒருவரையொருவர் பாாத்துக் கொள்ளும் போது ஆன்மீக நெறிக்கு ஒருவருக்கொருவர் உதவி புரிந்து கொள்வார்கள். 'கஞ்சா குடிக்கின்றவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கின்றபோது பெருமகிழ்ச்சியடைவார்கள். அதே விதத்தில் பக்தர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும் போதும் மகிழ்ச்சியடைவார்கள்' என்பார் பரமஹம்சர்.

கடவுள் எல்லோரிடத்திலும் பொதுவாக வீற்றிருக்கிருர் என்பது உண்மைதான். என்ருலும், அவருடைய வித்தியாசக்தி வடிவமாக இருப்பவர்களிடம் — ஈசுவர சாட்சாத்காரம் அல்லது கடவுட்காட்சியைக் கண்டு அனுபூதியில் திளேப்பவர்களிடம் சர்வேசுவரனுடைய சாந்நித்யம் சிறப்புற்றிருப்பதைக் காணலாம். எனவே, தரத்தை நோக்கும்போது மக்களிடையே வேற்றுமை யிருக்கத்தான் செய்யும். ஆதலால் உலகியல் பற்றுடை

Koviloor Digital Library



யோரிடம் நிரம்பவும் ஊடாடிப் பழகாமல் நல்லோருடைய ஆன்மநேயத்தை நாடிப்பெற வேண்டும்.

பொதுவாகக் கடவுள் நாட்டம் கொள்ளுவார் அரிதிலும் அரிது என்பது தான் உலகத்தவர்களைப் பற்றிய உண்மையாகும். உலகியல் போகமானது நிலையாத சிற்றின்பம் என்பதைப் பலர் புரிந்து கொள்வதில்லை. கண்டதே காட்சி கொண்டதே கோலமென்பது உலக வழக்கு. உலகியலின்பம் கசப்புக் காயாக இருந்தும் அதனைக் கனியெனக் கொண்டும், இறைவனோடு ஒன்றி நிற்கும் யோகம் இனிய கனியாக இருந்தும் அதனைக் கசப்புக் காயென வெறுத்தும் நிற்கின்றனர். இந்தத் திரிபுணர்ச்சி நீங்கவும் நல்லாரிணக்கம் தேவை. உடலில் ஊறிப்போன உலகப் பற்று எனும் நோயினைப் போக்கிக் கொள்ள ஏதோ ஒருநாள் நல்லாரிணக்கம் கொண்டால் போதாது. திரும்பத் திரும்ப நல்லாரிணக்கம் தேவை.

நல்லாரை நினைத்த வேளையில் காணமுடியாமற் போகலாம். அப்போது ஆத்ம சாதகர்கள் அருட் சான்றோரின் — ஞான ஆசிரியர்களின் — திருவுருவப் படத்தைத் தாம் வசிக்கும் அறையிலே வைத்திருக்க வேண்டும். 'சாது மகாத்மா ஒருவருடைய படத்தைப் பார்க்குங்கால் தெய்வீக வுணர்ச்சிகள் உள்ளத்திலே உருவெடுக்கும்; அது உண்மை. ஓரிடத்தில் சீதாப் பழம் போன்று மண்ணிலே செய்து நிறம் தீட்டி வைக்கப் பெற்றிருக்கலாம். அந்தப் போலிப் பழத்தினைப் பார்க்கும்போது உண்மையான சீதாப்பழத்தைப் பற்றிய எண்ணம் வரத்தான் செய்யும். அழகிய பெண்ணொருத்தியின் படத்தை ஆவலோடு பார்க்கின்ற ஒருவனுக்குப் போகத்தைப் பற்றிய எண்ணம்

Koviloor Digital Library



வருகிறது. அவ்வாறின்றிச் சான்றோர் படம் வைத்திருக்கும்போது மேலான எண்ணமே உள்ளத்தில் உருவெடுக்கும். மேலும் ஒரு குறிப்பினை மனத்திலே நினைவு கொள்ளவேண்டும். சான்றோருடன் சத்சங்கம், அதாவது, நல்லோரிணக்கம் புரிவது சான்றோர் படம் வைத்திருப்பதைவிட மேலானது என்று கூறிக் காட்டுகிறார் பரமஹம்சர்.

சான்றோருடன் கூட்டுறவு கொள்ளும் பொழுதெல்லாம் ஒருவனுக்கு மன நிறைவும் இன்பமும் உண்டாதலைக் காணலாம். இதனை விளக்கும் போது, 'முதலையொன்று தண்ணீரில் நெடுநேரம் மூழ்கிக் கிடக்கிறது. ஆயினும் இடையிடையே அது நீரின் மேற்பரப்பிற்கு வந்து சீறுவது போன்று பெருமூச்சு விடுகிறது. அது போன்றே சத்சங்கமானது மனிதனுக்கு நல்ல நிம்மதியைத் தருகிறது' என்று உவமை வாயிலாக விளக்குகிறார்.

கடவுள் பக்தியும் நல்லோரிணக்கமும் ஒருவனுக்கு வாய்த்து விடுமானால் ஆன்மீகத்தில் அனைத்தும் கைகூடியதாகக் கொள்ளலாம். சான்றோர்களுடன் பழகுபவர்களை அவர்கள் தெய்வத்திற்கே அறிமுகப் படுத்தி உய்திக்கு வழிகோலுவார்கள்.

அருட்செல்வர்களிடையே தெளிவுண்டாக்கிப் பழகுகின்ற போதும் பரமஹம்சர் தம்மை ஒரு குருவாகவே நினைத்துக் கொள்வதில்லை. பிறருக்கு அவர் தீட்சை பண்ணி வைப்பதும் கிடையாது. காரணம் தீட்சை பண்ணுகின்ற அளவிற்குக் குருவாக அமைய வேண்டுமென்றால் சீடர்களுடைய பழிபாவங்களையும் துயர்களையும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அருட்சக்தி வாய்ந்தவராக இருக்க வேண்டுமென்று நினைத்தார். ஆசாரியர்களுக்கு ஆசாரியராக இருக்கும் தகுதி படைத்திருந்தும் அடக்க

Koviloor Digital Library



வுணர்வுடன் அவ்வாறு சொல்லிக்கொண்டார். அன்னை பராசக்தியிடம் தம்மை ஒரு குழந்தையாகவே நினைத்துக் கொள்கிறார்; அவளும் தம்மை ஒரு குழந்தையாகவே ஏற்றுக் கொள்கிறாளாம். அத்தகைய நற்பேறே போதும் எனக் களிகொள்கிறார்.

தம்மை நாடி ஆன்மீக அறிவுரை பெற வருபவர்களிடம் 'இறைவனுக்குத் தொண்டு புரியுங்கள். தொண்டு புரிவதன் வாயிலாக உங்களுடைய மனம் இறைவன்பால் கவர்ந்திழுக்கப்படும். அதற்கேற்ப மனத்திலுள்ள சினம், பொறாமை முதலிய அழுக்குகள் நீங்கும். கடவுளை மறக்கும் போதெல்லாம் மனிதன் பெருநிலையினின்றும் வழுவுகின்றான். உங்கள் தியானம் தைல தாரை போல இடையறாமல் சீராக நடந்து கொண்டிருக்கட்டும்!' என்று கூறுவார், பரமஹம்சர். பட்டினி நோன்புடன் தம்மை நோக்கி வந்த பெண்களிடம் 'இங்கு வரும்போது உணவருந்திய பிறகே வாருங்கள். பெண்பாலரெல்லாம் அன்னை பராசக்தியின் சிறப்பான பிரதிபிம்பங்களல்லவா? இவ்வாறு பட்டினி கிடக்கலாமா?' என்று பரிந்துரைத்துப் பசிப்பிணி போக்கியிருக்கிறார்.

இதனால், எத்தகைய நிலையில் எளிவந்தவராகப் பரமஹம்சர் இருந்துகொண்டு நல்லறங்களைப் போதித்தார் என்பது தெரியலாகும்.

## இராமகிருஷ்ணர் நல்லறங்கள்
## சமுதாயத் தொண்டு.

இராமகிருஷ்ண பரமஹம்சர் கொண்ட தெய்வ நலப் பார்வையானது தனித்தன்மை யுடையது. தக்ஷிணேசுவரத்திலே காளிகோயில் அருச்சகராகப்

Koviloor Digital Library



பணி புரியவேண்டிய பொறுப்பு அவருக்கு ஏற்படுகிறது. எந்தக் கடமை மனிதனுக்கு வாய்த்தாலும் அதனைத் திறம்படச் செய்தல் வேண்டுமென்பது அவரது வாழ்க்கையால் வெளிப்படுகிறது.

காளி தேவியை ஆராதனை செய்வதில் அவர் காட்டிய பக்திக்கும் கடமைக்கும் எல்லையேயில்லை. தம் சொந்த அன்னையாகவே காளி தேவியைக் கருதினர். எனவே, ஆர்வத்துடன் தாயைப் பார்த்துக் கொஞ்சுவது போல் உரையாடியும், மகிழ்ச்சியால் தோத்திரம் புரிந்தும், ஆடியும், பாடியும், அழுதும், தொழுதும் சித்தப்பிரமை பிடித்தவர் போலத் தோன்றினர். திருமாலுக்குப் பூமாலையும் பாமாலையும் சூடிக்கொடுத்த சுடர்க் கொடி ஆண்டாளைப் போலவும் திருக்காளத்தியப்பனைக் கண்ட நிலையில் அன்புப் பிழம்பாய்த் திரிந்த கண்ணப்பரைப் போலவும் காளியிடம் நடந்து கொண்டார் இராம கிருஷ்ணர். இந்தச் சித்தபிரமை தீருமென்று நம்பி இவருக்குச் சாரதாமணி தேவியைத் திருமணம் செய் வித்தனர். ஆனல், திருமணத்திற்குப் பிறகு காளி கோயில் வழிபாடு பன்மடங்கு ஆர்வத்துடன் நடந்தது. அவரது அதிதீவிர பக்தியைப் புரிந்துகொண்ட சாரதா தேவியும் தியாகவுணர்வுடன் அவருக்கேற்ப நடந்து கொள்ளச் சித்தமானர். இதனல் இல்லறத்துச் சிற்றின்பப் போக்கில் சிறிதும் வாழாமல் ஆன்மீக வானில் இருவருமே சிறகடித்துப் பறந்து தெய்வீகக் காட்சிகளைக் கண்டு களித்தனர். அவர்கள் வாழ்வே அடியவர் பலருக்கு நல்லறப் போதனையாக அமைந்தது.

பரமஹம்சர் நிர்விகற்ப சமாதியையடையும் வரையில் பன்னிரண்டு ஆண்டுகள் தவம்புரிந்த மாட்சி

Koviloor Digital Library



யுடையவர்; என்றாலும் சமயவுணர்வு காரணமாகச் சமுதாயத்தை மறந்துவிடவில்லை. சிலவேளைகளில் தாழ்ந்த சாதியினர் வாழும் சேரிகளுக்குச் சென்று துடைப்பத்தைக் கையிலேந்திப் பெருக்கித் தூய்மை செய்துள்ளார். அப்பொழுதெல்லாம் காளிதேவியை நோக்கித் 'தாயே! நான் பெரியவனென்றும், பிராம்மணன் என்றும், இவர்கள் தாழ்ந்தவரென்றும் எண்ணுகின்ற மனோபாவம் என்னிடம் வராமல் காத்தருள். இவர்கள் அனைவரும் பிரம்மத்தின் வடிவங்கள் என்று எண்ணும் மனப்பாங்கு எனக்குண்டாகும்படி அருள் செய்' என்று கண் கலங்கி வழிபடுவாராம்.

ஒருசமயம் காட்டிற்குச் சென்று நிர்வாணத்துடன் பூணூலும் இல்லாதவராய்த் தியானம் மேற்கொண்டார் இராமகிருஷ்ணர். அவ்வாறிருந்ததற்குக் காரணம் கேட்டபோது "பந்தபாசம் அற்றவனாக ஒருவன் தியானம் புரிய வேண்டும்; பிறந்த நாளிலிருந்தே துவேஷம், வெட்கம், குலப்பெருமை, சமூக ஆசாரம், அச்சம், கௌரவம், சாதிப்பற்று, அகங்காரம் ஆகிய எட்டு விலங்குகளால் கட்டுண்டவனாக இருக்கிறான். பூணூலுங் கூட ஒரு வகையில் பந்தமே. தான் பிராம்மணன், உயர்ந்த சாதியான் என்று எண்ணும் அகங்காரத்துக்கு அது அறிகுறியாக இருக்கிறது. எல்லா உயிர்க்கும் தாயாக விளங்கும் பராசக்தியைத் தியானிக்கையில் இத்தகைய பற்றுக்களை யெல்லாம் தூர எறிந்துவிட்டுப் பாசத் தொடர்பில்லாதவனாக வேண்டும்" என்று கூறினார். இதனால் சமய வழிபாட்டிலும் சமுதாய ஏற்றத் தாழ்வுகளை நினைத்துப் பொருமி நின்ற அவரது தூய ஞானவுள்ளம் புலனாகும்.

Koviloor Digital Library



கடவுட் காட்சியைக் கண்ட நிலையில் உலகத்தவர் பிறரும் உய்தியடைய வேண்டுமென்ற நல்ல நோக்கத்தால் மனிதப் போர்வையில் சிறிது காலம் உலவினர் அவர்; ஆனால், அவரிடம் தெய்வங் குடிகொண்டிருந்தது. சுவாமி விவேகானந்தரும் **'In sri Ramakrishna Parama–hamsa the man was all dead and only God remained'** என்று அவரை நோக்குவார்.

இராமகிருஷ்ணர் கூறிய நல்லறங்களில் உண்மை பேசுதலும அடங்கும். இக்காலத்தில் நாம் புரியக்கூடிய ஒரே தவம் உண்மை பேசுதலாகும். சிறப்பாக, வணிகர்களும், அலுவலகத்தில் வேலை பார்ப்பவர்களும் உண்மையே பேசுதல் வேண்டும். உண்மையான நல்வாழ்க்கைக்கு அது நல்ல நெறியாகும். இறைவனை உணரவும் அடையவும் வாய்மையே நல்வழியாகும், என்பது அவர் கருத்து. வாழ்க்கைப்பயனை கைக்கொள்ள வேண்டும் என்று ஆர்வம் உள்ளவர்கள் கூடிய வரையிலும் தேவையற்ற பேச்சினைக் குறைத்துக் கொண்டு தொடர்ந்து பேசா அநுபூதியில் திளைக்க வழி காண வேண்டும்.

இராமகிருஷ்ணர் கூடிய வரையில் மிகுதியாகப் பேசவே மாட்டார். நல்ல ஆன்மீகமான - பரமார்த்திகப் - பொருள்களைப் பற்றியும் விரிவுரை ஆற்ற விரும்புவதில்லை. காரணங் கேட்டபோது 'பேச்சைப் பெருக்குபவர்கள் பேசுவதிலேயே மிகைபடப் பொழுதைப் போக்குகின்றனர். பேச்சைக் குறைக்குமளவு சாதனம உறுதி பெறுகிறது' என்பார்.

ஈசுவர அநுபூதியை அடைந்த பிறகும் ஒருவன் குடும்பத்தினனாக வாழ்ந்திருக்கலாம். பாலைத் தயிராக்கித்

Koviloor Digital Library



தயிரினின்றும் பக்குவமாக வெண்ணெய் எடுத்தபிறகு, அவ்வெண்ணெயை நீரில் போட்டு வைப்பதற்கு அது நிகராகும். பிரம்மஞானம் அடையப்பெற்ற பிறகு மாமன்னன் ஜனகன் மாமுனிவர் உள்ளத்துடன் இல்லற வாழ்வு வாழ்ந்ததை நினைவு படுத்துவார். ஆனால், தொடக்கக் கால ஆத்ம சாதகர்களுக்கு இது எளிதில் கைகூடுவதில்லை. நல்ல ஞானத்தால் வைராக்கிய உள்ளமாகப் பண்படுத்திக் கொண்டால் காமம், பொருளாசை முதலிய அழுக்குகள் தலைகாட்ட வழி யில்லை. அத்தகைய நிலையிலே நம் உள்ளம் இறைவன் விரும்பியுறையும் பெருங்கோயிலாகும்.

மாந்தருள்ளத்தில் கடவுள் எப்படி வசிக்கிறான் என்பதை விளக்குகையில், 'உயர்குல மாதர் அந்தப் புரத்தில் வசிப்பது போல மாந்தர் உள்ளத்தில் கடவுள் வசிக்கிறார். அந்தப்புரத்திலிருக்கும் மாதர்கள் வெளியில் நடமாடுபவர்களைப் பார்க்க முடியும். ஆனால் வெளியில் நடமாடுகிறவர்கள் அம்மாதர்களைக் காணமுடியாது' என்பார்.

இதனால் உலகியல் மாந்தர்களால் இறைவனைக் காணமுடியாது என்பதும் ஞானிகளால் அகமுகக் காட்சியால் காணலாம் என்பதும் கருத்து.

மக்கள் தந்நலமின்றி தானம் புரிய வேண்டும். சிறப்பாக அன்னதானம் பண்ணுவது ஈசுவர ஆராதனைக்கு நிகராகும். 'சாது மகாத்மாக்களையும் வறுமையில் நலியும் பக்தர்களையும் பார்க்கும்போது அவர்களுக்குத் தம்மால் இயன்ற பொருளை இல்லறத் தான் வழங்கி வாழ்வது அவனுக்கு நல்ல ஆத்ம சாதன மாகும்' என்பது இராமகிருஷ்னர் நல்லறம்.

Koviloor Digital Library



## அரவிந்தர் சிந்தனைகள்

### இளமைப் பருவம்

இந்தியத் துணைக்கண்டம் நீண்டநெடுங்காலமாகவே அருளியலை — ஆன்மீகநெறியை — முறைப்படி வளர்த்துக்கொண்ட நாடு. இந்த நாட்டிலே ஞானிகளும், யோகிகளும், சித்தர்களும் வாழையடி வாழையாகத் தோன்றித் தாம் மட்டும் உய்திபெறவேண்டுமென்று நினையாமல், தம்மைப் போன்று இந்த வையத்து நாட்டினரெல்லாம் வாழ்வாங்கு வாழவேண்டுமென்று அயராமல் பாடுபட்டிருக்கிறார்கள்; அத்தகைய பேரருட் செல்வர்களின் வரிசையிலே வந்தவர்தான் மகான் அரவிந்தர்.

அரவிந்தரின் வாழ்க்கைப் போக்கினைச் சிறிது ஊன்றிப் பார்த்தால் அவருடைய சிந்தனைவளம் — சித்தாந்தம் — அருளியல் வெற்றி நமக்குப் புலப்படும்.

பொருளாதாரமானாலும் சரி, கலை பண்பாடு சமுதாயமானாலும் சரி, ஆன்மீகமானாலும் சரி, மக்களுக்குத் தெளிவான சிந்தனையும் நல்ல முடிவும் அமைய வேண்டும்; அதற்கு நாடு விடுதலை பெற வேண்டுமென்று பெரிதும் நம்பினார்; அடிமைப்பட்டுக் கிடக்கின்ற பாரதம் சுயசிந்தனையால் வாழ்வில் முன்னேற்றங் காண முடியாதெனத் தெளிவாக உணர்ந்தார் அரவிந்தர். எனவே, பெற்றோர்கள் அவரை

Koviloor Digital Library



ஆங்கிலேய ஆட்சியில் ஒரு I. C. S. அதிகாரியாகக் காணவேண்டுமென்று ஆனமட்டும் முயன்றுங்கூட அது நடைபெருமல் போயிற்று. மேலே நாட்டிலே அரவிந்தரின் கல்விப்பயிற்சி அமைந்திடவும், நடை உடை பாவனையெல்லாம் ஐரோப்பிய வளர்ப்பு முறையில் அமைந்திடவும் அக்கறை காட்டினுர் தந்தை டாக்டர் கிருஷ்ணதன்கோஷ். ஆனுல் அரவிந்தரோ தாய் நாட்டின்மேல் தணிக்க இயலாத ஆர்வங்காட்டி வந்தார்; தாய்நாட்டின் அரசியல் சிக்கல்களிலும் நாட்டம் மிகுதி யாகக் கொண்டிருந்தார்.

லண்டனில் பரோடா மன்னரிடம் அரவிந்தர் அறிமுகமாகி, அவரால் சமஸ்தானக் கல்லூரியில் ஆங்கிலம் பயிற்றுவிக்கும் பொறுப்பேற்ருர்; அதனையே நல்வாய்ப்பாகக் கொண்டு இந்திய வரலாறு, கலை, மொழி, இலக்கியம் பற்றிய நூல்களை நிரம்பப் பயின்ருர்; வடமொழி, வங்காளி, மராட்டி, குஜராத்தி முதலிய மொழிகளையும் கற்ருர்; மேலும் உபநிடதங்கள், இதிகாசங்கள், கீதை முதலியவற்றையும் பயின்ருர்; தம் கல்வியின் பரப்பினைப் பெருக்கிக் கொண்டார்; ஆம், சிந்தனைக் களத்தை விரிவாக்கிக் கொண்டார். அங்கிலையில் பாரதத்தாய் தன் விடுதலைக்காக அவருடைய தொண்டினை எதிர்பார்த்து நின்ருள். அக்காலத்தே கோகலேயின் மிதவாதக் கட்சியில் சேராமல், லோகமான்ய திலகரின் தீவிரக் கட்சியிலே சேர்ந்து புரட்சி வீரராகக் கிளம்பினுர். 'வந்தே மாதரம்' போன்ற தேசிய எழுச்சிப் பத்திரிகைகளை நடத்தியும், வங்க தேசியக் கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்றும் வைரநெஞ்சுடன் ஆங்கிலேய ஆதிக்கத்தை வெளிப் படையாக எதிர்த்தார்.

Koviloor Digital Library



சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் மூன்றுமே மனித பரிணாமத்தின் குறிக்கோள்களாக அமைதல் வேண்டுமெனப் பெரிதும் அவாவினுர் அரவிந்தர். அவர் தம் தேசிய இயக்கத்தை ஆண்டவனின் அருளிசைவு பெற்ற ஆன்மீக இயக்கமாகவே போற்றினுர்.

1908ஆம் ஆண்டில் புரட்சியாளர்கள் முயன்ற கொலைத் தொடர்பாக — வெடிகுண்டு வழக்குக் காரணமாக — அலிப்பூர் சிறையில் விசாரணைக்குட் பட்ட குற்றவாளியாக ஓராண்டைக் கழித்தார். தம் முழுச் சிந்தனையையுஞ் செலுத்திப் புரட்சிக் கனல்கக்கும் எழுத்தாலும் பேச்சாலும் தம் நாட்டு மக்களை விழித்தெழச் செய்தவர் அரவிந்தர்; அதன் காரண மாகவே சிறைப்பறவையாய் வாழவேண்டிய விதிக்கு ஆட்பட்டார். என்ருலும் அவருடைய சிந்தனைகளெல் லாம் இந்திய விடுதலைக் கிளர்ச்சிக்குத் தெய்வபலத்தை நாடியே வட்டமிட்டுக் கொண்டிருந்தன அவர் தாமிருந்த சிறைக்கோட்டத்தையே அறக்கோட்டமாக மாற்றி விட்டார்; அஃதாவது, பகவத்கீதை யாராய்ச்சியில் தனி நாட்டஞ் செலுத்தினுர்; தியானத்தில் கடவுட் காட்சியைக் கண்டு களிப்புற்ருர். தாம் எப்படியும் குற்றச்சாட்டினின்றும் விடுபட்டு வெளிவரப் போவதை உள்ளுணர்வால் உணர்ந்து வெளிப்படுத்தினுர். அவர் நினைத்தது போன்றே நீதிமன்ற நடுவரும் அவரைக் குற்றச்சாட்டினின்றும் விடுதலை செய்தார். அரவிந்தரும் சிறைச்சாலையிலிருந்து அருள் வேட்கைப் புனிதராக — பல்லோரும் மதிக்கத்தக்க அநுபூதிச் செல்வராக — வெளி வந்தார். அங்கிலையிலே தம் சிறைச்சாலை யநுப

Koviloor Digital Library



வங்களேயும் யோகக் காட்சிகளேயும் உணர்ச்சிப் பிழம்பாக வெளிப்படுத்தினர்.

அரவிந்தர் தம் அப்போதைய சிந்தனேகளே யெல்லாம், 'கர்மயோகி', 'தர்ம' என்ற பத்திரிகைகள் வாயிலாக மக்களுக்கு உணர்த்தினர். கீதைபற்றிய பல தெளிவுகள்—நல்லறச் சிந்தனேகள்—நாட்டு மக்களுக்குக் கிட்டின. பிறகு 1914 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 ஆம் நாள் ஆங்கிலத்தில் 'ஆரியா' என்ற அறிவுக் களஞ்சியத் தைத் தொடங்கி ஆறரை ஆண்டுகள் நல்லமுறையில் நடத்தித் தம் சிந்தனேச் செழுமையைக் காட்டினர். அந்தக் காலகட்டத்தில் வெளிவந்த அருமையான கட்டுரைகளே — சிந்தனேக் களஞ்சியங்களே — இக் காலத்தில் யோக இணைப்பு (Synthesis of yoga), தெய்வ நல வாழ்வு (Life Divine), கீதைக் கட்டுரைகள், வேத ரகசியம் ஆகிய நூல்களாக மக்களிடையே மதித்துப் போற்றப் பெறுகின்றன.

## அரவிந்தர் சிந்தனேகள்
## குறிக்கோள் வாழ்வு

மக்கள் வாழ்வானது உலகத்தோரால் மதித்துப் போற்றப் பெற வேண்டுமென்ருல் வாழ்க்கையிலே சில உயர்ந்த குறிக்கோள்கள் அமைய வேண்டும். ஒவ்வொரு உத்தமர் வாழ்விலும் ஒரு சிறந்த குறிக்கோளே பின் னணியில் உந்து சக்தியாக அமைந்திருக்கக் காணலாம். தேவாரம் பாடிய அப்பரடிகளும்,

'பாலனுய்க் கழிந்தநாளும் பனிமலர்க் கோதைமார்தம்
மேலனுய்க் கழிந்தநாளும் மெலிவொடு மூப்புவந்து
கோலனுய்க் கழிந்தநாளும் குறிக்கோ ளிலாதுகெட்டேன்'

Koviloor Digital Library



எனக் கூறுதல் இங்கு நினைவு கூரத்தக்கது. மேலான குறிக்கோள் ஒன்றுக்கு மனிதன் தன்னையே வழங்கி விடும்போது அந்தக் குறிக்கோளே அவனை ஆட்கொண்டு மிக உயர்ந்த நிலைக்கு உயர்த்திவிடும்.

பாரதத்தை விட்டு அயல் நாட்டிற்குச் சென்று கல்வி பயின்ற இளமைப் பருவத்திலேயே அரவிந்தர் 'நாம் சாதாரணமான உலகியல் வாழ்விற்காகப் பிறப் பெடுக்கவில்லை; நம் நாட்டுக்கும், பொதுவாக மக்களுக் கும் அரும்பெருந் தொண்டு புரியத் தேவையான திறமையமைந்தது இப்பிறப்பு' என்று உள்ளூர உணர் கின்றார்; அதற்குரிய அறிகுறிகளும் இறையருளால் அவருக்குத் தென்பட்டன.

உழைப்பையே உடலுக்கும் உள்ளத்திற்கும் உர மாக்கி உண்மையை உணரத் தொடங்கினார் உத்தமர் அரவிந்தர். காலங் காலமாக இந்தியா பெற்று வரும் ஆன்மீகப் பண்பாட்டை நினைத்துப் பார்க்கிறார். 'பழைய இலட்சியங்களின் பெருமை வருங்கால இலட்சியங்களை மேலும் பெருமையுடையனவாகச் செய்தற்குத் தரும் உறுதியே யாகும்' என்று கண்டு கொள்கிறார்.

வங்காளத்தில் அவதரித்த அரவிந்தர் புதுச்சேரிக்கு வந்து குடிபுகுந்ததும் தாம் சாதிக்க நினைக்கின்ற குறிக் கோளுக்கு நல்ல வாய்ப்புள்ள இடங்கிடைத்ததாக உணர் கிறார்; மகிழ்கிறார். எனவே புதுச்சேரியை 'எனது யோக சித்தியின் பிரதேசம்' எனக் குறிப்பிட்டுள்ளார். ஞான வேட்கையிலே மெய்ப்பொருளை யடைந்ததும் அதனைத் தன்னுள்ளே முழுதுமாக நிறைவித்துக் கொள்ள வேண்டும்; பிறகு, அதனைப் பூவுலகுக் கெல்லாம்

Koviloor Digital Library


அளித்தும், அதனதன் தற்போதுள்ள இருட்சூழலை மாற்றவேண்டும். அதற்கு வேண்டிய அருளையும் அன்பையும் வெள்ளமாகப் பொழிந்தும், மண்ணுலகத்தை விண்ணுலகமாக்க வேண்டும்; இருளை நீக்கி ஒளிமயமாக்கி, பொன்னொளிவீசி, பெருவெளியாவும் ஒன்றுபட்டிசைந்து மெய்ப்பொருளாம் சைதன்யத்தில் திகழச்செய்ய வேண்டும். இதற்காகவே தாமும் அன்னையும் உலகில் பிறப்பெடுத்துள்ளதாகக் கருதுகிறார் அரவிந்தர்.

'இந்தியாவில் ஆன்மீக விழிப்பே, அதாவது, நம் உண்மையான ஆன்மாவை மீண்டும் கண்டுகொள்வதே நாம் உயர்நிலையடைவதற்கு மிகச் சிறந்த தேவை; இதுவே தன் திடநம்பிக்கை' எனக் கருதுகிறார் அரவிந்தர். மேலும், இறைவனில் எல்லாமக்களும் ஒன்று என்ற கருத்தினை அகவாழ்விலும் புறவாழ்விலும் உண்மையாக்க வேண்டும்; படிப்படியாகச் சமூக உறவுகளிலும் சமுதாய அமைப்பிலும் அதைக் கொண்டுவந்து மானுட வாழ்க்கையை நித்தியத்தை நாடி நடைபோடச் செய்ய வேண்டும்;கலிமாறிச் சத்தியயுகம் வரவேண்டும்; இது மனித இன வளர்ச்சிக்குத் தவிர்க்க முடியாத தேவை யென நம்புகிறார். இந்தியா விழித்தெழுந்து முதலில் ஆசியாவிற்கும், பிறகு உலகத்திற்குமே வழிகாட்டவேண்டும் எனக் கனவு காண்கிறார்; அதுவும் பலிக்கக் காண்கிறார்.

மக்களினம் புதிய ஞானம் புதிய சக்தி புதிய திறமைகள் வாயிலாகத் தன் எல்லைகளை விரிவாக்கப் போகிறதென்றும், மக்கள் வாழ்விலே அஃது ஒரு பெரும் புரட்சியை உண்டாக்கப் போகிறதென்றும் நம்புகிறார் அரவிந்தர்.

Koviloor Digital Library



'இத்தகைய குறிக்கோளை யடைய வேண்டுமானுல் அகந்தையில் சிறுசிறு கூறுகளையும் செயல்களையும் பெரிது பண்ணிக் கொண்டே செல்லக் கூடாது. நம் பண்டைய காலத்தினைக் குறைத்துப் பேசும் போக்குக் கூடாது. உடனடியான வாய்ப்புக்களுடைய நம் எதிர்காலத்தின் கோரிக்கைகள் பழங்காலச் சாதனைகளை விடத் தூய்மையாக இருக்கவேண்டும்' என அறிவுரை பகர்கின்ருர்.

இந்தியாவின் சிந்தனை மிக வளமானது; தத்துவ ஆராய்ச்சிக் கூடங்களிலிருந்து அது வெளிவந்து வாழ்க்கையுடன் மீண்டும் தொடர்பு கொள்ள வேண்டும். வெறும் வாய்ப்பேச்சால் பயனில்லை.அடக்க வுணர்வுடன் செயலில் இறங்க வேண்டும். இந்தியாவின் ஆன்மீக வாழ்வு மலைக்குகைகளி லிருந்தும் திருக்கோயில்களி லிருந்தும வெளிவந்து, புதிய உருவங்களுக் கேற்பச் சரி செய்து கொண்டு உலகையே ஈர்த்துக் கைப்பற்ற வேண்டும். இது மிகமிகச் சிறந்ததாகும் என வழிகாட்டு கிருர் அரவிந்தர்.

'இந்த உலகில் தெய்வவொளி வீசி, அழகும் ஆனந்தமும் வாழ்வில் நிலவக் காண்பதே என் குறிக் கோளாகும். அதற்கு மனத்திற்கும் மேம்பட்ட விஞ் ஞானசக்தி (Supramental force) இறங்கி வரவேண்டும். இந்த இறக்கத்திற்கு மனிதன் தன்னை என்றும் விழிப் புடனிருந்து தூய்மையாக்கிக் கொள்ளவேண்டும். இக் குறிக்கோள் நிறைவேற வேண்டுமென்ருல் அன்னைபரா சக்தியிடம் அடைக்கலம் புகுந்து ஆர்வமுடன் வழிபட வேண்டும் என போதனை புரிகிருர் மகான் அரவிந்தர்.

Koviloor Digital Library



## அரவிந்தர் சிந்தனைகள்—பொருட்செல்வம்

ஆன்மீக நெறிக்கு மண்ணும் பெண்ணும் பொன்னும் பொதுவாகத் தடைகள் என்று சொல்லுவார்கள். ஆனால், ஞானி அரவிந்தரின் பார்வையில் அவையும் சக்திக் கூறுகளாகத் தனி மதிப்புப் பெற்றன. பொருட் செல்வம் பற்றிச் சிறிது சிந்திப்போம்.

**‘அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு’**

என்பார் திருவள்ளுவர். இவ்வுலகைப் பொறுத்த வரையில் பொருளில்லாமல் எந்த நன்மையையும் எய்துதல் இயலாது; வெளி வாழ்விற்கு அஃது இன்றியமையாதது; ஆனால், பொருள் காரணமாகச் செருக்கோ அதன்மீது ஆசையோ கூடாது.

மக்களை அவர்களது செல்வச் செழிப்பைக் கொண்டோ, அதிகாரம் வல்லமை பகட்டு முதலியவற்றைக் கொண்டோ மேலானவர்களாக எண்ணவுங் கூடாது.

ஒருவன் ஏழையாகவோ பொருட் செல்வனாகவோ இருக்கலாம். அதனால், தேவையுணர்ச்சியாலோ ஆசையலை மோதல்களினாலோ தாக்கப்பெறாத நிலையை அடைய முயல வேண்டுமென்கிறார் அரவிந்தர்.

பணமென்பது விசுவசக்தியின் ஒரு கண்கண்ட அடையாளமாகும். பயன்படுத்திக் கொண்டே செல்லும் போது பயனளிக்கின்ற எத்தனையோ சக்திகளுள் பணமும் ஒன்று; எனவே, அது எதற்காக உள்ளதோ அதைக் கருதியே சரியான வழியில் நல்ல நோக்கத்திலே அதைச்

Koviloor Digital Library



செலவிடவேண்டும். நமக்கென்று ஒதுக்கி வைத்து அதற்கு அடிமையாகிவிடக் கூடாதென்கிருர்.

பொதுவாகப் பணம் ஏற்படுத்துங் களங்கத்தி லிருந்து விடுபட வேண்டும்; அதே வேளேயில் அதனிட மிருந்து ஒரு துறவு மனப்பான்மையுடன் ஒதுங்காமல் இருப்போமாஞல், அதனைத் தெய்வநலத் தொண்டு களுக்காகச் செலவிட ஆற்றல் மிகுதியாக ஏற்படும் என்கின்ருர்.

அகலாது அணுகாது தீக்காய்வது போலப் பொருட் செல்வத்தைப் பொறுத்தவரையில் நாம் நடந்து கொள்ளவேண்டும். நாம் கையாளுஞ் செல்வம் நம்முடையதன்று; இறைவனுடையது என்ற உணர்வும் ஞானமும் நம் அடிமனத்தில் விழிப்புடன் இருந்து உறுத்திக் கொண்டே நம்மைக் கண்காணிக்க வேண்டும். எனவே, அரவிந்தர் தெய்வத்திற்குச் சொந்தமான பொருட் செல்வத்தைத் தெய்வ வாழ்விற்காகவே பயன் படுத்துவது 'அதிமானசயோக'மாகச் சாதகனுக்கு அமைய வேண்டுமென வற்புறுத்திக் கூறுகிருர். இந்த அடிப்படையில் அவர் விளக்குகையில் 'எல்லாச் செல்வமும் கடவுளுக்கே சொந்தம். அதனை வைத்திருப் பவர் பாதுகாப்பாளரே யல்லாமல் சொந்தக்காரர் ஆகார். இன்று அது அவரிடம் இருக்கிறது; நாளைக்கு அது வேறிடத்திற்குச் செல்லலாம். அது அவர்களிடம் இருக்கும்போது, தங்களிடம் நம்பி ஒப்படைக்கப் பட்டிருக்கும் பொறுப்பை எவ்வாறு எந்த உள்ளத்துடன் செலவிடுகிருர்கள், எந்தச் செயலுக்காகப் பயன்படுத்து கிருர்கள் என்பதைப் பொறுத்தே எல்லாம் அமையும்" எனக் கூறுகிருர்கள். மேலும், பொருளைப் பொறுத்த வரையில் முழுவதும் தன்னலமற்று, மிகவும் கட்டுப்

Koviloor Digital Library



பாட்டுடனும் கண்டிப்புடனும் சிறுசிறு செலவிலும் நாட்டஞ் செலுத்த வேண்டும்; ஒரு நல்ல பாதுகாப்பாள ஞக இருப்பாயாக' எனப் போதிக்கிருர். தம் அநுபவத் தையும் இது தொடர்பாக வெளியிடுகிருர்:

தம் கடந்த கால வாழ்க்கையில் நேர்ந்த தவறு களுக்காகத் தம் மனைவி மிருணளினிதேவியிடம் வருத்தத்தைத் தெரிவிக்கிருர்: 'ஒருவனுக்குள்ள அறிவு பயிற்சி கல்வி செல்வம் முதலிய எவ்வித நன்மைகளையும் தன் குடும்பப் பாதுகாப்பிற்குத் தவிர்க்கவியலாத செலவிற்கு எந்த அளவு செலவிட வேண்டுமோ அந்த அளவே செலவிடலாம்; அந்த அடக்கமான செலவிற்கே அவனுக்கு அதிகாரம் உண்டு. இது என் உறுதியான நம்பிக்கை. ஈசன் கொடுத்த நன்மைகள் எல்லாவற்றை யும் தன்பொருட்டே செலவிடலாகாது. எஞ்சியிருப்பதை உலக நன்மைக்கே திருப்பிக் கொடுத்து விடவேண்டும்; ஈசன் திருத்தொண்டிலே செலவிடவேண்டும். எனக்கு உள்ளவற்றை யெல்லாம் என் பொருட்டாகவே செல விட்டால் நான் திருடனுவேன். ஈசனிடமிருந்து செல்வம் பெற்றுக் கொண்டு, அவன் திருத்தொண்டிற்குச் செல விடாதவன் திருடனேயென்று இந்து சாத்திரங்களும் கூறுகின்றன. இதுவரையில் நான் சம்சார இன்பத் திலே மூழ்கிக் கிடந்து விட்டேன்; ஒரு ரூபாயில் இரண்டணு ஈசனுக்கும் பதினுன்கணு எனக்குமாகச செலவிட்டுக் கொண்டு கணக்கை மறைத்துக் கொண்டு வந்து விட்டேன். என் ஆயுளில் பாதி கழிந்து விட்டது; அந்தோ! வீணுக்கு உழைத்து விட்டேனே!' என்று அங்கலாய்க்கிருர் உத்தமர் அரவிந்தர்.

இப்பேர்ப்பட்ட அரவிந்தரின் சிந்தனை தான் மகாத்மா காந்தியடிகளுக்கும் ஒருதெளிவை ஏற்படுத்

Koviloor Digital Library



தித் 'தர்மகர்த்தாக் கொள்கை'யை அழுத்தந் திருத்தமாக நாடெல்லாம் பரப்ப ஊற்றந் தந்தது எனலாம்.

## அரவிந்தர் சிந்தனைகள்—அன்னை பராசக்தி

சாக்த சமயத்தில் பெரிதும் ஈடுபட்ட வங்காளத்தில் அரவிந்தர் அவதரித்தவராதலின் அவருக்குச் சக்தி வழிபாட்டில் ஈடுபாடு இயல்பாகவே அமைந்திருந்தது. இந்த அடிப்படையுணர்வு காரணமாக இந்திய நாட்டினை வெறும் நிலம், நீர், மலைவளங்கள் கொண்ட இடமாக அவர் பார்க்கவில்லை; எழில் ததும்பும்—உயிரோட்டமுள்ள—பாரத அன்னையாகவே உணர்ந்து வழிபட்டார். இதுபோலவே ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு சக்தியம்சமே யிருந்துகாத்து வருவதாகவும் கருதினார்.

இக்காலத்தில் கூட அரவிந்தரைப் பொதுவாக மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்களா என்பது கேள்விக் குறிதான். பாரத நாட்டின் விடுதலைக்குத் தீவிரப் புரட்சி செய்தவர் என்பதும், தேசப்பற்றுடைய ஆவேசக் கவிஞர் என்பதும், புதுச்சேரியில் அரவிந்த ஆசிரமம் நிறுவித் தாமும் யோகம் பயின்று, தம்மைப் பின் பற்றுகின்றவர்களையும் யோகத்தில் பயில்வித்தவர் என்பதும், அவருடைய பெயர்த் தொடர்புடன் 'ஆரோவில்' எனும் உலகப் பொதுநகர் தோன்றுமளவிற்கு உலகப் பொதுமையையும் ஒருமையையும் நாடியவர் என்பதுமே மக்கள் புரிந்துள்ள செய்தி. மேலும்; அரவிந்தர் வெறும் அறிவுரை கூறும் ஆசானாகவோ, நடவாத செய்திகளைக் கூறி மக்களை மயங்க வைக்கும் துறவியாகவோ விளங்கவில்லை யென்பதும் தெரிந்த செய்திதான் என்றாலும், இவற்றிற் கெல்லாம்

Koviloor Digital Library



மேம்பட்ட ஓர் ஆளுமை (Personality) அவரிடம் பொலி வுற்றுப் பல்லோரையும் வழிநடத்தியது; இன்றும் வழி நடத்துகிறது. அதுதான் அரவிந்த சக்தியாகிய ஒரு காந்த ஆற்றல். அந்த மாபெருஞ் சக்தி ஆன்மீக உரு மாற்றத்தையும் அதன் வழியே உலகத்தில் நல்ல மாறு தலையும் ஏற்படுத்தக் காரணமாகியது. அரவிந்தரைப் பின்பற்றுபவர்கள் அந்தச் சக்தியை நன்குணர்வதால் எல்லா நற்செயல்களிலும் வெற்றிக் காண முடியுமென்று நம்புகின்றனர். அதற்கு ஒருமையுணர்வுடன் யோகம் புரிவது ஒருவகைச் சாதனம் என்றும் அநுபவத்துடன் கூறி வருகின்றனர். எல்லாம் நம்பிக்கையைப் பொறுத்ததே.

மனிதனில் எவ்வாறு ஆன்மா சிறந்ததோ அவ்வாறே அரவிந்தரின் சிந்தனையும் செய்கையுமே ஒரு சக்தியாகச் சிறந்து விளங்குதலைக் காணலாம். இச்சக்தி மக்களின் சிந்தனைகளையும் வாழ்க்கை முறையையும் சீராக மாற்ற வந்த வியத்தகு சக்தி; தெய்வநல சக்தி.

இத்தகைய ஆற்றல் அவருக்கு எங்கிருந்து வந்தது? அன்னை பராசக்தியிடமிருந்தே வந்தது; அதனை அவரே தன்முயற்சியால் பெற்று உலக நலத்திற்காகவே அதனை வெளியிட்டு மகிழ்கிறார்.

அரவிந்தரின் கருத்துப்படி அன்னை பராசக்தியே உலகமனைத்தையும் ஆட்டிப்படைக்கிறாள்; கோதாட்டிப் 'பேதித்து நம்மை வளர்த்தெடுக்கும் பெய்வளை'யாக விளங்குகிறாள். அவள் நான்கு நிலைகளிலே உலகில் நம்முடன் விளையாடி மகிழ்கிறாள்.

முற்றும் உணர்ந்தவளான அன்னை உலகெங்கும் பரந்து காணப்படுகிறாள். அவளது அன்பும் தயையும்

Koviloor Digital Library



அறிவும் அமைதியும் அளவிட முடியாதவை. அவ்வகிலாண்ட நாயகியின் அருள்திறம் அவளை **மகேசுவரி**யாக நிலைபெறச் செய்கிறது.

அடியவர்கள் மீது கொண்ட பாசத்தின் காரணமாக, அருள் வடிவான அன்னையே தீயசக்திகளை அழிக்கப் போர்க்கோலம் பூண்டு, உலகைக் கிடு கிடென நடுங்க வைக்கவும் சித்தமாகிருள். உக்கிர நிலையிலுள்ள அவ்வன்னையே **மாகாளி**யாகும்.

இதற்கு மாருக அதே அன்னை பெரிதும் கவர்ச்சியும் அழகுங்கொண்டு **மகாலட்சுமி**யாகத் தோன்றுகிருள்; வியப்பிற்குரிய நிலையிலே மக்களை வளப்படுத்தி, இன்புறுத்தி அருள்பாலிக்கும் பொறுப்பேற்கிருள்.

அன்னையின் மற்ருெரு கூறு நம் உள்ளத்திற்கு அறிவளித்துக் காக்கும் **மகாசரசுவதி**யாக உருக்கொள்கிறது. அதனுல், பிறர் குறை காணமுடியாத வகையிலே ஒவ்வொரு செயலையும் சிறப்பாகச் செய்வதற்கு நமக்கு அறிவுத்திறன் உண்டாகிறது; எல்லாப்பொருளிடத்தும் நிறைவளிக்கும் ஆற்றல் பரவுகிறது.

அறிவு, வலிமை, இயைபு, நிறைவு ஆகிய நற்பண்புகள் இவ்வுலகில் தெய்வநலங்குறித்துப் பெரிதும் பாராட்டப்படுகின்ற சக்தியின் நற்கூறுகளேயாகும்.

பரமனைப் பிரியாமல் அவன் குறிப்பிற்கிணங்க அனைத்தையும் படைத்து **சக்தி** நிர்வகித்து வருகிருள். உலகனைத்தையும் தன்னுள் கொண்டு, தானும் அனைத்தினுள்ளும் புகுந்து, அலகிலா விளையாட்டு ஆடி நிற்கிருள். அவள் தீர்மானித்துப் பரமன் ஒப்புதல் அளித்ததைத் தவிர வேருென்றும் இங்கோ வேறெங்கோ

Koviloor Digital Library



இருக்க வழியில்லை. பரமனுல் இயக்கப்பட்டுச் **சித்சக்தி** பார்த்து மகிழ வேண்டும்; தன் படைப்பிற்கும் இன்பத்தில் வித்திட்டு உருவாக்க வேண்டும்; அல்லாமல் வேறென்றும் உருப்பெருது என்கிருர் அரவிந்தர்.

மேலும், சக்தி தன்னந்தனியளாய் நின்றும் தங்கு தடையற்ற எல்லையற்ற ஆற்றலுக்கும் சொற்பதங் கடந்த சாங்நித்தியத்திற்கும் உறைவிடமாய்த் திகழ் கிருள். என்ருலும், என்றும் நிலைத்திருக்கின்ற சத்து சித்து ஆனந்தமாய், அவளிடம் நிலைத்த நிலையிலே வெளிப்பாடுற்றுத் திகழ்கிருன் பரமன். இந்த அடிப் படையுண்மையை நினைவுகூர்கிருர் அரவிந்தர்.

இவ்வுலகிலே சக்தியின் திருவிளையாட்டு முன்னேற் பாட்டுடன் திட்டமிட்டு அமைக்கப்பெற்று என்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நம் கண்ணுக்கு மறைவாக நடித்துக் கொண்டிருக்கும் அந்தச் சிறந்த நடிகைக்கு விசுவவெளியேயுள்ள தேவரனைவரும் நாடக உதவியாளர்களே என்று சக்தியைப் புரிந்துகொண்டு, நமக்கும் காணக் காட்டுகிருர் வள்ளல் அரவிந்தர்.

## அரவிந்தர் சிந்தனைகள் — யோகநெறி

யோகி அரவிந்தர் அல்லும் பகலும் அயராது சிந்தித்து ஆன்மீக நெறிமுறைகள் சிலவற்றை அநுபவ வாயிலாக மக்களுக்கு வழங்கியுள்ளார். எங்கும் பரந்துள்ள இயற்கையன்னை தன் இயக்கத்திலே எப்பொழுதும் ஒருவித யோகம் புரிந்துகொண்டிருக் கிருள் எனக் கண்டார். சிந்தனைச் சுழற்சி குடிகொண் டிருந்த அவருள்ளத்தில் யோகநெறி புதிய சிந்தனையைக் கிளறிவிட்டது.

Koviloor Digital Library



இந்து சமய நூல்களெல்லாம் — போதனைகளெல்லாம் — ஞானியர்களின் அநுபவ உண்மைகளேயாகும்; அவை பொய் என்பது புரியாத்தனம் என்பதை நன்குணர்ந்தார் அரவிந்தர். எனவே, மெய்யான பரமாத்மாவைத் தாமே யுணர்ந்து அதனை நேருக்கு நேராகக் கண்டு பயனடைவதற்கு ஏதேனும் ஒரு வழி இருந்தே தீர வேண்டுமென்று நம்பினார். அந்த வழியினைத் தளராத வைராக்கியத்தால் அடைய முயன்றார். பிறரையும் தம்மைத் தொடர்ந்து வந்து உய்தியடையுமாறு ஆற்றுப்படுத்துகிறார். ஆனால், ஆன்மசித்தியானது ஆன்மதாகத்தையும் முயற்சியையும் பொறுத்தே அமையுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

நம்மிடையே வழங்கும் யோகநெறிகள் யாவும் இறைவனுடன் இரண்டறக் கலக்கவும் பிரம்மத்தைச் சுயானுபூதியாக அடையவும் நாடுகின்றன. மேலும், அகந்தை, அஞ்ஞானம், பாவம், பொய்ம்மை முதலியவற்றினின்றும் நீங்கி வீடுபேற்றையே நாடி நிற்கின்றன எனக் காண்கிறோம்.

நம் வாழ்க்கை குறைபாடுடையது, அறியாமையால் சூழ்ந்தது, துன்பத்திற்கும் இடைவிடாமுயற்சிக்கும் விளைநிலம். ஏனென்றால், இவ்வுலகத்திற்கு அசத்தியமே ஆதாரமாகவுள்ளது. இவ்வுலகினின்றும் விலகி நிற்கும் பரமசத்தியத்துடன் ஒன்றுவதால் ஞானத்தைப் பெறலாம். அதற்குரிய மேலான வழியே யோகமாகுமென்பது பொதுவான நம்பிக்கை.

ஆனால், அரவிந்தரோ தெய்வத்தைப் போலவே அது இயற்றிய இந்த உலகமும் சத்தியமானது எனக் காண்கிறார். இந்த உலகம் அந்தப் பரமாத்மாவின்

Koviloor Digital Library



இடையருத வெளிப்பாடாகும். இவ்வுலக வாழ்வு இந்தப் பரிணுமச் செயலுக்கு ஒரு தெய்வநல இருப்பிடமாகும். வாழ்க்கை குறையுடையது, மகிழ்ச்சியற்றது என்ருல் நாம் சரியாக வாழத் தெரியாதவர்களென்றே பொருள். சரியான வாழ்க்கை நடத்துதற்குரிய வழியைக் கண்டு பிடித்து விட்டால் வாழ்வின் போக்கே திசைதிரும்பி நல்வழிப்படும். இவ்வழியானது ஆதிகாரணனுகிய அந்தப் பரமனை இனங்கண்டு கொள்வதில்தான் அடங்கி யுள்ளது.

ஒருவன் தன் சித்தத்தில் தன்னை முழுவதுமாக உணர்கின்ற போது கடவுளுடன் ஒன்றுகிருன். அவ்வாறு இறைவனுடன் ஒன்றும்போது உலகம் முழுவதுடன் ஒன்றிவிடுகிருன். தனிமனிதனும் இவ் வுலகமும் கடவுள்பால் தங்கள் ஒற்றுமையைக் காண் கின்றனர்.

இந்திய மெய்ஞ்ஞானிகள் கண்டு காட்டிய யோக நெறிகளையெல்லாம் பயின்ற அரவிந்தர் தாமே உள்ளுணர்வால்—அநுபவத்தால்—இயைத்துக் கண்டு கொண்ட யோகநெறியை நன்கு விண்டு உரைத் துள்ளார்.

அரவிந்தரின் யோகக் குறிக்கோள் உலகத்தையும் வாழ்வையும் விட்டுவிட்டுத் துறைவியாகச் சென்று சமாதிசித்திக்கோ, சொர்க்கத்திற்கோ, வைகுந்தத் திற்கோ, பரிநிர்வாணத்திற்கோ புறப்பட்டுச் செல்வ தன்று. வாழ்விலே வேதித்து தெய்வீக நிறைவேற்றங் காணவேண்டும். அதறகாக வாழ்வையும் இருப்பையும் மாற்றிக் கொள்வதே அவரது குறிக்கோளாகும். ரூபாந்தரம் அல்லது மாறிப் பிறத்தலே அவரது சித்தாந்தம்.

Koviloor Digital Library



அந்தக் குறிக்கோளும் தனிப்பட்டவர் நலத்திற்காக இல்லாமல் உலக நலத்திற்காக அமைதல் வேண்டும். யோகியின் உணர்வாற்றலை — அதிமனத்தினைக் — கொண்டு வருவதில்தான் அது நிறைவேற வேண்டும்.

உலகத்தில் மக்கள் காணும் அறியாமை, துயரம், துன்பம், பிணி, சாக்காடு முதலியவற்றை ஒழிப்பதற்கான வழியிருக்கிறதா எனத் துருவி ஆராய்கிறார்; உலக உயிர்களின் புரியாத புதிரைப் புரிந்து கொள்ளக் கடுந்தவம் மேற்கொள்கிறார். தம் யோக சாதனையின் போது உடல் உயிர் மனத்தைச் சார்ந்த கீழ்த்தரமான உணர்வு நிலைகளையெல்லாம் கடந்து செல்கிறார். மனங் கடந்த அப்பாலுக்கும் அப்பால் பேருணர்வு நிலையை அடைகின்றார். அங்கே யாவும் கடவுளின் பேரொளி வளாகமாக இருத்தலைக் கண்டு களிக்கிறார். நான் என்ற ஆணவத்திற்கோ வேறுபாட்டுணர்ச்சிக்கோ அங்கு இடமில்லை. கடவுளுணர்வு ஆட்சி புரிந்த அந்த இடத்திலே இறைவனுடன் ஒன்றியிருந்த நேரத்திலும் அரவிந்தர் தம் மானுட வடிவத்தை யிழந்து விடவில்லை; அவர் தெய்வ மனிதராகின்றார். அத்தகைய யோக அநுபவத்தைத்தான் **'விஞ்ஞான யோகம்'** என்றும் **சத்திய யோக**மென்றும் **பூரணயோக** மென்றும் கூறுகின்றார்.

சுருங்கக் கூறவேண்டுமென்றால், மனததுக்கு அதீதமான அரவிந்தரது யோக முறைக்கு அவரே அறிவு வழியில் அடிப்படையமைத்துள்ளார்; அகண்டத்திலுள்ள பரம்பொருளுடன் ஒருவன் தான் மட்டுமன்றி எல்லோரும் ஒன்றித்து வாழும் தந்திரத்தை உணர்த்துவதே தம் யோக நுட்பமென்று உணர்த்தினார். இதனால் தெய்வீக சக்தி மனிதனிடம் பாயும்படியான முயற்சி மலர்கின்ற வாய்ப்பேற்படுகிறது.

Koviloor Digital Library



எனவே, புலன்களையும் மனத்தையும் அடக்கி யொடுக்கி, ஊன் உறக்கமின்றி, ஊன்வாட உளம் வாட உயிர் வாடக் கடுந்தவம் புரிந்து, புறவுலகின் உணர்வு சிறிதுமற்ற, மோன சமாதியில் கடவுளுணர்விலே இரண்டறக் கலந்து ஒன்றி இன்புறுவதன் வாயிலாக உலக வாழ்வையே வெறுமையாக்குவது பூரண யோகத்தின் குறிக்கோளன்று என்பதும் தெளிவாகும்.

## *அரவிந்தர் சிந்தனைகள்—முழுவாழ்வு*

மானுட வாழ்வு பெரும்பயன் கொள்ளவும் முழு நிறைவையடையவும் வேண்டுமானால் அஃது ஒரு பேருண்மையை நோக்கி நடையிட வேண்டும். ஆன்மீகத்திலே மனிதன் தன் திறன்களை நாளும் வளர்த்துக் கொள்ளும்போது பரமான்மாவாகிய பேருண்மை செயல்படத் தொடங்கும்; அதற்கேற்ப வாழ்வே களங்கமற்ற—நன்கமைந்த— நிலைக்களமாகத் திருத்தங்கொள்ளும். இந்த அடிப்படையில் அரவிந்தப் பிரான் நிரம்பவுஞ் சிந்தித்துள்ளார்.

வாழ்தல், அதுவும் முழுவாழ்வு வாழ்தலென்பது இயற்கையானது; மக்களுக்குத் தந்துள்ள உயர்ந்த குறிக்கோளாகும். ஆனால், முழுவாழ்வு வாழப்பூர்வாங்கமாகச் சில தெளிவுகள் உண்டாக வேண்டும்.

உடலையே ஆன்மா என்று நம்பிப் பிறழ்ந்த உணர்விலே பலர் அற்ப வாழ்வு வாழ்கிறார்கள்; அந்தப் பேதைமை நீங்க வேண்டும்.

எல்லா உயிர்களும் ஒன்றேயென்ற உணர்வுடன் ஒருவன் எல்லாமாக வாழ வேண்டும். தான் எல்லாருடைய உயிரிலும் இருக்க வேண்டும். எல்லாரையும் தன் சீவனில் அடக்கிக் காணுந் திறன் வேண்டும். எல்லோரின் உணர்வையும் செயலையும் அநுபவத்தையும் தன்னுள்ளே தன் செயலாகவும் அநுபவமாகவும் உணர வேண்டும். விசுவசக்தியுடன் ஒருங்கிணைந்து நிற்கவேண்டும். ஆன்மநேய ஒருமைப்பாட்டினால் பிறர் மகிழ்ச்சியையும் தன் சொந்த மகிழ்ச்சியாக உணர

Koviloor Digital Library



வேண்டும். அறிவின் ஆக்கமே அவ்வாறு மலர வேண்டும். இதனையே திருவள்ளுவரும்,

**'அறிவினு ளுகுவ துண்டோ பிறிதினோய்**
**தந்நோய்போற் போற்ருக் கடை'**

எனக் குறிப்பாகப் புலப்படுத்தியமை காணலாம்.

உடலுணர்வைக் கடந்து உடலை ஒரு கருவி மாத்திரமாக—ஆன்மாவின் ஒரு சிறு புற வடிவமாக—மட்டுமே கண்டு வாழப் பயிற்சி பெற வேண்டும். இது முழு வாழ்விற்கு முதல் அடிப்படை.

அஞ்ஞானத்திற்கு இடந்தாராமல் மனத்தைக் கடந்து சென்று அதனையும் ஒரு கருவியாகப் பயன் படுத்திக்கொள்ள வேண்டும்; அதனை ஆன்மாவின் ஒரு புற வடிவமாகக் கருதித் தன்னுட்சிக்குள் வைத்துக் கொள்ள வேண்டும்; இது இரண்டாவது அடிப்படை.

நம் ஆன்மாவும் உயிரும் ஒன்றே என்று எண்ணுமல், ஆன்மாவின் வாயிலாகச் சித்துப் பொருளின் எல்லையிலே வாழ்வதால் உயிரைக் கடந்து அதையடக்கி யாளவேண்டும்; அதை ஆன்மாவின் ஒரு கருவியாகப் பயன்படுத்த வேண்டும்; இது மூன்ருவது அடிப்படை என விளம்புகிருர் அரவிந்தர்.

இப்பேர்ப்பட்ட சாதனை நிகழ்த்த வேண்டுமென்ருல் சீவனில் முழுமை பெறுதல், உணர்வில் முழுமை பெறுதல், சக்தியில் முழுமை பெறுதல், ஆனந்தத்தில் முழுமை பெறுதல் முதலியவற்றிலெல்லாம் ஓர் ஒருங் கிணைப்பினைக் கொண்டு வாழ்தல்வேண்டும். அஃதாவது வாழ்வனைத்தையும் ஒரு யோகமாகவே கொண்டு செலுத்த வேண்டும். அஃது எப்படி? இதனையும் அரவிந்தர் விளக்குகிருர்.

நம் வாழ்வு முழுதுமே உணர்ந்து புரிகின்ற வேள்வி யாக்க வேண்டும். ஒவ்வொரு நொடிப்பொழுதும் நம் சீவனின் ஒவ்வொரு இயக்கமும் நித்தியனுகிய பரம் பொருளுக்காகவே இடையருமல் பக்தியுடன் வழங்க வேண்டும். நம் எல்லாச் செயல்களும்—எளிய சிறு செயல்களுங்கூட — தெய்வார்ப்பணமாக அமைதல் வேண்டும்.

Koviloor Digital Library



எதைக் கொடுத்தாலுஞ்சரி—எங்குக் கொடுத்தாலுஞ் சரி—யாருக்குக் கொடுத்தாலுஞ் சரி, எல்லா உயிரினங்களுடேயும் கோயில் கொண்டுள்ள ஒரே இறைவனுக்கே கொடுக்கிறோம் என்ற உணர்வு மேலோங்கி நிற்க வேண்டும்.

நாம் உண்ணும்போதுகூட நம்முள் குடி கொண்டிருக்கின்ற நித்தியப் பரம்பொருளுக்கே கொடுப்பதாக உணர வேண்டும்; அந்த நிலையில் அஃது ஓர் ஆலயத்திலே படைக்கும் படையல் பொருளாக ஆக வேண்டும். நம் மன நிறைவிற்காகவோ உடல் தேவைக்காகவோ உட்கொள்வதாகக்கூட நினைத்தல் தகாது.

எந்தப் பெருமுயற்சியானாலும் எந்தத் தவவொழுக்கமானாலும், எந்தப் பெருந்தன்மையான செயலானாலும் சரி, அது நமக்காகவோ பிறருக்காகவோ செய்தாலுஞ் சரி, விருப்பு வெறுப்பின்றிக் கர்ம வேள்வியாகச் செய்தல் வேண்டும்; எல்லாம் இறைவனுக்கே என்ற நாட்டத்துடன் இருத்தல் வேண்டும்.

பகவத்கீதையை நன்கு ஆராய்ந்தவராதலின், அரவிந்தர் நம் செயல்களையும் அவற்றின் பயன்களையும் இறைவனது திருக்கைகளிலேயே ஒப்படைத்து விட வேண்டும். காரணம், எல்லாம் அவனுடைய சக்தியிலேயே—திருவருளாலேயே—நடைபெறுகின்றன. அவனுக்காகவே இயற்கையன்னையும் நம் உழைப்பையும் ஆர்வத்தையும் நம்மிடமிருந்து பெற்று அவனுடைய பலிபீடத்திலே வைத்துப் படையலிடுகிறாள். நம் உயிர்ப்பும் நடையும் இதயத்துடிப்புங்கூட அகண்ட விசுவவெளியின் தாளகதியாகவே உணரப்பட வேண்டுமென்று கூறுகின்றார்.

ஆக, அரவிந்த அண்ணலார் தம் சிந்தனைச் செழுமையால் உலக மக்களையே அருட்சக்தியின் அரவணைப்பிற்குப் பக்குவப்படுத்தி ஆளாக்குகிறார்; பிறவாநெறிக்கு வழி காட்டுகிறார். வாழிய அரவிந்தர் செந்நெறி! வாழிய சான்றோர்களின் அருள்வாக்கு! வாழிய உலகெலாம்!

Koviloor Digital Library

# மணிவாசகர் நூலகத்தின்

## சிறந்த வெளியீடுகள்

| | |
|---|---|
| | ரூ.பை. |
| **டாக்டர். வ. சுப. மாணிக்கம் டி. லிட்.** | |
| கம்பர் (தமிழக அரசின் பரிசு பெற்றது) | 5-00 |
| சிந்தனைக் களங்கள் | 16-00 |
| இலக்கிய விளக்கம் | 5-00 |
| ஒப்பியல் நோக்கு | 6-00 |
| தொல்காப்பியப் புதுமை | 7-00 |
| **டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை டி. லிட்.** | |
| தமிழகப் பெண்மணிகள் | 3-00 |
| சிலம்பின் கதை அமைப்பு | 3-00 |
| **டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்** | |
| தமிழ் பயிற்றும் முறை | 37-50 |
| **டாக்டர் இரா. சாரங்கபாணி** | |
| பரிபாடல் திறன் | 9-00 |
| **டாக்டர் மெ. சுந்தரம்** | |
| நாட்டுப்புற இயல் - தாலாட்டு | 22-00 |
| **டாக்டர் சோ. ந. கந்தசாமி** | |
| தமிழும் தத்துவமும் | 15-00 |
| திருக்குறள் கூறும் உறுதிப்பொருள் | 8-50 |

Koviloor Digital Library

| | ரூ. பை. |
|---|---|
| **டாக்டர் ந. வீ. செயராமன்** | |
| பாட்டியல் திறனுய்வு | 3-50 |
| பள்ளு இலக்கியம் | 9-50 |
| சதக இலக்கியம் | 6-50 |
| சிற்றிலக்கியச் செல்வம் | 11–50 |
| சிற்றிலக்கிய அகராதி | 10-00 |
| **டாக்டர் சு. சண்முக சுந்தரம்** | |
| தமிழில் நாட்டுப்புறப் பாடல்கள் | 13-50 |
| நாட்டுப்புற இலக்கிய வரலாறு | 10-00 |
| நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு | 7-00 |
| **டாக்டர் சு. சக்திவேல்** | |
| பழங்குடி மக்கள் | 10-00 |
| மொழியியல் கலைச்சொல் அகராதி | 5-00 |
| மானிடவியல் கலைச்சொல் அகராதி | 6-00 |
| **டாக்டர் இரா. மோகன்** | |
| டாக்டர் மு. வ. வின் நாவல்கள் | 9-50 |
| **டாக்டர் மா. சு. திருமலை** | |
| தமிழ் கற்பித்தல் | 15-00 |
| **கி. வா. ஜகந்நாதன்** | |
| கவி பாடலாம் | 6-50 |
| வீரர் உலகம் (பரிசு பெற்றது) | 6-00 |
| **எஸ். ஆர். மார்க்கபந்து சர்மா** | |
| சிலம்பின் தனித்தன்மை | 14-00 |
| சிலம்பின் கற்பனை | 15-00 |
| சிவஞான போதம் | 6-50 |
| **மு. சண்முகம் பிள்ளை** | |
| சிற்றிலக்கிய வளர்ச்சி | 10-00 |
| **மு. வை. அரவிந்தன் எம். ஓ. எல்.** | |
| உரையாசிரியர்கள் | 30-00 |
| **பி. எஸ். ராமையா** | |
| மணிக்கொடி காலம் | 18-00 |
| **வல்லிக்கண்ணன்** | |
| பாரதிக்குப் பின் தமிழ் உரைநடை | 11-50 |

Koviloor Digital Library


| | ரூ. பை. |
|---|---|
| **மு. இராகவையங்கார்** | |
| ஆழ்வார்கள் கால நிலை | 16-00 |
| **வெ. சாமிநாத சர்மா** | |
| சமுதாய சிற்பிகள் | 6-00 |
| **ஜி. சுப்பிரமணிய பிள்ளை எம்.ஏ. பி.எல்.** | |
| கம்பர் விருந்து | 6-00 |
| தமிழ் உள்ளம் | 5-00 |
| **தி. வை. சதாசிவப் பண்டாரத்தார்** | |
| இலக்கியமும் கல்வெட்டுக்களும் | 5-00 |
| கல்வெட்டுக்கள் கூறும் உண்மைகள் | 4-00 |
| **ப. கோதண்டராமன் எம்.ஏ. பி.எல்** | |
| இலக்கியமும் திறனாய்வும் | 8-50 |
| **வி. எஸ். வி. இராகவன்** | |
| தாலமி | 20-00 |
| மெகஸ்தனிஸ் | 16-00 |
| பாஹியான் | 12-00 |
| மார்க்கோபோலோ | 7-00 |
| **அ. லெ. நடராசன்** | |
| மாவீரன் நெப்போலியன் | 12-50 |
| **பி. எல். ராசேந்திரன்** | |
| வெற்றி வீரர் வின்சென்ட் சர்ச்சில் | 6-00 |
| **சோமலெ** | |
| இமயம் முதல் குமரிவரை | 7-00 |
| **மது. ச. விமலானந்தம் எம்.ஏ.** | |
| சிலப்பதிகாரத் திறனாய்வு | 5-00 |
| **முல்லை முத்தையா** | |
| தசாவதாரக் கதைகள் | 4-25 |
| பாரதிதாசன் அறுசுவை விருந்து | 3-75 |
| தமிழர் வாழ்வியல் | 5-00 |
| உலகப் பெரியார் புத்தர் | 5-00 |
| டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் | 3-50 |
| **வ. பெருமாள்** | |
| இலக்கியமும் வாழ்க்கையும் | 4-00 |

KOVILOOR MADALAYAM
Koviloor Digital Library
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: -436846)


| | ரூ. பை. |
|---|---|
| **த. மணிமாறன் எம். ஏ.** | |
| இலக்கியக் கலை | 4-00 |
| **மு. அண்ணுமலை எம்.ஏ. எம்.லிட்.** | |
| வள்ளுவர் தனித்தன்மை | 7-75 |
| **செ. வைத்தியலிங்கம் எம்.ஏ , எம் லிட்.** | |
| அருள்வாக்கு | 3-75 |
| **மு. சதாசிவம் எம்.ஏ., எம்.லிட்.** | |
| எதிர்ப்பத அகராதி | 9-50 |
| **வெ. கிருட்டினசாமி எம்.ஏ., எம்.பில்.** | |
| குழந்தைக் கவிஞரின் இலக்கியத் திறன் | 7-50 |
| **அரங்க சீனிவாசன்** | |
| கம்பன் திருப்புகழ் | 3-50 |
| **ச. மெய்யப்பன் எம்.ஏ.** | |
| கபிலர் | 4-00 |
| தாகூர் | 7-75 |
| புதிய ஆத்தி சூடிகள்—12. | 2-00 |
| **சு. சமுத்திரம்** | |
| உறவுக்கு அப்பால் | 5-00 |
| ஒரு சத்தியத்தின் அழுகை | 6-00 |
| காகித உறவு | 5-75 |
| ஊருக்குள் ஒரு புரட்சி | 9-00 |
| வளர்ப்பு மகள் | 7-00 |
| உயரத்தின் தாழ்வுகள் | 7-00 |
| **எம். வி. வெங்கட்ராம்** | |
| ஒரு பெண் போராடுகிறுள் | 20-00 |
| அரும்பு | 20-00 |
| வேள்வித் தீ ! | 6-00 |
| நித்திய கன்னி | 6-00 |
| **பு. ஜீவகன்** | |
| ஓர் ஆத்மாவின் அந்தரங்கம் | 8-50 |
| **அகர முதல்வன்** | |
| ஒரு அக்ரஹாரம் ஒளியிழக்கிறது | 4-25 |